# உதயன்

விலை ரூ.20
பக்கங்கள் 28

சுடர் 30 கதிர் 076 வள்ளுவர் ஆண்டு 2046 தை 27 செவ்வாய்க்கிழமை 10.02.2015


10 FEB 2015

## இனப்படுகொலை பிரேரணை இன்று

### விசேட அறிக்கையும் சமர்ப்பித்து ஆங்கிலத்தில் உரையாற்றுவார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10
"தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையில் இருந்து பாதுகாக்கச் சர்வதேச பொறிமுறை ஏற்படுத்துமாறு வேண்டுகோள்" - என்ற தலைப்பில் மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தால் கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
இந்தப் பிரேரணையுடன் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் விசேட அறிக்கையும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு முன்மொழியப்படவுள்ளது. விரிவு பக்.24




## இடமாற்றம் இல்லையேல் போராட்டம்

வன்னியில் 5 வருடங்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வன்னி வலயங்களால் விடுவிக்கப்பட்டபோதும் இன்னும் யாழ். மாவட்டத்துக்கு மீள உள்வாங்கப்படவில்லை. எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என்றால் எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். பக்.21



பெற்றோர் தினமாக மாறும் காதலர் தினம்

பக்கம் 12

## சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பிரச்சினை அவையில் இன்று விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 10
சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீருடன் பரவியுள்ள கழிவு ஒயில் பிரச்சினை தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான அறிக்கை, வடக்கு மாகாண விவசாய, சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் இன்று அவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
அதனால் வடக்கு மாகாணசபையில் இன்று எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்ட ஏனைய பிரேரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பக்.24



## அரசியல் கைதிகள் விடுவிப்புக்கு மூவர் குழு

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

யாழ்ப்பாணம், பெப்ரவரி 10
தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.
"அந்தக் குழுவினர் விரைவில் அறிக்கையிடுவார்கள். அதன் அடிப்படையில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்." என்றும் அவர் தெரிவித்தார். விரிவு பக்.24



கண்ணீரில் நனைந்த யாழ்.நகர் பக்.27

## கிழக்குக்கும் செல்வார் மோடி

யாழ்ப்பாணம், பெப். 10
இலங்கைக்கு வரவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கு வருவதுடன், கிழக்கு மாகாணத்துக்கும் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலைக்கே அவர் செல்வார் என்றும் குறிப்பிடப்படுகின்றது. விரிவு பக்.24





காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரியும், வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள அரசியல்வாதிகள் நாடு திரும்ப இடமளிக்கவேண்டும் என்று கோரியும் நேற்றுக் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிலை சோசலிசக் கட்சி ஏற்பாடு செய்திருந்தது. (ற-4)

## ஆயிரம் லீற்றர் ரூ.72

யாழ்ப்பாணம், பெப். 10
ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் 72 ரூபா வீதம் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வலி.வடக்குப் பிரதேச சபைக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. விரிவு பக்.24

## சிறை சென்றார் மஹிந்த!



கொழும்பு, பெப். 10
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்றுத் திங்கள் கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றார். பக்.24

**இலங்கை விடயத்தில் அமெரிக்கா இரட்டை வேடம்**

பக்கம் 16

## பிரிவினைவாதம் இன்னமும் வெளிநாடுகளில் உண்டாம்

### அமைதிக்கு ஆபத்து என்கின்றனர் மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகள்

கொழும்பு, பெப்,10
வெளிநாடுகளில் இன்னமும் பிரிவினைவாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அது அமைதிக்கு ஆபத்தானது. அதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்கு - கிழக்கின் பாதுகாப்புத் தொடர்பில் சமரசத்துக்கு இடமளிக்கக் கூடாது - இவ்வாறு மல்வத்தை - அஸ்கிரிய பீடாதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர். விரிவு பக்.24

## "வீடுகளற்ற மீனவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படும்"

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் கடற்றொழில் அமைச்சர்

யாழ்ப்பாணம்.பெப்.10
காணியுள்ள வீடுகளற்ற மீனவர் குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா. விரிவு பக்.24



மேகமூட்டமாகக் காணப்படும். சிறிதளவு மழை பெய்யலாம்.
கூ. வெப்பநிலை 28°c  கு. வெப்பநிலை 24°c

# 100 நாள்களில் அபிவிருத்தி

## யாழ்ப்பாணத்தில் கூறினார் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

யாழ்ப்பர்ணம், பெப்.10

நாட்டின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு இலங்கையின் புதிய அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் கடந்த கால அரசு 10 ஆண்டுகள் செய்த அபிவிருத்தித் திட்டத்தை 100 நாள்களில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது, என்று உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஜோசேப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.



யாழ்.பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா

யாழ்.பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் பழைய பூங்கா வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



மருதங்கேணி பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா

இலங்கைப்பிரஜைகள் என்ற ரீதியில் அல்லாது கடந்த காலங்களில் இனம், மதம், அரசு என்ற ரீதியில் எமக்கிடையே பல்வேறு பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் தற்போது தமிழர்கள் உட்பட அனைத்து மக்களின் ஒத்துழைப்பினாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனூடாக எங்கள் அனைவருக் கும் புதியதொரு மாற்றம் கிடைக்கப் பெற்றுள்ளது.

புதிய அரசியல் மாற்றத்தால் கொண்டு வரப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தால் மக்களுக்கு நன்மை கிடைக்கப் பெற்றுள்ளது. சமுர்த்திப் பயனாளிகள் கொடுப்பனவு, அரச உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருள்கள் விலைக் குறைப்பு எனப் பல்வேறு திட்டங்கள் 100 நாள் வேலைத் திட்டத்தின் ஊடாகப் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இனமத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் ஒரே திட்டமாக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. மக்கள் எதிர்பார்க்காத பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த கால அரசு 10 ஆண்டுகளில் செய்யக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை 100 நாள்களில் புதிய அரசால் செய்ய முடியும். இதே வேளை, மக்கள் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் மக்களுடைய தேவைகளை அலுவலகங்களுக்கு வரும் போது பொறுப்புடன் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். மக்கள் பணிகளைத் தவிர்க்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் எமது அமைச்சிடம் தெரிவிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், அமைச்சின் செயலாளர் பொரலெஸ்ஸா, வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் உட்பட அமைச்சின் அதிகாரிகளும், யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடமும் நேற்றுச் சம்பிரதாய தாய பூர்வமாக அமைச்சரால் நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய அமைச்சர், இன மத பேதமின்றி எமது அரசின் நூறு நாள் வேலைத்திட்டத்திற்கு தோள் கொடுக்கவேண்டும். எமது அரசு மக்களுக்கு அளித்த அனைத்து விதமான வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் என்று கூறினார்.

(த-14-20-109)

# வலி. மேற்குப் பிரதேச சபையின் புதிய நூலகம் மக்கள் பாவனைக்கு




சங்கானை, பெப். 10

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினால் சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ. சரவணபவன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறிதரன், அ. விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தில் இருந்து அழைத்துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் மாவை சேனாதிராசா சரஸ்வதியின் உருவச்சிலையை திரைநீக்கம் செய்ததுடன். 5.2 மில்லியன் ரூபா சபை நிதியில் கட்டப்பட்ட கட்டத்தை நாடாவெட்டி திறந்துவைத்தார். (த)

# பெரும்பான்மைக் கட்சிகளுக்கு தமிழர் பகுதியில் இடமில்லை

### பொது நூலகத் திறப்பு விழாவில் சரவணபவன் எம்.பி

யாழ்ப்பாணம், பெப். 10

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் ஒரு சிக்கலான நிலை தோன்றியுள்ளது. நாங்கள் நாட்டில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகவே பெரும்பான்மை கட்சியுடன் சேர வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தோம். ஆனால் பெரும்பான்மைக்கட்சிகளை நாம் இங்கே வளர்க்க முற்படக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினால் சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது நூலகக் கட்டடத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் தொடர்ந்தும் கொலை, கொள்ளை மற்றும் தமிழ் மக்களை 100 வீதம் புறக்கணிப்புக்குள் தள்ளிய ஒருவர் நாட்டின் தலைமையில் இருக்கக் கூடாது என்பதற்காக நாங்கள் இந்த முடிவை எடுத்திருந்தோம்.

இதற்காக நாங்கள் அவர்களுடன் இணைந்து போகப் போகின்றோம் என்று அர்த்தமில்லை. டக்ளஸ் தேவானந்தாவை இன்றும் நாங்கள் அங்கீகரிப்பதாக இல்லை. அவர் அரசுடன் சேர்ந்து மக்களுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்க முடியுமோ அவற்றைக் கொடுத்து விட்டு தற்போது ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்.

தமிழர் தேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே நின்று நிலைக்கவேண்டும் என்பதில் அனைவரும் இம்முறை தேர்தலில் நிதானமாக இருக்கவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியை நாம் வரவேற்கக் கூடாது. அவ்வாறு வரவேற்றால் தற்போது இழந்து கொண்டிருப்பவை அனைத்தும் இழக்கப்படும்.

எமக்குள் தமிழ் கட்சிகள் இருக்கட்டும். ஆனால் பெரும்பான்மைக் கட்சிகளை இங்கே வளர்க்க முற்படக் கூடாது.

மேலும் இன்று இங்கு அமைக்கப்பட்ட நூலகம் ஓர் அருமையான திட்டம். இதனை அமைத்த வலி. மேற்கு பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்தக் கோரியிருந்தனர். அதனை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் அதாவுல்லாவிடம் பேசினோம். மீண்டும் ஒரு தட்வை பேசுவோம். இந்தப் பிரதேச சபை நகர சபை ஆக்கப்படும் என நினைக்கின்றேன்.

அத்துடன் 100 நாள் திட்டத்தில் இதனையும் கொண்டு வரமுடிமா என்றும் பேசி தீர்மானிக்கலாம். மேலும் பிரதேச சபைகளுக்கு வாகனங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதில் சிலருக்கு இரண்டு வாகனங்களும், சிலருக்கு மூன்று வாகனங்களும் கொடுக்கின்றார்கள்.

இன்னும் 231 வாகனங்கள் பிரதேச சபைகளுக்குக் கொடுக்கப்படும் என அமைச்சர் கரு ஜெயசூரிய கூறியிருந்தார். அதற்கமைய அனைவருக்கும் கிடைக்கும் என நம்புகின்றோம்-என்றார். (த)

# கேரளக் கஞ்சா கடத்தியோருக்கு வலை விரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 10

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் பாழடைந்த வீட்டுக்குள் 20 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழு கஞ்சாப் பொதிகளை மீட்டிருந்தது. தும்பளையில் பாழடைந்த வீடு ஒன்றுக்குள்ளேயே இருந்து இவற்றைக் கைப்பற்றியதாகவும், இவை இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கஞ்சாக் கடத்தல் தொடர்பில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ள பருத்தித்துறைப் பொலிஸார் இதனுடன் தொடர்புடையோரை தேடிக் கைது செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)



















# ஆஸியை அடித்து நொருக்குவேன்



நான்காவது முறையாக உலகக் கிண்ணத்தை வெல்ல நினைக்கும் ஆஸி.யின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டுவோம். இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் தலைவர் டீ.வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணி ஒருநாள் ஆட்டத்தில் முதல்தர அணி என்பதை மறுக்க முடியாது. ஏற்கனவே பலம்பெற்ற அணியாக இருக்கும் அவர்கள் சொந்த மண்ணில் ஆடுகின்றனர் இதனால் அனுகூலங்கள் அதிகம்.

ஆனால், இந்த உலகக்கிண்ண தொடரை வெல்லும் அணியில் எங்கள் அணியும் உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

உலகில் தலைசிறந்த அணி தென்னாபிரிக்க அணி என்ற பெயரை மகிழ்ச்சியுடன் அணுகுகிறோம். உலகின் சிறந்த அணி என்ற அந்தஸ்தை பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த உலகக்கிண்ண தொடரில் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பு, தவற விடமாட்டோம் என்று நம்புகிறோம்.

ஆஸ்திரேலியா தவிர நியூசிலாந்து ஒரு அபாயகரமான அணி. பிரண்டன் மக்கலம் ஒரு அருமையான தலைவர். தனிப்பட்ட ரீதியில் நான் அவரின் ரசிகன். அணியை பிரமாதமாக வழிநடத்திச் செல்கிறார், என்றார். (5-

# முகநூலில் என்ன பேசுகின்றார்கள்?

Uthayan Print

முடிவுக்கு வருகின்றது இந்திய அணியின் ஆட்டம். ஒன்பதாவது இலக்கும் வீழ்த்தப்பட்டது

Australia 371 (48.2 ov)

India 258/9 (42.5 ov)

India require another 114 runs with 1 wicket and 43 balls remaining...

See More

Like · Comment · Share

கனகலிங்கம் வைகுந்தன், Thulasikaran Thulasi, Sutha Tom Ajinkya and 30 others like this.

Vimal Nathan i likes this

Like

Jeyarajasingam Christy Jeyaseelan சொந்த ஊரிலே போட்டு வெளுத்துவாங்குவதும், வெளியூரிலே சரமாரியாக வாங்கிக்கட்டிக் தொலைப்பதும் இந்தியக் கிறிக்கெற் அணிக்கு வாடிக்கையாகவே ஆகிவிட்டது!!! என்றைக்குத்தான், இந்த"வேடிக்கை விளையாட்டுவிதி"மாறுமோ யாரறிவார்??

Like · 1

இந்திய – ஆஸ்திரேலிய பயிற்சி ஆட்டம் தொடரில் உதயனின் உத்தியோகபூர்வ முகநூலில் பதிவு செய்யப்பட்ட வாசகரின் விமர்சனம்.



# என்ன செய்வது? அழுகின்றார் டோனி

உலகக் கிண்ண தொடர் நெருங்கும் நேரத்தில் இந்திய அணியின் மோசமான செயற்பாடு கவலையளிப்பதாக இந்திய அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

உலகக் கிண்ணப் பயிற்சி ஆட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலிய அணியை எதிர்கொண்டது. இதில் பந்து வீச்சு, துடுப்பாட்டம் என்று இரண்டிலும் சொதப்பிய இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இந்த நிலையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒரு தரப்பினர் சொதப்புவதால் ஏமாற்றமே எஞ்சியுள்ளதாக டோனி கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், துடுப்பாட்டம் சரியாகும் போது, பந்து வீச்சாளர்கள் சொதப்புகிறார்கள், பந்துவீச்சாளர்கள் நன்றாக செயல்படும் போது, துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். இது எங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சனையை சரி செய்ய வேண்டியது அவசியம். இப்போது எது முக்கியம் என்றால், உலகக்கிண்ண கிரிக்கெட்டில் தொடக்க ஆட்டத்துக்கு முன்பாக எங்களுக்கு ஆப்கானிஸ்தானுடன் மட்டுமே பயிற்சி ஆட்டம் இருக்கிறது. அதற்குள் நாங்கள் களம் காணும் சரியான பதினொருவர் அணியை அடையாளம் காண வேண்டும். இந்த பயிற்சி ஆட்டத்தில் இருந்து சில நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டோம் என்று கூறியுள்ளார். (5-ரி)

# ஷுபா



இந்திய அணித் தலைவர் டோனி தனக்கு பிறந்த பெண் குழந்தைக்கு பெர்ஷிய மொழியிலான அழகான பெயரைச் சூட்டியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன் டோனியின் மனைவி ஷாக்சிக்குப் பெண் குழந்தைப் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஷுபா என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

பெர்ஷஞீயா மொழியில் ஷுபா என்றால் அழகு என்று அர்த்தமாம்.

தற்போது உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக டோனி ஆஸ்திரேலியாவில் இருக்கிறார். டோனிக்கு குழந்தை பிறந்ததையடுத்து இந்திய கிரிக்கெட் சபை சார்பில் டோனி மற்றும் சக வீரர்களுக்கு விருந்தளிக்கப் பட்டது.அப்போது சக வீரர்களிடேயே இந்தத் தகவலை அவர் பகிர்ந்து கொண்டார். தனது மனைவி ஷாக்சிக்கு இந்த பெயர் மிகவும் பிடித்திருந்ததாகவும், அதனால் அதையே சூட்டியதாகவும் தெரிவித்துள்ளார். (5-ரி)

## இன்றைய ஆட்டங்கள்




ஆப்கானிஸ்தான் - இந்தியா
இலங்கை நேரப்படி (காலை 9.00 மணி)

அயர்லாந்து - ஸ்கொட்லாந்து
இலங்கை நேரப்படி (காலை 9.00 மணி)

## பயிற்சி ஆட்டம் 1

இலங்கை 297/7 (44.4 ov)
தெ.ஆபிரிக்கா 188/5 (24.3ov)
தெ.ஆபிரிக்கா 5 இலக்குகளால் வெற்றி

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 100(83) | கெ.அப்பொட் 3 |
| [illegible] 58(49) | டி.பார்னெல் 2 |

2 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 96(55) | [illegible] 3 |
| [illegible] 46(40) | [illegible] 1 |

## பயிற்சி ஆட்டம் 2

மே.இ.தீவுகள் 122 (39.3 ov)
இங்கிலாந்து 125/1 (22.5ov)
இங்கிலாந்து 9 இலக்குகளால் வெற்றி

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 45 (55) | [illegible] 5 |
| [illegible] 21 (23) | [illegible] 2 |

2 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] | |
| [illegible] | |

## பயிற்சி ஆட்டம் 3

நியூஸிலாந்து 157/7 (30.1 ov)
சிம்பாவே
மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 100 (80) | [illegible] 2 |
| [illegible] 11 (24) | [illegible] 2 |
| [illegible] 8 (3) | [illegible] 1 |
| [illegible] 0 (13) | [illegible] 1 |
| [illegible] 5 (11) | [illegible] 1 |

## பயிற்சி ஆட்டம் 4

பங்களாதேஷ் 243 (49.5 ov)
பாகிஸ்தான் 247 (48.1 ov)
பாகிஸ்தான் 3 இலக்குகளால் வெற்றி

1 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 83 (109) | [illegible] 5 |
| [illegible] 81 (109) | [illegible] 2 |

2 வது இன்னிங்ஸ்

| | |
|---|---|
| [illegible] 93 (90) | [illegible] 3 |
| [illegible] 39 (41) | [illegible] 2 |

மீண்டும் உலகக் கிண்ணம் கிரிக்கெட்டின் தாயகத்துக்கு திரும்பியது. 3 வருடங்களில் 7 ஆவது உலகக் கிண்ணம் இங்கிலாந்தில் தொடங்கியது. நவீன கிரிக்கெட் விதிகள் அறிமுகம்.
12 அணிகள் களத்தில். இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா, ஸ்கொட்லாந்து, பங்களாதேஷ். இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. கடந்த முறை அறிமுகப்படுத்தப்பட்ட காலிறுதி, 'சுப்பர் சிக்ஸ்' சுற்றாக மாற்றப்பட்டது. ஒவ்வொரு குழுவிலும் முதல் மூன்று இடங்கள் பெற்றுக் கொள்ளும் அணிகள் 'சுப்பர் சிக்ஸ்' தகுதி பெறும்.




# மீண்டும் ஆஸ்திரேலியா

## லீக் ஆட்டங்கள்

தொடரை நடத்திய இங்கிலாந்துடன், நடப்புச் சம்பியன் இலங்கை மோதியது. முதல் கோணல் முற்றும் கோணலாகியது இலங்கைக்கு. 204 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை. இரண்டு இலக்கை மாத்திரம் இழந்து இலக்கை எட்டிப் பிடித்தது இங்கிலாந்து. சோகத்துடன் தொடங்கியது இலங்கையின் ஆட்டம். சிம்பாப்வே, கென்யாவை மாத்திரமே லீக்கில் வென்றது இலங்கை.
இலங்கை – இந்தியா மோதல் லீக்கில் நடந்தது. கடந்த உலகக் கிண்ணத்தில் இலங்கையிடம் வாங்கிக் கட்டியதைத் திருப்பிக் கொடுத்தது இந்தியா. இலங்கையின் பந்து வீச்சை நொறுக்கித் தள்ளியது இந்தியா. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் முதல் இலக்கை முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே சரித்தது இலங்கை. அதன் பின்னர் ருத்ர தாண்டவம் தொடங்கியது.கங்குலி – டிராவிட் இணைந்து இலங்கையை புரட்டி எடுத்தனர். இரண்டாவது இலக்குக்காக 45 பந்துப் பரிமாற்றங்களில் 318 ஓட்டங்கள் பகிரப்பட்டது. சாதனை படைக்கப்பட்டது. கங்குலி 183 ஓட்டங்களையும், டிராவிட் 145 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். 6 இலக்குகள் வீழ்ந்து 373 ஓட்டங்க்ள் பெறப்பட்டது. பதிலளித்த இலங்கை 216 ஓட்டங்களுக்குள் சுருண்டது. சிம்பாப்வே லீக் தொடரில் இந்தியாவுக்கும், தென்னாபிரிக்காவுக்கும் அதிர்ச்சி கொடுத்தது. இரு அணிகளும் எதிர்ப்பின்றி சிம்பாவேயிடம் சரணடைந்தன. கத்துக்குட்டி அணியாக இறங்கிய பங்களாதேஷ், பாகிஸ்தானை வீழ்த்தியது. இந்த ஆட்டம் பலத்த சர்ச்சையை உருவாக்கியது. பாகிஸ்தான் அணி வீரர்கள் லஞ்சம் வாங்கி வேண்டுமென்று விளையாடினார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. 40 ஓட்டங்களை பங்களாதேஷுக்கு உதிரிகளாக அள்ளி வழங்கினர். 62 ஓட்டங்களால் பாகிஸ்தான் தோல்வியைத் தழுவியது.


கங்குலி
டிராவிட்

## தொடர்ந்தது கிண்ண வேட்டை

### 1996 உலகக் கிண்ணம்

அதிகூடிய ஓட்டங்கள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| ஆர்.டிராவிட் (இந்தியா) | 8 | 461 | 145 |
| எஸ்.வோச் (ஆஸி.) | 100 | 398 | 120 |
| எஸ்.கங்குலி (இந்தியா) | 7 | 379 | 183 |

அதிகூடிய இலக்குகள்

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| ஜி.அலட் (நியூஸிலாந்து) | 9 | 20 | 4/37 |
| எஸ்.வோர்ண் | 10 | 20 | 4/29 |
| ஜி.மெக்ராத் | 10 | 18 | 5/14 |


ஜெயசூரியா

## சுப்பர் சிக்ஸ்

நடப்புச் சம்பியன் இலங்கை நடையைக் கட்டியது. பாகிஸ்தான், இந்தியா, ஆஸ்திரேலியா, சிம்பாப்வே, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து நுழைந்தது. இங்கேயே சர்ச்சையான விதி உருவானது. சுப்பர் சிக்ஸ் முடிவில் நிகர ஓட்ட சராசரி, புள்ளி அடிப்படையில் அடுத்த சுற்றுக்குள் அணிகள் நுழையும் விதி பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. முதலாவது ஆட்டத்தில் ஆஸியை எதிர்கொண்ட இந்தியா தூசியாகமண்கவ்வியது. ஆஸி 282 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, இந்தியா 205 ஓட்டங்களுடன் சுருண்டது. தென்னாபிரிக்காவை எதிர்த்தது பாகிஸ்தான் இரண்டாவது ஆட்டத்தில். பாகிஸ்தானின் பந்து வீச்சு சொதப்ப தென்னாபிரிக்கா 3 இலக்குகளால் வெற்றியை தக்க வைத்தது.
தட்டுத்தடுமாறி நுழைந்த சிம்பாப்வேயை எதிர்கொண்டது நியூஸிலாந்து. ஆனாலும் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது. பரம வைரிகளான பாகிஸ்தானும் இந்தியாவும் இங்கும் மோதிக் கொண்டனர். மீண்டும் பாகிஸ்தான் 47 ஓட்டங்களால் மண் கவ்வியது. ஐந்தாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் சிம்பாப்வேயும் மோதின. ஆஸியின் அசத்தலான 303 ஓட்டங்களுக்கு, சிம்பாப்வேயினால் 259 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. மீள் எழுச்சி கொண்டது பாகிஸ்தான். சிம்பாவேயை [illegible] ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி ஈட்டியது.
இந்தியா தொடர்ந்தும் அடி வாங்கியது. நியூஸிலாந்திடம் 5 இலக்குகளால் வீழ்ந்தது. இறுதி 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் ஆஸியும் ஆபிரிக்காவும் மோதிக் கொண்டன. ஆஸி. 5 இலக்குகளால் இலகுவாக வெற்றி பெற்றது.



ஆஸி. – ஆபிரிக்க ஆட்டத்தின் இறுதிக் கணம்

## அரையிறுதி

நியூஸிலாந்தும் பாகிஸ்தானும் முதலாவது அரையிறுதிப் போர் நடத்தின. நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது. ஆரம்பத்தில் வேகமான சரிவு. மத்திய வரிசையில் அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங், றோகர் ரவுஸ், கிரிஸ் ஹரின்ஸ் 40 ஓட்டங்களைத் தொட்டனர். 7 இலக்குகள் இழந்து 241 ஓட்டங்கள் பெறப் பட்டது.

பதிலுக்கு தொடங்கிய பாகிஸ்தானுக்கு பஞ்சமில்லாத வெற்றி கிட்டியது. சயிட் அன்வர் அதிரடியான ஆரம்பத்தை வஜகதுல்லாவுடன் இணைந்து அமைத்தார். 194 ஓட்டங்களிலேயே முதலாவது இலக்கை வீழ்த்த முடிந்தது. அப்போதே பாகிஸ்தான் வெற்றி உறுதியானது. இறுதியில் 15 பந்துகள் மீதமிருக்கையில் 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இரண்டாவது தடவையாக இறுதிக்குள் நுழைந்தது.

மற்றைய அரையிறுதி ஆட்டம் பட்டையைக் கிளப்பியது. ஆஸ்திரேலியாவும் – தென்னாபிரிக்காவும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடியது ஆஸ்திரே லியா. 5 வீரர்கள் பூச்சியத்தைப் பெற்றனர். ஸ்ரீவோ – மைக்கல் பெவன் இருவரும் அரைச் சதம் கடக்க 49.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 213 ஓட்டங்கள் மாத்திரமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவும் தடு மாற்றம். கலிஸ் மாத்திரம் மத்திய வரிசையில் அரைச் சதம் கடந்தார். 8 பந்துகளில் 15 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலை. ஓர் இலக்கு மாத்திரம் கையில். குளூஸ்னர் வேடிக்கை காட்டினார். 49.3 பந்துகளில் 213 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்கா. ஓட்ட எண் ணிக்கை சமனானது. இன்னும் மூன்று பந்துகள் மீதமிருந்தது. இந்த நேரத்தில் அடித்தாட முற்பட்டார் குளூஸ்னர். அவசரப்பட்டு ஓடினார் மறுமுனையில் நின்ற அலன் டொனால்ட். சந்தர்ப்பத்தை வாய்ப்பாக் கியது ஆஸ்திரேலியா. அலன் டொனால்ட் ஆட்ட மிழக்க ஆட்டம் சமநிலையில் முடிந் தது.

ஆனாலும் துரதிர்ஷ்டம். ஓட்டநிகர சராசரியில் தென்னாபிரிக்காவை முந்தியிருந்தது ஆஸ்திரேலியா. இத னால் ஆஸிக்கு அடித்தது அதிர்ஷ்டம். நான்காவது முறையாகவும் இறுதிக் குச் சென்றது.



### கொசுறுத் தகவல்

- உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் நடந்து கொண்டிருந்தது. இந்திய அணியின் மாஸ்டர் பட்ஸ்மன் சச்சினின் தந்தையார் இந்தியாவில் காலமானார். இதனால் சச்சின் இந்தத் தொடரில் பெரிதாக சாதிக்கவில்லை.
- உலகக் கிண்ண வரலாற்றில் தென்னாபிரிக்காவின் குளூஸ்னர் மிகச் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக ஜொலித்தார். நடந்த தொடரின் அதிரடியாக ஆடிய இவர் 9 ஆட்டங்களில் 281 ஓட்டங்கள் (சராசரி 140.50) எடுத்தார். இது தவிர 17 இலக்குகளையும் சாய்த்தார். இறுதிக்கு ஆபிரிக்கா நுழையாவிட்டாலும் இவர் தொடர் நாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

உதயன் உலகக் கிண்ண கொண்டாட்டம், உங்களுடன். எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. நீங்கள் பார்த்த உலகக் கிண்ண ஆட்டம் தொடர், நடப்பு உலகக் கிண்ண தொடர்பிலான விமர்சனம்.....

நீங்களே

தினம் ஒரு பரிசுப் போட்டி

மாபெரும் இறுதிப் போட்டி

அரையிறுதிப் போட்டி

'உலகக் கிண்ண வாசகர் கணை' உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

cricket@uthayan.com
www.facebook.com/uthayan.print

கேள்விக் கூப்பன்களை எதிர்பாருங்கள்....

லட்சங்களில் பரிசுகளை வெல்லுங்கள்!!!

உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம்

பரிசுகளை தினந்தோறும் அள்ள

நீங்கள் தயாரா?



வெற்றித் தருணத்தில் ஆஸ்திரேலியா

## இறுதியாட்டம்

பாகிஸ்தான் – ஆஸ்திரேலிய அணிகள் மோதிக் கொண்டன. இறுதி ஆட்டம் என்றாலே பரபரப்பு இருக்கும். ஆனாலும் இந்த இறுதி ஆட்டம் ஏனோதானோ என்று முடிந்து விட்டது. பாகிஸ்தானின் படுசொதப்பலான துடுப்பாட்டம் எல்லாவற்றையும் மாற்றியமைத்து விட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 39 பந்துப் பரிமாற்றங்களில் 132 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகூடிய ஓட்டமாக 25 உதிரிகள் கிடைக்கப் பெற்றன. இலகுவாக இலக்கை விரட்டியது ஆஸி. கில்கிறிஸ்ட் அதிரடி வேட்டை நடத்த 20.1 பந்துப் பரிமாற்றத்தில் வெற்றி கிடைத்தது. பறிகொடுத்தது வெறும் இரண்டு இலக்குகள்தான். ஆஸிக்கு இரண்டாவது தடவையாக கிண்ணம் கிடைத்தது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** முயற்சிகளில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும் அனைத்துச் செயல்களும் வெற்றி பெறும். பெரிய முதலீடுகளில் தொழிலை விரிவுபடுத்த நினைக்க வேண்டாம். இருப்பதை நேர்த்தியாகச் செய்து முடிப்பதே சிறப்பு.

**இடபம்:** முக்கிய பொறுப்புக்கள் கிடைக்கும். பிரச்சினைகளில் வாயைக் கொடுத்து மாட்டிக்கொள்ள வேண்டாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** நண்பர்களின் ஆதரவு உங்கள் மன வருத்தத்தைக் குறைக்கும் மருந்தாக அமையும். வரவேற்புகள் குறைந்தாலும் நிலைமை போகப் போக மாறிவிடும். உற்றார், உறவினர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும்.

**கடகம்:** நண்பர்களுடன் இருந்த பிரச்சினைகள் தீர்வுக்கு வருவதால் அலுவலகச் சூழல்களில் இருந்த இறுக்கம் மறைந்து சகஜ நிலை உருவாகும்.

**சிங்கம்:** உங்களின் தகுதிக்கேற்ப புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் நிதானமாகவும், விட்டுக்கொடுத்தும் நடந்துகொண்டு வெற்றி பெறுவீர்கள். நேர்வழியிலேயே எதையும் சாதித்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். எல்லாவற்றிலும் முன்னேற்றம் காணப்படும்.

**துலாம்:** தொழிலில் புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தவர்கள் உங்களுக்கு பாதுகாப்பாக இருப்பதால் மறைமுகமான போட்டிகளால் பாதிப்புக்கள் ஏற்படாது.

**விருச்சிகம்:** உத்தியோகத்தர்கள் விரும்பிய இட மாற்றங்களைப் பெறுவீர்கள். உங்கள் வேலைகள் அனைத்தும் திட்டமிட்டபடியே குறித்த காலத்துக்குள் முடிவடையும். உங்களின் வேலைகளில் தெளிந்த மனநிலையுடன் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவு நிலை உண்டாகும். சக ஊழியர்களின் குறைகளை முன்னின்று தீர்த்து வைப்பீர்கள். மனச் சோர்வு நீங்கி, எதையும் சாதிக்கும் அளவுக்கு தன்னம்பிக்கையுடன் திகழ்வீர்கள்.

**மகரம்:** பொறுப்புடனும், கவனத்துடனும் செயற்படுவீர்கள். மேலிடத்தின் கருணைப் பார்வை உங்களுக்கு உந்து சக்தியாக அமையும். பிறருக்கு வாக்குக் கொடுக்கும்போது நன்றாக யோசிக்கவும்.

**கும்பம்:** உங்களின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டுகளைப் பெறுவீர்கள். புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் கௌரவத்தை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

**மீனம்:** மனதில் இருந்த குழப்பங்கள் விலகி தெளிவான சிந்தனைகள் குடிகொள்ளும். வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடைகள் தீர்ந்து, மீண்டும் வேலைகள் தொடங்கும். வங்கிகளிடமிருந்து எதிர்பார்த்த கடன் கிடைக்கும்.

எதிர்த்துச் சண்டை
யிடுவதற்கு அதிக
புத்திசாலித்தனம்
தேவையில்லை,
புரிந்துகொண்டு விட்டுக்
கொடுப்பதற்குத்தான்
அதிக புத்திசாலித்தனம்
தேவைப்படுகிறது







# பிரபல நகைச்சுவை நடிகர் செல்லத்துரை காலமானார்

பிரபல நகைச்சுவை நடிகர் செல்லத்துரை (வயது-74) சென்னையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவர், 'தூறல் நின்னு போச்சு' படத்தில் அறிமுகமானார். அதற்குப் பிறகு 350 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

வடிவேலுவுடன் இணைந்து அதிகளவான படங்களில் நகைச்சுவை நடிகனாக நடித்துள்ளார். இவர்களது நகைச்சுவை வசனங்கள் இப்போதும் மக்களைச் சிரிக்க வைக்கும்.

கடந்த சில மாதங்களாக, சிறுநீரகப் பிரச்சினை காரணமாக சிகிச்சைப் பெற்று வந்த இவர், 3 நாள்களுக்கு முன் உயர் இரத்த அழுத்தம் காரணமாக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.







# ரிலாக்ஸா வாசியுங்க...

ஒரு கல்லூரியில் பொருளாதாரம் சம்பந்தமான பாடம் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு மாணவனை எழுப்பி கேள்வி கேட்கிறார் பேராசிரியர்.

பேராசிரியர்: அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய், லீற்றருக்கு



எத்தனை டொலர் கொடுத்து வாங்கப்படுகிறது?

மாணவன் : தெரியவில்லை சேர்...

**பேராசிரியர்:** வெளிநாட்டு வியாபாரம் தெரியாமல் எதுக்குடா நீயெல்லாம் இங்கே வாறாய்.!

மாணவன் : சேர் உங்ககிட்ட நான் ஒன்று கேக்கவா?

**பேராசிரியர்:** என்ன,கேளு..

**மாணவன்:** வையின் ஷாப்பில கூலிங் இல்லாத 'கிங் பிஷர் பீர்' எவ்வளவுக்கு விற்கப்படுகிறது?

**பேராசிரியர்:** எனக்குத் தெரியாது.!

**மாணவன்:** உள்நாட்டு வியாபாரம் தெரியாம எதுக்கு சேர் நீங்க இங்க வாறீங்க.

# சமந்தா ரெடி !

ஸ்ருதிஹாசன், சமந்தா சரிக்கு சரியாக போட்டியில் குதித்திருந்தாலும் அவர்களுக்கு வரும் பட வாய்ப்புக்கள் என்னவோ மந்தமாகி உள்ளன. இருவரும் விளம்பர படங்களில் நடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். நகை கடை விளம்பரத்தில் ஸ்ருதி நடித்தால் செருப்பு கடை விளம்பரத்தில் சமந்தா நடிக்கிறார். விரைவில் உள்ளாடை விளம்பரம் ஒன்றில் நடிக்க உள்ளார் சமந்தா.

ஏற்கனவே ஆணுறை விளம்பரத்தில் நடிக்க உள்ளதாக காஜல் பற்றி பரபரப்பான தகவல் வெளியானது. இது திரையுலகினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உள்ளாடை விளம்பரத்தில் நடித்தால் அதுவும் இதுபோல் நெருக்கடியை ஏற்படுத்துமா?, என்று தோழிகளிடம் சமந்தா தயக்கத்துடன் கேட்டார்.

அதை பொருட்படுத்த வேண்டாம், என தோழிகள் கூறியதாகத் தெரிகிறது.

மேலும் உள்ளாடை விளம்பரத்தில் நடிக்க கோடிகளில் சம்பளம் தருவதாகக் கூறப்படுகிறதாம்.



வலிய வரும் பணத்தை ஏன் நழுவவிட வேண்டும் என்று சமந்தாவும் நடிக்க ஒப்புக்கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

என்ன கொடுமை சார் !

# துப்பாக்கி

3 வயதுச் சிறுவனிடமிருந்த கைத்துப்பாக்கியொன்று தற்செயலாக வெடித்ததில், சிறுவனின் தந்தை மற்றும் கர்ப்பமாக இருந்த தாயை குண்டு துளைத்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள நியூமெக்ஸிக்கோ மாநிலத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. குறித்த தம்பதிகள் அவர்களுடைய 3 வயது மகன் மற்றும் 2 வயது மகளுடன் வசிக்கின்றனர்.

இதன்போது, சிறுவன் தனது தாயின் கைப்பையில் இருந்த துப்பாக்கியை எடுத்து விளையாடியுள்ளான். தற்செயலாக துப்பாக்கி வெடித்ததில் சிறுவனின் தந்தையின் இடுப்பில் பாய்ந்த குண்டு அவரின் உடலை துளைத்து அருகில் இருந்த கர்ப்பிணியான அவரின் மனைவியின் வலது தோற்பட்டையிலும் பாய்ந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, சிறுவனின் பெற்றோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். குழந்தையின் தந்தை சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதுடன் சிறுவனின் தாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறு துப்பாக்கியை வைத்து விளையாடும் சிறுவர்கள், பிறரை சுடும் சம்பவம் அமெரிக்காவில் அதிகரித்து வருவதாகவும் பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# மக்களின் பாதுகாப்புக்காக அமைத்த இராணுவ முகாம்கள் அகற்றப்படா

## திருமலைக்கு பயணம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



மூதூர், பெப்.10

பொதுமக்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நாங்கள் தீர்மானிக்கவில்லை.

இராணுவத்தை குறைக்கும் தேவைப்பாடும் எமக்கு தற்போது இல்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இராணுவ முகாமான 22 ஆம் படைப் பிரிவின் தலைமையகத்தில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

"உலகப் புகழ்வாய்ந்த திருகோணமலையையும் அதன் துறைமுகத்தையும் பாதுகாத்த பெருமை கடற்படை, தரைப்படை, விமானப்படையினரையே சாரும். கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான போரை வெற்றி கொண்ட படைவீரர்களை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது.

சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களைப் பாதுகாத்த பாதுகாப்புப் படையினரை இந்த இடத்தில் நாம் நினைவு கூருகின்றோம். இலங்கையில் இடம்பெற்ற போரில் உயிரிழந்த வீரர்கள் மற்றும் அங்கவீனம் அடைந்த வீரர்களையும் நாம் இந்த வேளையில் நினைவு கூருகின்றோம். அவர்களுடைய அர்ப்பணிப்பால் தான் இன்று வடக்கு, கிழக்கு மற்றும் முழு இலங்கையிலும் சமாதானம் நிலவுகின்றது.

இன்று நாட்டின் அனைத்து மக்களிடத்திலும் ஒரு பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அமைதியும் சுபீட்சமுமான புதிய நாடு ஒன்றை உருவாக்குவார்கள் என்று நம்புகின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி இன மக்களின் சமாதான வாழ்வுக்காக முப்படையினரும் பல சிரமங்களின் மத்தியில் தமது பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது எமக்கு தேவைப்படுவது எமது தேசிய பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகும்.

எனவே, இதற்கு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மற்றும் நாட்டின்மீது பற்றுள்ள அதிகாரிகளின் ஆலோசனை அவசியம். உங்களுடைய சேவைக்கான கௌரவம் உங்களுக்கு வழங்கப்பட வேண்டும். சில இராணுவத்தினரின் தவறான செயற்பாடுகளால் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள மூவின மக்களுக்கும் ஊறு விளைவிக்காத வண்ணம் உங்களது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

சர்வதேச நாடுகள் பல எமது பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சிகள் வழங்க தற்போது முன்வந்துள்ளன. இது வரவேற்கத்தக்கதாகும்"– என்றார்.

திருகோணமலை கடற்படை முகாம், சீனக்குடா விமானப் படைத்தளம் ஆகியவற்றுக்குச் சென்ற அமைச்சர் இராணுவ அணிவகுப்பு மரியாதையையும் ஏற்று படை முகாம்களையும் பார்வையிட்டுச் சென்றார். (வ–40)

## இளைஞன் சடலமாக மீட்பு

கைதடி, பெப்.10

மரத்தில் தூக்கிட்ட நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கைதடி தென் கிழக்கில் நேற்று முன்தினம் ஞாயிறு 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த முத்துலிங்கம் பிரசாந்த் (வயது – 21) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு உடனடியாகச் சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டதுடன் இறப்பு விசாரணை அதிகாரியின் விசாரணையை அடுத்து சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (வ–288)

## கும்பாபிஷேகம்

தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் மந்துவில் தாளையடிப்பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும். தொடர்ந்து 12 நாள்களும் கால்மண்டலதிருவிழாக்களும் இடம்பெறவுள்ளன. (வ–105)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



மறவன்புலோ மத்தி,
சாவகச்சேரியைச் சேர்ந்த
**அமிர்தலிங்கம் சுமன்**
(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், அபிவிருத்தி உத்தியோகத்தரும்)

அவர்கள் கடந்த (19.01.2015) அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிமாணம் செய்து கொண்டதையிட்டுப் பாராட்டுவதுடன் அவரது பணி மென்மேலும் தொடர வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

மறவன்புலோ மத்தி, சாவகச்சேரி. — அயல் நண்பர்கள்.



### இந்து நாகரிகம்

A/L பிரத்தியேக வகுப்புக்கள்
2016, 2017
ஆசிரியர்- ஸ்ரீகுகன்
A சித்திக்கு கற்பித்து கொடுக்கப்படும்
தொடர்பு:0776980573



### நாவற்பா மருத்துவ நிலையம்

அதிக விறைப்பினை, கை, காலில் வாலைக்கும் நரம்பு நோய், மூட்டு இசிவு, தீவிர பாரிசவாதம், மாறாத புண்கள் குணப்படல், முழங்கால் வாதம், குழந்தை யின்மைக்கு சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன்,
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெயதீவ்)
மானிப்பாய்.
T.P:077 321 2740



### வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கூலியாள்கள் தேவை. சுன்னாகம் மற்றும் அண்டிய பகுதிகளில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

தகுதிற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 021 224 0514, 077 386 7696



### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
அஜீத் நடிக்கும்
என்னை அறிந்தால்



காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது



### சேவைநலன் பாராட்டு

**குமாரசாமி சிவானந்தம்** (B.A, PGDE, SLPS-I, SLEAS-III)
(சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர்)



தென்மராட்சி கல்விவலயத்தின் சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று (10.02.2015) தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் குமாரசாமி சிவானந்தம் அவர்கள் ஓய்வு காலத்தில் தொடர்ந்தும் கல்விச் சமூகத்திற்கும் பிரதேச மக்களுக்கும் சிறப்பாகப் பணியாற்றி சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விவரம்**

1977 எழுதுநர்- கொழும்பு வன பரிபாலனத் திணைக்களம்
1982 எழுதுநர்- யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
1984 ஆசிரியர்-கிளி/பளை மகா வித்தியாலயம்
1991-பிரதி அதிபர்-கிளி/பளை மகா வித்தியாலயம்
1995 அதிபர்-யா/இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயம்
1997 அதிபர்-யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
2009 கோட்டக் கல்விப்பணிப்பாளர்- சாவகச்சேரி.

(சி/19569)(4.3.7) தென்மராட்சி கல்விவலய ஊழியர் நலன்புரிசங்கம்



### சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம் பெறுகைகளுக்கான அழைப்பு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கான உலர் உணவு விநியோகம் 2015/16

1. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/GHV/2015/01 | பொது வைத்தியசாலை, வவுனியா | 100,000 |

2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. பொது வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது இரண்டு வருடங்கள் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீடின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **10.02.2015 தொடக்கம் 02.03.2015** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் **03.03.2015** ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வவுனியா பொது வைத்தியசாலை கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பொது வைத்தியசாலை, வவுனியா (தொலைபேசி இல.024-222-2761, 0243241561) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

Dr.K. அகிலேந்திரன்,
பணிப்பாளர்,
பொது வைத்தியசாலை, வவுனியா.

(சி/19549)(4.3.7)



### யாழில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்

டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்
அருள் ஒளி தர்சன மாலையும்
மாசி மாத விசேட பூஜையும்



இடம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபம் காலம் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி

திருவருள் நிகழ்வுகள்:

அன்னை தொடர்புக்கு Tel: 0045 97180192, 0045 40413431 Fax: 0045 97184192

யாழ் தொடர்புக்கு 077 982 5004

www.abiramiamman.dk

இடம் : நல்லூர் இளங்கலைஞர் மண்டபம் காலம் : 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30

# திருமலையில் 1500 பேருக்கு காணி ஆவணங்கள்

திருகோணமலை, பெப்.10

மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொள்ளும் அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் மற்றும் அளிப்புப் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே. ஏ.டி.எஸ். குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் உள்நாட்டு போக்கு வரத்து பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்ந்த 1500 பேருக்கு காணி ஆவணங்கள் இதன்போது வழங்கப்பட்டன. காணி அமைச்சர் உரையாற்றுகையில்:

தற்போதைய அரசு சாதாரண மக்களது தேவைகளை உணர்ந்து செயற்படுகின்றது. ஆனால் முன்னர் இருந்த அரசு சாதாரண மக்களை கவனத்தில் கொள்ளாது தமக்கு அவசியமானோருக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கியது. இதன் காரணமாக சாதாரண மக்கள் பலர் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று எமது அரசு உங்களது அடிப்படை தேவையை நிறைவேற்றியுள்ளது.

வழங்கிய காணி ஆவணங்களைப் பாதுகாப்பதுடன் நீங்கள் சிறப்பாக வாழ வேண்டும். அத்துடன் எதிர் வரும் காலங்களில் அரச ஊழியர்களுக்கும் அவர்கள் வாழ்வதற்கென காணித்துண்டொன்று வழங்கப்படும். அதற்கான தேவையும் ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 25000 காணி ஆவணங்கள் வழங்கப் படவுள்ளதாகவும் காணி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முனையும்போது ஏதாவது கையூட்டுக்கள் கோரப்படுமாயின் அது தொடர்பில் தமக்கு அறியத்தருமாறும் காணி அமைச்சர் இதன்போது மக்களைக் கேட்டுக் கொண்டார். (வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக
கடமை புரியும் வி.வகீஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**சின்னத்துரை விஜயமூர்த்தி**

அவர்கள் 04.02.2015 புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவினால் துயறுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
கமநல அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம். (56637) (3,7)

## கண்ணீர் அஞ்சலி



யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண
வித்தியாசாலை ஆசிரியை திருமதி விஜயகுமாரி
சிவபாலன் அவர்களின் அன்பு மாமியார்
அமரர் அன்னக்கண்டு ஐயாத்துரை
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(58645)(4.3.7) பாடசாலைச்சமூகம்.

## ஓராண்டு நினைவலைகள்



அமரர் திருமதி சரஸ்வதி
சிதம்பரநாதன் (பேபி அன்ரி)
(முன்னாள் பொதுமுகாமைத்துவ உதவியாளர்,
தேர்தல்கள் திணைக்களம் - கச்சேரி யாழ்ப்பாணம்.

மண் மகிழ 24 ★ 03 ★ 1960
கண் நெகிழ 22 ★ 01 ★ 2014

*(திதி: அபரபக்க சஷ்டி - 10.02.2015 செவ்வாய்)*

ஆண்டொன்று ஆனதென்று
அறிந்தோம் நாங்கள்
ஆனாலும் உங்கள் நினைவு
பெருகக் கண்டோம்
நீண்ட பெரும் பெருமூச்சே
நிலையாய்க் கொண்டோம்
நீர்உலகில் எமை விடுத்து
நீங்கிப் போனீர்
தாண்டவொனாத் துயர்க் கடலில்
தவிக்கின்றோமே
தாயாக எமைப்புரந்த தங்கத்தரனே!
மாண்டவர் போல்
வாழ்கின்றோம் மகிழ்வு இன்றி
மன அமைதி எமக்கேது பகருவீரே!

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.


# மறைத்து வைக்கப்பட்டிருந்த 22 வாகனங்கள் சிக்கின

கொழும்பு, பெப்.10

பொரளை எலியற் பிளேஸில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 22 டிபெண்டர் வாகனங்கள் பொது மக்கள் சமாதானம், இடர் முகாமைத்துவ, கிறிஸ்தவ விவகார அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்றால் கடந்த 3 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் அந்தக் காணியில் சில டிபெண்டர் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் உயர்மட்டத்து அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் தரப்பு ஒன்று ஊடகவியலாளர்கள் சிலருடன் அங்கு சென்று குறித்த வாகனங்களைப் பார்வையிட்டனர்.

அந்தக் காணியில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ இல்லங்கள் நிர்மாணிக் கப்பட்டு வருவதோடு அதற்குப் பொலிஸ் பாதுகாப்பும் கூடப் போடப்பட்டிருந்தது.

கடந்த 29 ஆம் திகதி இந்த டிபெண்டர் வாகனங்கள் அவ்விடத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த தரப்பினர் தெரிவித்தினர்.

பொலிஸ்துறை, தடதடத்துப் போன ஜீப் வாகனங்களைப் பயன்படுத்தி வருகையில் இத்தகைய நவீன டிபெண்டர் வானங்கள் இவ்விதம் இடத்துக்கிடம் வீணாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது பெரும் அநியாயம் என்றும், ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்குச் சொந்தமான மேலுமொரு தொகுதி டிபெண்டர் வாகனங்கள் கொழும்புப் பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களில் இவ்விதம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருப்ப தாகவும், இந்த வாகனங்களைப் பார்வையிடுவதற்கு வந்திருந்த அமைச்சின் அதிகாரிகளில் ஒருவரான மேல் மாகாண சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான லோரன்ஸ் மாதிவெல தெரிவித்துள்ளார்.

இவ்விதம் இடத்துக்கிடம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் டிப்பெண்டர் வாகனங்கள் தொடர்பாக விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த அனைத்து வாகனங்கள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டு அந்த வாகனங்களை பொலிஸ் நிலையங்களுக்கு கையளிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் பொது மக்கள் சமாதானம் இடர் முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்திருப்பதாகவும் லோரன்ஸ் மாதிவெல தெரிவித்தார். (வ-2)

# சிறுவர் துஷ்பிரயோக குற்றங்கள் சட்டங்களை கடுமையாக்க திட்டம்

## சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதைத் தடுக்கும் வகையிலும், அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கும் வகையிலும் சட்டங்களைக் கடுமையாக்கவுள்ளதாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் பிரதி நீதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்களை முறையாகப் பராமரித்து அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக நாட்டில் தற்போது காணப்படும் நிலைமை கவலையளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடக்குகிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அ[illegible]த்துள்ள நிலையில் அதுதொடர்பான சட்டத்தை கடுமையாக்கத்திட்டமிடப்படுகிறது. சிறுவர் துஷ்பிரயோகசம்பவங்களுடன்தொடர்புடையவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதைத் தடுக்கும்வகையிலான சட்டத்திருத்தமும், அவர்கள் விசாரணையின் பின்னர் குற்றவாளிகள் என்று கண்டறியப்படும் பட்சத்தில்அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கும் வகையிலும்சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் இராஜாங்கஅமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும், நன்றி நவிலலும்

அன்னை மடியில் 22 * 09 * 1938



இறைவன் அடியில் 16 * 01 * 2015

அந்தோனியார் வீதி, மாதகல் கிழக்கு மாதகல்
அமரர் ராசா கந்தசாமி
(பெற்றா நேடிங் உரிமையாளர்) இல.90, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11

கடந்த 16.01.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் இதய தெய்வம் அமரர் ராசா கந்தசாமி அவர்களின் அந்தியேட்டிக்கிரிகைகள் 11.02.2015 புதன்கிழமை காலை 7.00 மணி முதல் யாழ்/கீரிமலை அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். பின்னர் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு சபிண்டிகரண நிகழ்வு இல.70/2 - 3/2, புது செட்டி தெரு, கொழும்பு - 13 அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பின்னர் காலை 11.30முதல் இல.26, விவேகானந்தா மேடு, கொழும்பு - 13, கமலா மோடி மண்டபத்தில் கூட்டு பஜனை பிரார்த் தனையும், நினைவுமலர் வெளியீடும் அதனைத் தொடர்ந்து 12.30 மணி அளவில் மதியபோசனமும் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது அன்பு தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் எம்முடன் இணைந்துகொண்டு மதியபோசனத்திலும் மரணச்செய்தி கலந்து கொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம். எங்கள் அன்புத்தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையம் சாத்தி யோர்க்கும் தொலைபேசி தந்தி இணையம் மின்னஞ்சல் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

TP: 077 697 9406/011 232 0543/077 305 5850

# மட்டு. மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு




மட்டக்களப்பு, பெப்.10
மட்டக்களப்பு மாவட்ட உள்ளகக் கணக்காளர் ரி.தேவகாந்தன் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தச் சென்றபோது வீட்டில் அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரது மனைவி, உறவினர்களைத் தாக்கி விட்டுச் சென்றுள்ளனர்.
தாக்குதலுக்கு உள்ளான அவர்கள் மாவட்ட மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கண்டித்து மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் தாக்குதலை மேற்கொண்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு செயலக முன்றிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவம் இடம்பெறக் கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர். (வ)

## மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு தீயணைப்பு கருவிகள்

தென்மராட்சி, பெப். 10
யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு தீயணைப்புக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின் றன.
மின் ஒழுக்குகளால் தீப்பிடிக்கும் அபாயம் ஏற்படுவதால் அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் பயன்படுத்தக் கூடிய வகையில் இவை விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## இலங்கையர் மூவருக்கு சவூதியில் சாவுத் தண்டனை

சவூதி அரேபியாவில் கொலைக் குற்றச்சாட்டு ஒன்றுடன் தொடர்புடைய இலங்கையர் மூவருக்கு சாவுத்தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் ராகம, மஹவ மற்றும் தெஹிவளையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் பொதுமகன் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த மூவருக்கும் சாவுத் தண்டனைத் தீர்ப்பு அளிக் கப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டிருந்த மூவரும் கடந்த 10 வருடங் களாக சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள். இந்தநிலையில் குறித்த மூவரையும் தண்டனையில் இருந்து காப்பாற் றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (வ)

# சம்பளத்தை அதிகரித்து ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்க்குமாறு மனு

## வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பியது

யாழ்ப்பாணம், பெப்.10
ஆசிரிய உதவியாளர்களின் சம்பளத்தை அதிகரித்து இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள் ளீர்க்குமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோருக்கு வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியத்தால் மனுக்கள் அனுப்பப் பட்டுள்ளன.
குறிப்பிட்ட அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிலுநர்களாக பயிற்சி பெற்றுவரும் 526 ஆசிரிய உதவியாளர்களாகிய நாம் எமது செலவுகளை ஈடுசெய்ய முடியாது பெரும் அவலப்பட்டு கலங்கி நிற் கின்றோம்.
கடந்த காலங்களில் 15 வருடங்களுக்கும் மேலாக தொண்டர் ஆசிரியர்களாக வன்னியில் சேவையாற்றிய எமக்கு கடந்த 2013.07.01 முதல் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டு 2014.07.15 முதல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முழுநேர ஆசிரியப் பயிற்சியைப் பெற்று வருகின்றோம்.
எமக்கு மாதச் சம்பளமாக தற்போது 13 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. எமக்கு வாழ்க்கைப்படியும் இல்லை. ஓய்வூதியத் திட்டத்தினுள்ளும் உள்வாங்கப்படவில்லை. நாம் அனைவரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா, மருதங்கேணி, மன்னார் போன்ற வன்னிப் பிரதேசங்களைச் சேர்ந்த வர்கள்.
2006 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருக்க வேண்டிய எமக்கான நிரந்தர ஆசிரியர் நியமனம் வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தவர்கள் என்பதால் சகல தகைமைகள் இருந்த போதிலும் அப்போது எமக்கான நிரந்தர ஆசிரியர் நியமனம் மறுக்கப்பட்டிருந்தது. இது அனைவருக்கும் தெரியும். 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நியமனத்தின் போது கூட வன்னியைச் சேர்ந்த நாம் மட்டும்தான் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தோம்.
ஆசிரிய உதவியாளர்களாகிய நாம் அனைவரும் எமது குடும்பச் செலவு முழுவதையும் நாமே பொறுப்பேற்க வேண்டிய குடும்பப் பொறுப்புள்ளவர்களாகக் காணப்படுகின்றோம். இந்த நிலையில் ஆசிரிய கலாசாலைச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றாலும் அல்லல்பட்டுக் கலங்கி நிற்கின்றோம்.
வன்னியில் கடந்த கால கொடிய போராலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டவர்களாகிய எமக்கு வழங்கப்பட்டுவரும் 13 ஆயிரம் ரூபா மாதச்சம்பளம் போதுமானதாக இல்லை.
இந்த நிலையில் எங்களைஅரச ஊழியர்கள் என்று காரணம் கூறி எமது குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி, வாழ்வாதார உதவித்திட்டங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இதில் கொடிய போரால் குடும்பத் தலைவனை இழந்த பெண் தலைமை தாங்கும் ஆசிரிய உதவியாளர்களது குடும்பங்களுக்கும் சமுர்த்தி வாழ்வாதார உதவிகள் அனைத்துமே நிறுத் தப்பட்டுள்ளன. இந்நிலையில் நாம் எப்படி வாழ்வது? தற்போது அனைத்து அரச ஊழியர்களுக்கும் அவர்களின் சம்பளத்துடன் 5 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதுகூட எமக்கு மட்டும் இல்லை. மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைப் படிகள் கூட எமக்கு மட்டும் வழங்கப்படுவதில்லை. எனவே, தற்போதைய எங்கள் நிலையையும் கருத்திற்கொண்டு சகல தகைமை களையும் கொண்டுள்ள எம்மையும் இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்ப்புச் செய்து எமது சம்பளத்தை அதிகரிக்க ஆவன செய்து உதவுமாறு தங்களை நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புக்களோடும் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (வ)

# மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம், பெப்.10
நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி வளர்மதி கபிரியேல் பிள்ளை தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் கைலாசநாதன், சிறப்பு விருந்தினராக ஆரம்பப் பிரிவு உதவி கல்வி பணிப்பாளர் சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (வ-105)

◆◆◆

தென்மராட்சி, பெப். 10
சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக் கிழமை பி.ப.2 மணிக்கு வித்தியாலய விநாயமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.
அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந் தினராக வித்தியாலய பழைய மாணவியும், யாழ்ப்பாணம் அஞ்சற் திணைக்கள கணக்காய்வாளருமான திருமதி சு.கலைச்செல்வனும், சிறப்பு விருந்தினராக பழைய மாண வனும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை உத்தியோகத்தருமான த.ஜெயந்தனும் கலந்து கொள்வர். (வ-9)

◆◆◆

தென்மராட்சி, பெப். 10
கொடிகாமம் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.
அதிபர் திருமதி வ.கபிரியேற்பிள்ளை தலைமையில் நடை பெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனும், சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும் கலந்து கொள்வர். (வ-9)

# செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளை உறுப்பினர்கள் மட்டக்களப்புக்கு



மட்டக்களப்பு, பெப்.10
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக்கிளை உறுப்பினர்கள், இலங்கைச் செஞ் சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லெண்ண அனுபவப் பகிர்வு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.
இதன்போது, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைக் காரியாலயத்தில் பரஸ்பர அனுபவப் பகிர்வுகள் இடம்பெற்றன.
கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட் டங்களிலும் செஞ்சிலுவைச் செயற்பாடுகளுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட சவால்கள், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.
மேலும் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைத் தொண்டர் களுக்கு மட்டக்களப்பில் நீச்சல் பயிற்சி வழங்குதல், மேற்படி இரண்டு மாவட்டங்களிலும் உள்ள தொண்டர்களை வலுப்படுத்தல், தொண்டர் பயிற்சி முகாம்களை எதிர்காலத்தில் முன்னெடுத்தல் என்பவை குறித்தும் இதன் போது திட்டமிடப்பட்டதாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா கூறினார்.
இதன்போது, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளை தலைவர் சு.தருமரெத்தினம் உள்ளிட்ட குழுவினரும் மட்டக்களப்பு கிளை தலைவர் த.வசந்தராசா உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர். (வ)


## மரண அறிவித்தல்

### கதிரவேலு குணரத்தினம் (டிங்கர்குணம்)



தாயின் மடியில்
05.05.1944

இறைவனடியில்
08.02.2015

பழையவீதி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு குணரத்தினம் (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் (பவு), அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான குணம், குணசேகரன் மற்றும் குணசீலன், குண பாலன், குணபாலசிங்கம் (கொழும்பு), இராஜ சேகரம் (கொலண்ட்) சந்திரசேகரம் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தசிதா (லண்டன்), பருதா (பிரான்ஸ்), மஞ்சுளா (லண்டன்), சியாமளா (ஆசிரியை- யா/சிட்டியபுலம் அ.த.க. பாடசாலை), பிரேஜினா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேரானந்தம் (லண்டன்), விசுவலிங்கம் (பிரான்ஸ்), இரவீந்திரன் (லண்டன்), ஸ்ரீபரன் (செலிங்கோ லைவ்), சிவா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுஷன், மேனுஷன் (பிரான்ஸ்), மேஷிகா, சோபிகா (லண்டன்), அஸ்வின், அபிஷன், அபிநயன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கராஜ்லேன், பழைய வீதி, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## செல்லையா இராசரத்தினம்

(நியூலக்கி ஹாட்வெயர் உரிமையாளர்
பிரபல கட்டட ஒப்பந்தக்காரர்)

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 02 | | 20 |
| 03 | | 02 |
| 1952 | திதி: | 2014 |

அபரபட்ச சஷ்டி

ஆண்டொன்று மறைந்துவிட்டது
அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள்
நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய்
அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள்
நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

343, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 237 8062 (56634)(4.3.6)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெமீலுக்கான தடைகள் நீக்கம்

கொழும்பு, பெப்.10

கிழக்குமாகாணசபைஉறுப்பினரானஏ.எம்.ஜெமீலுக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீ மால் விதிக்கப்பட்டிருந்த அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்டுள்ளன.

நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையக மான தாருஸ்சலாமில் ஊடக வியலாளர் மாநாடொன்று நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் ஜெமீலுக்கு விதிக்கப்பட்ட தடை களை நீக்குவதாக கட்சித் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் கட்சியின் உறுப்புரிமைகளி லிருந்தும், அவர் கட்சியில் வகித்த சகல பதவிகளிலிருந்தும் உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டிருந்தார். ஜெமீல் கட்சியின் கட்டுப்பாடு களை மீறியுள்ளார் என்றும் கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் கூறி அவரை இடை நிறுத்துவதாக கட்சி தெரிவித்திருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துகடந்தவெள்ளிக்கிழமை சாய்ந் தமருதில் அமைச்சர் ரவூப் ஹக்கீ முக்கு எதிராக ஆர்ப்பாட்ட மொன்றும் இடம் பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஜெமீல் தமக்கும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று கட்சித் தலை வருக்கு விளக்கியுள்ளார். அத்துடன் தம்மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் தொடர்பில் மன்னிப்பும் கோரியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அவருக்கு எதிராக கட்சியால் விதிக்கப்பட்ட அனைத்து தடைகளும்நீக்கப்பட்டுள்ளன. (வ–10)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15
08
1932

மறைவு
14
01
2001

தி.தி. அபரபக்க ஷஷ்டி

## அமரர் ஆறுமுகம் முத்தையா ஜயாத்துரை

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)

நீங்கள் இவ் உலகைவிட்டு நீங்கி
ஆண்டுகள்பதினான்கு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

9/1, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம் (58621)(5.7)

குடும்பத்தினர்.

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 10 |
| 06 | 02 |
| 1930 | 2003 |

## அமரர் கதிரவேலு சுந்தரம்

12ஆண்டுகள் அமைதியுடன் மறைந்தாலும் நெஞ்சின்
நினைவுகள் என்றென்றும் மறையாது
காலம் கடந்தாலும் உங்கள் நினைவுகள் எம் இதயங்களில்
என்றும் நிலைத்திருக்கும்
அப்பாவின் பசுமையான நினைவுகளுடன்
வாழ்ந்திருக்க உங்கள் ஆசீர்வாதம்
என்றென்றும் நிறைந்திருக்கும்.

# 90ஆம் நாள் நினைவஞ்சலி




| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 10 |
| 05 | 11 |
| 1938 | 2014 |

## அமரர் திருமதி சுந்தரம் இராசம்மா

அம்மா அளவற்ற அன்பும் தாய்மையும்
உங்களுடன் பிறந்தவை அல்லவா?
இவை யாவும் இழந்து 90 நாள்கள் ஆகிவிட்டன
அம்மா மறப்பதற்கு முயற்சித்தோம்
அது முடியவில்லை!
அம்மா! உங்கள் நினைவுகள்
என்றும் எங்கள் நினைவில் ஒளி வீசும்.

குடும்பத்தினர்.
பிள்ளைகள்: உதயசீலன், தர்மசீலன்.

இல்கடி, உடுப்பிட்டி. (54195)(12.3.7)



## மின்னல் வேக இணைய வலையமைப்பு

Ultra Fast வேகத்தில் இணைய வலையமைப்பைத் தரும் DdLink AC3200 எனும் WiFi Router அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. 5.3 Gbps வேகத்தில் தரவுப்பரி மாற்றத்தை மேற்கொள்ளக்கூடிய தாக இருக்கும் இந்தச் சாதனத்தில் 1GHz வேகத்தில் செயற்படக்கூடிய Dual Core Processor உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் விலை 310 டொலர்கள் ஆகும். இதே வேளை USB இணைப்பி மூலம் லெப்டொப்கணினிகளில் இணைத்து பயன்படுத்தக் கூடிய WiFi Router ஒன்றையும் அறிமுகம் செய்யவுள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சொனியின் புத்தம் புதிய டேப்லட்



சொனி நிறுவனம் 12 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்ட புதிய டேப்லட் ஒன்றை இந்த மாதம் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
1000 டொலர்கள் வரை பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ள இந்த டேப்லட் Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 6GB RAM, 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா என்பவற்றைக் கொண்டுள்ளது.
இவை தவிர இது 8.6mm தடிப்பு உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் நீடித்து உழைக்கக்கூடிய 12,100 mAh மின்கலமும் தரப்பட்டுள்ளது.

## சம்சுங்கின் அதிநவீன ஸ்பீக்கர்

சம்சுங் நிறுவனம் அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட சரவுண்ட் (Surround) ஸ்பீக்கரை அறிமுகம் செய்யவுள்ளது.
360 டிகிரியில் எங்கிருந்தும் ஒலியைக் கேட்கக்கூடிய வகையில் இருத்தல் WAM7500/6500 எனும் இந்த ஸ்பீக்கரின் விசேட அம்சம் ஆகும்.
இவற்றில் இருவகை வடிவமைப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் இவற்றின் விலை தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாத நிலையில், இந்த வருடம் இடம்பெறவுள்ள Consumer Electronics and Consumer Technology நிகழ்வின்போது அறிமுகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மூளையால் கட்டுப்படுத்தக் கூடிய ரோபோ

Pittsburgh பல்கலைக் கழகத்தில் 2012ஆம் ஆண்டு Jan Scheuermann என்பவரால் மூளையால் கட்டுப்படுத்தக்கூடிய ரோபோ தொடர்பான திட்டம் ஒன்று முன்வைக் கப்பட்டிருந்தது. இந்த நிலையில் 2014ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இதனை உருவாக்க முடியும் என அவர் நிரூபித்தும் காட்டினார். முதற்படியாக ரோபோ ஒன்றின் கைகள், விரல்கள் என்பவற்றை மூளையினால் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் ஆய்வு முன்மொழியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் எதிர்வரும் ஐந்து அல்லது பத்து வருடங்களில் இவை பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கலவிக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A<br>தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B<br>தரம் 6. 7. 8. 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C<br>தரம் 3. 4. 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
........................................
கற்கும் பாடசாலை: ........................................
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ........................................
ஆசிரியரின் பாடத்துறை: ........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .................................... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு





## டில்லித் தேர்தல் களத்தில் ஆம் ஆத்மிக்கு அதிக வெற்றி

டில்லி,பெப்.10

இந்தியத் தலைநகரின் டில்லி சட்ட மன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவுக்குப் பின்னர் வெளியான அனைத்து கருத்துக் கணிப்பு முடிவு களும் ஆம் ஆத்மி கட்சிக்கு அதிக அளவிலான இடங்களில் வெற்றி வாய்ப்பு ள்ளதாக கூறுகின்றன.

எனினும், பாரதிய ஜனதா கட்சி சென்ற சட்டமன்ற தேர்தலின் போது பெற்ற அதே அளவான வெற்றி வாய்ப்பையே பெறும் என் றும் காங்கிரஸ் கட்சியே மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்படும் என்றும் அந்தக் கருத்துக் கணிப்பு கள் கூறுகின்றன.

இது தொடர்பில் கருத்துத் தெரி வித்த பாரதிய ஜனதா கட்சியின் டில்லி முதல்வர் வேட்பாளரான கிரண் பேடி, இந்த கருத்துக் கணிப் புகள் கூறுவது போன்று முடிவுகள் அமையாது என்று கூறினார்.

வாக்குப்பதிவு நிறைவடைதற்கு முன்னர் கடைசி ஓரிரண்டு மணித் தியாலங்களிலேயே பெருமளவில் வாக்குகள் பதிவானதாகவும் இந்த வாக்குகள் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவான நிலையை உண்டாக் கும் என்று தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ–ரி)

# கெய்ரோவில் கலவரம் அடிதடியில் 14 பேர் சாவு

## கால்பந்தாட்டப் போட்டியின் போது

கெய்ரோ, பெப்.10

எகிப்து நாட்டின் தலைநகர் கெய் ரோவில் கால்பந்தாட்டப் போட்டி யொன்றில்போது ஏற்பட்ட கல வரத்தால் 14 பேர் சாவடைந்துள்ள னர்.மேலும்பலர்படுகாயமடைந்தனர். கெய்ரோவிலுள்ள ஏர் டிபன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற கால்பந்து போட் டியில் எகிப்து பிரீமியர் லீக் கிளப் ஜமாலிக் அணியுடன் ஈ.என்.பி.பி.ஐ. அணி மோதியது. போட்டி நடை பெற்றுக் கொண்டிருந்த போது ஜமா லிக் அணியின் ஆதரவாளர்கள் மைதானத்துக்குள்நுழையமுயற்சித் தனர். இதனால் பாதுகாப்பு படை யினருக்கும் ஜமாலிக் ஆதரவாளர் களுக்கும் இடையே மோதல் ஏற்பட் டது. அந்த மோதலின் போது பாதுகாப்பு படையினர் கண் ணீர்ப் புகைக்குண்டுகளைப் பயன்படுத்தினர்.



அந்தக் கலவரத்தில் 14 பேர் சாவடைந்ததாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஹோஸாம் அப்தெல் கபார் தெரிவித் தார். படுகாயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிட மாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கலவரத்தையடுத்து கால்பந்துப் போட்டித்தொடர் காலவரையின்றி இரத்துச் செய்யப்படுவதாக அதிகா ரிகள் தெரிவித்தனர். வன்முறை யில் ஈடுபட்ட ஜமாலிக் அணி ஆதர வாளர்கள் 17 பேரை பாதுகாப்புப்படை யினர் கைது செய்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தின் போர்ட் மைதானத்தில் கால் பந்தாட்டப்போட்டியொன்றின் போது நடைபெற்ற கலவரத்தில் 70 பேர் சாவ டைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

## பெற்றோர் தினமாக மாறும் காதலர் தினம்

ஜார்க்கண்ட்,பெப். 10

காதலர் தினமான பெப்ரவரி 14ஆம் திகதியை அன்னையர் மற்றும் தந்தையர் தினமாகக் கொண்டாட சத்தீஸ்கர் மாநிலத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு சத்தீஸ்கரில் நடைபெற்ற ராஜிம் கும்பமேளா நிகழ்ச்சியில் பேசிய சாமியார் ஆசாராம் பாபு, காதலர் தினத்தை, அன்னையர் மற்றும் தந்தையர் தினமாகக் கொண்டாட மாநில அரசு உத்தரவிட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்ற ஆளும் பா.ஜ.க. அரசு, பாடசாலைகளில் காதலர் தினத்தை அன்னையர் மற்றும் தந்தையர் தினமாகக் கொண் டாட உத்தரவிட்டுள்ளது. அது குறித்து பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டுள்ள சுற்றறிக்கையில், ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 14ஆம் திகதியன்று அன்னையர் மற்றும் தந்தையர் தினம் கொண்டாடப் படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த உத்தரவின்படி, பெப்ரவரி 14ஆம் திகதியன்று மாணவர்களின் பெற்றோர்களை பாடசாலைக்கு அழைப்பதென பாடசாலைகளது நிர் வாகத்தரப்புக்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களை பிள்ளை கள் மாலை அணிவித்து, திலகமிட்டு கௌரவப்படுத்துவார்கள் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)





ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல் ரோபோர்ட் நிறுவனத் துக்குச் சென்றிருந்தபோது, விஞ்ஞானிகள் ரோபோக்களை போல் வேடமணிந்து அவரை வரவேற்றுள்ளனர். (ஓ–ரி)

## ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்த 700 சதுர கி.மீற்றர் பிரதேசம் மீட்பு

பாக்தாத்,பெப்10

ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி யிருந்த 700 சதுர கிலோ மீற்றர் பிர தேசத்தைக் கூட்டுப்படைகள் மீட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளைக் கைப்பற்றி வைத் துள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது அமெரிக்கக் கூட்டுப்படைகள் தாக் குதல் மேற்கொண்டு வருகின்றன. ஜோர்தானில் விமானியை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொன்றதையடுத்து ஜோர்தானும் தாக்குதல் மேற் கொண்டுவருகிறது.

தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ள நிலப்பகுதியை மீட்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரு கின்றன்.

இதுவரை கூட்டுப்படைகள் 2 ஆயி ரம் முறை விமானத்தாக்குதல் நடத்தி யிருக்கின்றன. ஐ.எஸ். தீவிரவாதி களிடம் இருந்த 700 சதுர கிலோ மீற்றர் நிலம் மீட்கப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் பிடியில் இருந்த ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பு மீட் கப்பட்டு விட்டது. 200 எண்ணெய் கிணறுகள் தீவிர வாதிகளின் கட்டுப் பாட்டில் உள்ளன. அவற்றையும் செயற் பட விடாமல் செய்யும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## வளர்ந்து வரும் நாடுகளுக்கு விசா சலுகை

### இந்திய அரசு தெரிவிப்பு

டில்லி, பெப்.10

குறைந்த வளர்ச்சியைக் கொண்ட நாடுகளுக்கு விசாக் கட்டணங் களை இரத்து செய்வது, சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவது போன்ற பல்வேறு சலுகைகளை வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

குறைந்த வளர்ச்சியைக் கொண்ட நாடுகளுக்கு, வளர்ந்து வரும் நாடுகள் வழங்க வேண்டிய உதவி கள் குறித்து விவாதிக்க ஜெனிவா வில் உள்ள உலக வர்த்தக அமைப் பில் மாநாடு நடைபெற்றது.

அந்த மாநாட்டில் இந்தியா, சீனா, ஆஸ்திரேலியா, ஜப்பான், கனடா, நோர்வே, சுவிற்ஸர்லாந்து உட்பட பல நாடுகள் கலந்து கொண்டன.

அதில், விசாக் கட்டணங்களை ரத்து செய்வது, சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவது போன்ற பல்வேறு சலுகைகளை வழங்கப்போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

குறைந்த வளர்ச்சியைக் கொண்ட நாடுகளுக்கான தொழில் முறை விசா, வேலைவாய்ப்பு விசா என் பவற்றுக்கான கட்டணங்கள் இரத் துச் செய்யப்படும். ஒவ்வோர் ஆண் டும், குறைந்தவளர்ச்சியைக்கொண்ட நாடுகளைச் சேர்ந்த 1,000 தொழில் வல்லுநர்களுக்கு, தொழில்நுட்ப ஆலோசனை, மேலாண்மை ஆலோசனை, திட்ட மேலாண்மை குறித்த பயிற்சிகள் வழங்கப்படும்.

அந்த நாடுகள், இந்தியாவில் தொழில் ஆரம்பிப்பதற்கான சந்தை வாய்ப் புக்கள் மேம்படுத்தப்படும். அந்த நாடுகளுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளும், திறன் மேம்பாட் டுப் பயிற்சிகளும் வழங்கப்படும்' என்று இந்தியா அறிவித்துள்ளது.

இதுகுறித்து, கருத்துத் தெரிவித்த குறைந்த வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் ஒருங்கிணைப்பாள ரும், உகண்டா நாட்டுத் தூதுவரு மான கிறிஸ்டோபர் அபார், விசாக் கட்டணங்களை இரத்து செய்வது என்ற இந்தியாவின் அறிவிப்பு வர வேற்கத்தக்கது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா அளிக் கும் சலுகைகள் பாராட்டத்தக்கவை' என்று தெரிவித்துள்ளார். (ஓ–ரி)

## 50 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற் போன சிலி நாட்டு விமானத்தின் பாகம் கண்டுபிடிப்பு

சான்டியாகோ, பெப்.10

நீண்ட மலைத்தொடரான சிலி யின் 'ஆண்டஸ்' மலையில் கால் பந்து வீரர்கள் குழுவுடன் 50 ஆண்டுக ளுக்கு முன் காணாமற்போன விமானம் மலை ஏறுபவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லேன் சிலி டக்ளஷ் டிசி–3 என்ற அந்த விமானம் 1961ஆம் ஆண்டு காணாமற்போயிருந்தது. அதன் பின் அந்த விமானத்தைப் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை. இந்த நிலையில் அந்த விமானத் தின் சிதைந்த பாகங்கள் தென் சான்டியாகோவில் இருந்து 300 கி.மீ தொலைவில் உள்ள மால் என்ற இடத்தில் மலை ஏறும் வீரர் களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



விமானத்தின் பாகத்தை கண்ட றிந்த லியோனர்டோ அல்போர் னோஸ் என்பவர் தெரிவிக்கை யில், தரை மட்டத்திலிருந்து 10000 அடி உயரத்தில் விமானத்தின் பாகங் களும் மனித எலும்புகளும் காணப் பட்டதாக தெரிவித்துள்ளார்.

விமானம் விபத்துக்குள்ளானபோது அதில் 34 பயணிகள் பயணம் செய்திருந்தனர். அதில் கிரீன் கிராஸ் கால்பந்து அணியைச் சேர்ந்த பயிற் சியாளர் அர்னல்டோ வேஸ்கு வெஸ், எட்டு விளையாட்டு வீரர் கள், இதர அணி நிர்வாகிகள் மற் றும் நண்பர்கள் பயணம் செய்திருந் தனர். விமானம் காணாமற் போய் 50 ஆண்டுகளின் பின்னர் அது பற்றிய தகவல் தெரிந்துள்ளதால் அதற்கான உண்மை விடை கிடைத் துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)



சீனாவில் சந்திரப் புதுவருடம் பெப்ரவரி 19 இல் கொண்டாடப்படுவதாகச் சீனர்களின் நாள்காட்டியில் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி அந்தப் புதுவருடத்தை முன்னிட்டு ஹொங்கொங் நகர் அலங்கரிக்கப்பட்டு வருகிறது. (ஒ–ரி)

## கொலம்பியாவில் அமைதிப் பேச்சு பிரபஞ்ச அழகிக்கு அழைப்பு



பகோட்டா, பெப்.10

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில், அரசுடனான அமைதிப் பேச்சுக்களில் பிரபஞ்ச அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட கொலம்பியாவின் பவுலினா வேகாஸ் கலந்து கொள்ள வேண்டும் என்று பார்க் புரட்சிப்படையினர் அழைப்பு விடுத்துள்ளனர். கடந்த 50 ஆண்டுகளாக மார்க்சிஸ்ட் பார்க் புரட்சிப் படையினர் அரசுக்கு எதிராக கொரில்லாத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். இதில் இதுவரை 2 லட்சத்து 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் அப்பாவிப் பொது மக்கள். இந்த நிலையில், இரு தரப்பினரும் கடந்த 2 ஆண்டுகளாக அமைதிப் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். கியூபா தலைநகர் ஹவானாவில் நடந்து வந்த பேச்சுக்களில் உடன்பாடு ஏற்படாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையிலேயே அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ள தென் அமெரிக்கப் பிரபஞ்ச அழகிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## மேற்குலகுடனான பேச்சுக்களை வரவேற்கும் ஈரானின் தலைவர்

ரெஹ்ரான்,பெப்.10

ஈரானின் அணுத் திட்டம் தொடர்பில் விட்டுக்கொடுப்பொன்றை ...ற்கொள்வதற்காக மேற்குலக சக்திகளுடன்பேச்சுக்கள் மேற்கொள்ளப்படுவதைத் தாம் வரவேற்பதாக அந்த நாட்டு அதியுயர் தலைவர் அயதுல்லாஹ் அல் கொமேனி தெரிவித்துள்ளார்.

ஆனால், ஈரானின் தேசிய நலன்களைப் பாதுகாக்க முடியாத தீர்வே மேற்குலகிடமிருந்து கிடைக்கும் என்றும் நல்ல தீர்வு கிடைக்க வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோன் ஹெரியை, ஈரானின் வெளியுறவு அமைச்சர் மொஹமட் ஜவாத் ஸரிப் மியுனிக் நகரில் சந்தித்துள்ள நிலையிலேயே அயதுல்லாஹ்அல்கொமேனியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

பேச்சுக்களை இழுத்தடிப்பது பிரயோசனமற்றது என்றும் இந்தப் பேச்சுக்கள் தோல்வியடைவதால்



உலகம் அழிந்துவிடாது என்றும் ஈரானின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரான், அதன் அணுத் திட்டத்தைக் குறைக்கவேண்டுமானால், அந்த நாட்டின் மீதான மேற்குலகின் தடைகள் அகற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## சட்டங்களைப் பின்பற்ற இஸ்லாமியர்களை வலியுறுத்துகிறது பிரிட்டன்

லண்டன், பெப். 10

பிரிட்டனில் வாழும் இஸ்லாமியர்கள் நாட்டின் சட்டத்திட்டங்கள் மற்றும் இறையாண்மையை பின்பற்றிச் செயற்பட வேண்டும் என இளவரசர் சாள்ஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் 6 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இளவரசர் சாள்ஸ், பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த இளைஞர்களை தீவிரவாதிகளாக மாற்ற முயற்சிக்கும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளை அவர் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

பிரிட்டனில் பிறந்த இஸ்லாமியர்கள் அல்லது நாட்டுக்குள் புதிதாக வரும் இஸ்லாமியர்கள், பிரிட்டனின் சட்டத்திட்டங்களுக்கு கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இணையத்தளங்கள் மூலம் பிரிட்டன் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக மாற்ற தீவிரவாத அமைப்புகள் முயற்சி செய்து வருவது நாட்டுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்துவதாக இளவரசர் சாள்ஸ்



தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாத தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்த அவர், தாக்குதலைத் தடுக்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் மத்திய கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவர்களே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்றார். (ஒ–ரி)

## ஆஸி. பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்



சிட்னி, பெப். 10

ஆஸ்திரேலியபிரதமர்டோனிஅபோட் தமது கட்சியின் தலைமைப் பதவிக்கான நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்நோக்கவுள்ளார். இந்த நிலையில் தனது அரசியல் எதிர்காலத்துக்காக அவர் கடுமையாகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியல் ஸ்திரமின்மையை முடிவுக்குக் கொண்டுவர லிபரல் கட்சியின் வாக்கெடுப்பை விரைவுபடுத்துவதாக அபோட் குறிப்பிட்டுள்ளார். பிரதமரின் சொந்தக் கட்சியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியின் தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பிரிட்டன் இளவரசர் பிலிப்புக்கு ஆஸ்திரேலிய 'நைட்' பட்டத்தை வழங்கியது குறித்து அபோட் மீது கடும் விமர்சனம் எழுந்துள்ளது. குயின்ஸ்லாந்தில் நடந்த அண்மைய தேர்தலிலும் அபோட்டின் கட்சி தோல்வியைச் சந்தித்திருந்தது. பிரதமர் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதாக வாக்காளர்களிடமிருந்து குற்றச்சாட்டு எழுந்தது.

எனினும் நம்பிக்கை வாக்கெடுப்பை விரைவில் நடத்த வேண்டும் என்று அபோட் குறிப்பிட்டுள்ளார். இந்த வாக்கெடுப்பில்லிபரல்கட்சி நாடாளுமன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ஒ–ரி)

## குழந்தையின் வயிற்றுக்குள் வளரும் இரட்டைக் கருக்கள்



பீஜிங், பெப். 10

பீஜிங் நாட்டில் 3 வாரக் குழந்தையின் வயிற்றுக்குள் இரட்டை கருக்கள் இருந்ததால் மருத்துவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். பீஜிங்நாட்டின், பிரபலராணி எலிசபெத் மருத்துவமனையில் ஒரு சீனத்தம்பதியருக்குப்பிறந்த பெண் குழந்தையின் வயிற்றுக்குள் இரட்டைக் கருக்கள் இருந்துள்ளன.

அந்தக் கருக்கள் 8 முதல் 10 வாரங்களாக சூல் கொண்டிருந்ததை அறிந்த மருத்துவர்கள், அந்தக் கருக்களை நெருக்கமாக ஆய்வு செய்தபோது அவற்றுக்கு கால்கள், கைகள், ஒரு முதுகு, விலா மற்றும் குடல், தொப்புள் கொடி போன்ற முக்கிய உறுப்புகள் உருவாகி இருந்ததும், தோலால் மூடப்பட்ட அந்த இரண்டு கருக்களும் 14.2 மற்றும் 9.3 கிராம் நிறையைக் கொண்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கருவுக்குள் வளரும் குழந்தை தானாக கர்ப்பம் தரிப்பது என்பது நடைபெற முடியாத காரியமாகும். எனினும், அந்தக் குழந்தை தனது தாயின் வயிற்றில் தரித்த பின்னர், அந்தக் குழந்தையின் பெற்றோர், தாம்பத்திய உறவில் ஈடுபட்ட வேளையில் தந்தையின் விந்தணுக்கள், தாயின் வயிற்றில் ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்த அந்தப் பெண் குழந்தையின் கருவறைக்குள் நீந்திச் சென்றதால் இந்த விளைவு ஏற்பட்டிருக்கக் கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்தப்பிரசவத்துக்கு முன்னதாக குழந்தையின் தாய் பலமுறை கருக்கலைப்பு செய்ததும் அதற்கான மற்றுமொரு காரணமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (ஒ–ரி)

## மலேஷிய விமான விபத்தில் சாவடைந்த துணை விமானியின் உடல் மீட்பு

எயார் ஏசியா விமான விபத்தில் சாவடைந்த துணை விமானியின் உடல் ஜாவா கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மலேஷியாவுக்குச்சொந்தமானஎயார் ஏசியா விமானம் கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி இந்தோனேஷியாவில் இருந்து புறப்பட்டபோது ஜாவா கடல் பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கியதில், அதில் பயணம் செய்த 162 பயணிகளும் சாவடைந்தனர். விமானம் விழுந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதன் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதுடன் பயணிகளின் உடல்களும் மீட்கப்பட்டன. இந்த நிலையில் மீட்புக் குழுவினர் விமானத்தில் விமானிகள் அமரும் முன் பகுதியைக் கண்டுபிடித்தனர்.



அதற்குள் சென்று தேடிய போது சிதைந்த நிலையில் உடலொன்று விமானிகள் அணியும் உடையுடன் காணப்பட்டுள்ளது. அந்த உடல் துணை விமானி, ரெமி பலேஷலின் உடல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# என்று தணியப் போகின்றது நயினாதீவு மக்களின் ஏக்கம்

வந்தியத்தேவர்

நயினாதீவு மேற்கு கடற்கரையை அண்டிய 4 ஆம் வட்டாரத்தில் வசதிகள் ஏதும் இல்லாத குடிசைகளில் சில குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்தக் குடிசைகள் மிகவும் சிறியனவாகவும் பாதிக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. இவர்களுக்கு எந்தவித வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை. கழிப்பிட வசதிகள் கூட இங்கு இல்லை. சிறுபிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தாம் வசிக்கும் குடிசைகளில் ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ள விரும்பினாலும் காணி உரிமையாளர்கள் அதற்கு அனுமதிக்கிறார்கள் இல்லை. அரசுக்குரிய நிலங்கள் உண்டு அவற்றில் ஒரு வீட்டுத் திட்டத்தை உருவாக்கி எமக்கு உதவுவதற்கு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் முன்வருகிறார்கள் இல்லை எனக் கவலையுடன் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவில் அபிவிருத்தி வேலைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்கிறார்கள் அங்கு உள்ள மக்கள். வேலணைப் பிரதேச சபைக்கு மிக அதிகமான வருமானத்தை அளிக்கும் நயினாதீவுக்கு அங்கிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே அத்தியாவசியத் தேவைகளை வழங்கமுடியும். ஆனால் எமது பகுதியில் இருந்து கிடைக்கும் வருமானம் வேலணைப் பிரதேசத்தின் வேறு பகுதிகளுக்கு உதவுகிறது. எமக்குப் பிரயோசனம் அற்று இருக்கிறது என்பதும் அங்குள்ளவர்களின் ஆதங்கம் ஆகும்.

வீட்டுத் திட்டம்தான் இல்லை. வீதிகளைக் கூட உரிய முறையில் புனரமைப்பதில்லை. நீண்ட காலமாகத் திருத்தி அமைக் கக் கோரிய வங்களாவடி வீதிக்கு இப்போது தான் கற்கள் பரவப்பட்டுள்ளன. துறைமுகப் பாலத்தைப் புனரமைத்து தென்பகுதியில் உள்ள மக்கள் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்ளவும் வெளியிடங்களில் இறக்கும் எமது உறவுகளை இங்கு எடுத்து வருவதற்கும் வங்களா வடி துறைமுகம் புனரமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறப்பட்டபோதிலும் அது கவ னத்தில் எடுக்கப்படவில்லை என்கிறார்கள் இந்த மக்கள். பிரதான வீதியில் உள்ள ஆஸ்பத்திரி பகுதி யில் மிகவும் மோசமான பாதிப்புக் காணப்படுகின்றது.

அங்குள்ள மக்களின் மனக் குமுறல்கள் பல. கல்வி, குடிதண்ணீர், கடல் அரிப்பு, மின்சாரம் எனப் பட்டியல் இடுகிறார்கள். மீனவர்களின் கஷ்டங்கள் அதிகம் என்கிறார்கள். கடந்த காலங்களில் நயினாதீவில் இருந்து ஆண்டு தோறும் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றனர். மருத்துவர்கள், பொறியியலாளர்கள் என எங்களது மாணவர்கள் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர். இப்போது பல்கலைக்கழகம் செல்வது அருகி விட்டது. எதிர்காலத்தில் உயர்ந்த நிலையில் எமது பிள்ளைகள் வாழக்கூடிய சூழ்நிலை தகர்ந்துள்ளது என கவலைப்படும் பெற்றோர், எமது பாடசாலைகளில் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை என்கிறார்கள். வெளியில் இருந்து வரும் சில ஆசிரியர்கள் இங்கு தங்கியிருந்து கடமையைச் செய்கிறார்கள். எனினும் ஒரு சிலர் முற்பகல் 10 மணிக்கு வந்து பி.ப. ஒரு மணிக்குத் திரும்பி விடுகிறார்கள். அதிபர்களும் இதைக் கவனிப்பதில்லை. இந்த விட யத்தை பெற்றோர்கள் மட்டும் அன்றி சில மாணவர்களும் ஒப்புக் கொண்டனர். ஆசிரியர்களுக்கான வசதிகளைத் தனியார் போக்குவரத்துச் சங்கம் மற்றும் வெளி நாடுகளைச் சேர்ந்த எமது மக்கள் செய்து கொடுக்கத் தயாராக இருந் தும் இந்த நிலை உள்ளது. வலயம் இதில் அக்கறை காண்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படாததால் மக்கள் மிகவும் துன்பப்படுகின்றார்கள். வடக்கின் வசந்தத்தின் கீழ் மின்சாரம் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டு மின்னிணைப்புகளுக்காகத் தங்கள் வசம் இருந்த பொருள்களை அடைவு வைத்துப் பணத்தை செலுத்திய பல குடும்பங்கள் இன்னமும் மின் வெளிச்சம் கிடைக்கவில்லை எனவும் கூறுகிறார்கள். கடல் அரிப்பு மிகவும் மோசமானபிரச்சினையாக உள்ளது. அம்பாள் ஆலயத்துக்கு வடக்குப் பகுதியில் உள்ள வீதி இப்போது சிறிய வள்ளங்களைக் கட்டும் இடமாக மாறிவிட்டது.

கடந்த 9 வருடங்களாக இடம்பெற்ற கடல் அரிப்பினால் இந்த நிலை ஏற்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தெற்குக் கடற்கரையை அண்மித்து சுமார் 6 அடி ஆழத்துக்கு நீண்ட தூரம் மண் அகழ்வு இடம் பெற்றுள்ளது. கடல் நீர் உட் புகுந்தால் அது அந்தப் பகுதியில் அழிவுகளை ஏற்படுத்தி விடும். சுனாமி இடம்பெற்றபோது கடல் உட்புகுந்து சேதங்களை உண்டு பண்ணியதாகவும், எனினும் இங்கு பாதிப்பு எதுவும் இல்லை என அதிகாரிகள் தவறான தகவல்களை மேலதிகாரிகளுக்கு வழங்கி விட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர். தடுப்பணைகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

குடிதண்ணீரை வருடத்தின் முதல் நான்கு மாதங்கள் வரை ஓரளவுக்கு உள்ளூரிலேயே எடுக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் ஏனைய மாதங்களில் சாட்டியில் இருந்தே கொண்டு வரப்பட வேண்டும். நீர் விநியோகத்தைப் பிரதேச சபை மேற்கொண்ட போதிலும் உள்ளூரில் உள்ள சிலர் தாம் தண்ணீர் வியாபாரத்தைச் செய்வதற்காக வெளியில் இருந்து நீர் எடுத்து வருவதை தடுத்து விடுவதில் அக்கறை கொண்டுள்ளனர். வங்களாவடி வீதி அகலிப்பிலும் சிலர் சிறிது நிலம் விட்டுக் கொடுக்க மறுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

மீனவர்களுக்கும் பிரச்சினை உண்டு. இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை ஒருபுறம் அவை வராத நாள்களில் தொண்டி வள்ளங்கள் கரையிலிருந்து ஒரு 50 யார் தூரத்தில் தொழில் செய்வதால் தாங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் இது அரசியல் கலந்த பிரச்சினை என்பதால் கடற்படையினராலும் எதுவும் செய்ய முடியாது உள்ளதாகவும் கூறும் மீனவர் சங்கங்கள் மீனவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் கூட நயினாதீவுக்குக் கிடைப்பதில்லைஎனப் புகார்கூறுகிறார்கள்.

அந்த மக்களின் ஏக்கங்கள் நியாயமானது. தமது பகுதியில் அபிவிருத்தியும் முன்னேற்றமும் இல்லை என்பது அவர்களின் கவலை. அவர்களுக்கு ஆறுதல் தருவது நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயமும் ஸ்ரீநாக விகாரையும் தான். அம்பாள் ஆலய அறங்காவல் சபை முக்கிய தேவைகளை நிறைவு செய்வதற்காக ஆண்டுதோறும் கணிசமான பணத்தைத் தீவின் வளர்ச்சிக்காக வழங்குகிறது. விகாரையின் உதவிகளும் கஷ்டப்பட்ட மக்களுக்கு கிடைக்கின்றன. அரசுக்கு வரிப் பணம் செலுத்தும் மக்கள் அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய உதவிகளை எதிர்பார்ப்பது தவறல்ல.

மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்துவைப்பதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 60 மில்லியன் நிதியில் கொண்டு வரப்பட்ட கடற்பாதை ஆறு நாள்கள் கூடத் தொடர்ச்சியான சேவையை மக்களுக்கு வழங்கியதில்லை. கட்டுமாணப் பணிகளுக்கான பொருள்களை எடுத்துவர பெருந்தொகைப் பணத்தை வீண் செலவு செய்ய வேண்டி உள்ளது. பாதை சேவை சீராக இருந்தால் இந்த நிலை தவிர்க்கப்படும் என்பதையும் வலியுறுத்தும் மக்கள் வசதி படைத்தவர்கள் எதை வேண்டுமானாலும் பாதை மூலம் எடுத்துவர உதவுகிறார்கள். வசதி அற்றவர்களுக்குப் பாதைச்சேவை பயனளிப்பதில்லை என்ற செய்தியையும் தெரிவிக்கிறார்கள். நாட்டில் ஏற்பட்ட மாற்றம் நயினாதீவு மக்களின் கவலையைத் தீர்க்கும் மாற்றமாகவும் அமையட்டும்.




# 3 பிராந்திய விருதுகளை வென்றுள்ளது ஜனசக்தி

ஜனசக்தி காப்புறுதி நிறுவனமானது, அண்மையில் ஏசியன் பசுபிக் ஹோட்டல், சிங்கப்பூரில் இடம் பெற்ற 5ஆவது சி.எம்.ஓ. ஆசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் மீண்டுமொரு தடவை மூன்று பிராந்திய விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளது. சர்வதேச வர்த்தக நாம காங்கிரஸ் மூலம் ஏற்பாடு செய்யப்படும் வர்த்தக நாம செயற்திறனுக்கான உலகளாவிய விருதுகள் நிகழ்வானது உலகின் மிகச் சிறந்த வர்த்தக நாமத்தைக் கொண்ட நிறுவனங்களின் சாதனைகளை பாராட்டும் ஒரேயொரு மிகப் பெரிய விழாவாக கருதப்படுகிறது.

இதுவரை நிறுவனம் வென்றெடுத்த விருதுகளுள், நீண்டகாலமாக மூலோபாய வர்த்தக குறியீட்டை கட்டியெழுப்பியமைக்காக பெற்றுக்கொண்ட உலகளாவிய வர்த்தக நாம பேண்தகைமை விருது மிக கௌரவத்துக்குரிய விருதாக கருதப்படுகிறது. சி.எம்.ஓ கவுன்சிலானது பல தொழிற்றுறைகளைச் சேர்ந்த கூட்டாண்மை சந்தைப் படுத்தல் தலைவர்கள் மற்றும் வர்த்தகநாம இறுதி தீர்மானம் எடுப்பவர்கள் மத்தியில் தலைமைத்துவத்தை கொண்டாடுவதுடன், உயர்மட்ட அறிவு பரிமாற்றல் ஆகியவற்றை ஊக்குவித்து வருகின்றது.

இவ் விருதினை நாம் பங்களாதேஷ் பிரக் வங்கி போன்ற நட்சத்திர நிறுவனங்களுடன் இணைந்து வென்றமை மிகவும் பெருமைக்குரிய விடயமாகும். பிரக் வங்கி, உலகின் பெரும் அபிவிருத்தி மீது கவனம் செலுத்தும் அமைப்பாகும். எனவே அவர்களுக்கு இணையாக எம்மை எண்ணி இவ்விருதினை வழங்கியமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் என விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பொது முகாமையாளர் செஹாரா டி சில்வா தெரிவித்தார்.

ஜனசக்தி நிறுவனமானது வங்கியியல், நிதிச் சேவைகள் மற்றும் காப்புறுதி பிரிவுகளில் மேலும் இரு விருதுகளை வென்றெடுத்தது. 5ஆவது சி.எம்.ஓ விருதுகள் விழாவில் நாம் முதற்தடவையாக கொமர்ஷல் கிரெடிட் உடன் இணைந்து வென்றதுடன், இந்த பிரிவில் விருதினை வென்றெடுத்த இலங்கையின் ஒரேயொரு காப்புறுதி நிறுவனமாக ஜனசக்தி திகழ்கிறது.

தத்தமது வர்த்தகநாம சிறப்பை கட்டியெழுப்புதல் மற்றும் நிலைப் படுத்தல், மூலோபாய சந்தை நிலைப்பாடு, வாடிக்கையாளர் கேள்விகளுக்கமைய பெறுமதி சேர்ப்பு, விளம்பர செயற்பாடு களில் புதுமையான மூலோபாயங்கள், சி.எஸ்.ஆரின் நோக்கம், பேண் தகைமை கொள்கை மற்றும் ஒட்டுமொத்த வர்த்தகநாம செயற்றிறன் அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஜனசக்தி நிறுவனத்தின் பாடசாலை விழிப்புணர்வுதிட்டங்கள், ஆற்றுநீர் வடிகாலமைப்பு திட்டங்கள், மழை நீர் சேகரிப்பு மற்றும் ஏனைய திட்டங்கள் சமூக ஈடுபாட்டினை உறுதி செய்வதுடன், பேண்தகைமையில் தாக்கம் செலுத்தும் தேசிய திட்டங்களின் கூட்டாண்மை தொடர்புகளை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

வர்த்தககுறியை மூலோபாய மட்டத்தில் பேணுவதற்குரிய முறைமையை ஜனசக்தி கொண்டுள்ளதுடன், நீல்சன் போன்ற புகழ்பெற்ற சந்தை ஆய்வு நிறுவனத்தினால் தமது வர்த்தகநாம பெறுமதியை கண்காணித்து வருகின்றது. மேலும் நிறுவனமானது நிர்வாக செயல் திறன் பரிசீலனைகளில் பயன்படுத்தப்படும் வாடிக்கையாளர் திருப்திக்கான செயற்திறன் குறியீடுகளைக் கொண்டுள்ளது. (த)

# பாதணிகள் உற்பத்தி இருமடங்கு அதிகரிப்பு

இலங்கையின் பாதணி மற்றும் தோற் பொருள் உற்பத்தி ஏற்றுமதிகள் கடந்த வருடத்தில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தில் உற்பத்திகள் 110 மில்லியன்களாக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் தேசிய வருமானத்தில் தோற்பொருள் ஏற்றுமதி கைத்தொழில் முக்கிய பங்களிப்பைச் செலுத்துவதாகவும், 40 ஆயிரம் தொழில் நிலையங்கள் இயங்குவதாகவும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பந்துல எகொடகே தெரிவித்துள்ளார்.

இந்தத்துறையில் தொழில்நுட்பத்தையும், பெறுமதிகளையும் அதிகரிக்கும் வகையில் செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சாதாரண பாதணிகளை விட நாகரிக தேவைப்பாடுகளுக்கு ஏற்பட்ட பாதணிகளை ஏற்றுமதி செய்ய தாம் தீர்மானித்துள்ளதாகவும், இதனூடாக அதிகபட்ச பெறுமதி சேர்க்கப்படும் எனவும் பந்துல எகொடகே சுட்டிக்காட்டினார்.

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தி கண்காட்சியில் 114 உள்நாட்டு நிறுவனங்களும், 11 வெளிநாட்டு நிறுவனங்களும் தமது பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தன. (த)

# வாசகர் திருமுகம்



## சரவணபவன் எம்.பியை ஓய்வூதியர் ஒருபோதுமே மறக்கமாட்டார்கள்

புதிய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்கள் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக இங்கு ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ. சரவணபவன் அவர்கள் ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக எடுத்துக்கூறியமை எமக்கு மன ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது. எவருமே எமது அவலநிலை தொடர்பாக கண்டு கொள்ளாத நிலையில் கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள் ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆதாரங்களுடன் உரையாற்றியமைக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக 2004 ஆம் ஆண்டுக்கு முன்பாக ஓய்வுபெற்ற எம்மைப் போன்றவர்கள் மிகக் குறைந்த ஓய்வூதியத்துடன் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றோம். கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள் கூறிய தைப்போன்று ஓய்வூதிய முரண்பாடுகளைச் சரி செய்துவிட்டால் எமது துன்பம் ஓரளவாவது குறைந்துவிடும்.

சரா எம்.பி. அவர்களின் ஆலோசனைகளை இந்த அரசு நிறைவேற்றி வைக்கும் என்பதே எமது எதிர் பார்ப்பாகும். மேலும் ஓய்வூதியர் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில் எடுத்துக்கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

*மு.பஞ்சாட்சரம்*
*து.ராசநாயகம்*
*பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள்*

## அவசரத்துக்கு உதவாத மலசலகூடங்கள்

நெல்லியடி பொதுச் சந்தையில் நான்கு மலசல கூடங்கள் உள்ளன. அதில் இரண்டு ஆண்களுக்கு, இரண்டு பெண்களுக்கு. அவசரத்துக்கு மலசலகூடம் செல்ல வேண்டியிருந்தால் போகமுடியாத அளவுக்கு துப்புரவும் இல்லை. நல்ல வாளியும் கிடையாது. ஆண்கள் மலசலகூடத்தில் உள்ள ஒரு அறையின் கதவு உடைந்து காணப்பட்டது. அதனை எல்லோரும் கவனித்து இருப்பார்கள். இப்பொழுது அந்தக் கதவைக் கழற்றி வைத்துள்ளனர். அவசரத்துக்கு மலம் கழிக்கச் செல்வதற்கு இங்கு வசதிகள் இல்லை. தண்ணீர்க் குழாய்கள் உடைந்து காணப்படுகின்றன. சந்தை மேற்பார்வையாளர் இவற்றைக் கவனித்து சீர்செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*மு.கனகராஜ் நெல்லியடி*

## குறைபாடுகள் நீக்கப்படுமா?

மாதகல், சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம் ஆகிய பிரதேசங்களில் பேக்கரி உணவுகளைச் சுமந்து செல்லும் நடமாடும் வாகனங்களில் சுகாதார நடைமுறைகளில் குறைபாடுகள் நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த வாகனங்கள் வீதிகளில் செல்லும்போது அவற்றின் பின் கதவு திறந்த நிலையில் காணப்படுவதால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. மேலும் சில வாகனங்களின் சாரதியே விற்பனையாளராகவும் செயற்படுவதால் சுத்தம் பேணப்படாத நிலை காணப்படுகின்றது.

தற்போது தொற்றுநோய்கள் வேகமாகப் பரவிவரும் நிலையில் இத்தகைய வானகங்களும் சுகாதாரத்துக்கு ஏற்றவாறு செயற்பட்டால் மக்கள் பெரும் பயனடைவார்கள். மேலும் இந்த வாகனங்கள் மக்கள் குடியிருப்புக்களை நேரடியாகச் சென்றடைந்து மேற்கொள்ளும் சேவை பாராட்டுக்குரியது. மேலே குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தால் போதுமானது.

*க.சுரேஷ்குமார், அளவெட்டி.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# நலந்தானா?

தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தைப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், நாட்டியப் பேரொளி பத்மினியும் படத்தில் பட்டையைக் கிளப்பியிருப்பார்கள். அந்தத் திரைப்படத்தில், 'நலந்தானா? உடலும் உள்ளமும் நலந்தானா ?' என்ற பீ.சுசீலா பாடிய பாடல் வரும். அந்தப் பாட்டையும், அந்தப் பாட்டுக்குரிய சிவாஜியின் நாதஸ்வர வாசிப்பையும் யாரும் இலகுவில் மறந்து விடமுடியாது. அந்தப் பாட்டு, நேற்று நடந்த ஒரு சம்பவத்துடன் நூறு சதவீதம் ஒத்துப் போகின்றது. சிறைச்சாலையிலிருக்கும், திஸ்ஸ அத்தநாயக்காவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த நேற்று நேரில் சென்று சந்தித்துள்ளார். சிறையில் அடைக்கப்பட்டு ஒரு வாரத்தினுள்ளேயே அவரைச் சென்று பார்த்திருக்கின்றார்.

இதன்போது மஹிந்த, 'நலந்தானா? உடலும் உள்ளமும் நலந்தானா?' என்று திஸ்ஸ அத்தநாயக்கவைப் பார்த்துக் கேட்டிருப்பார். அதற்கு அவர், ஏதோ இருக்கின்றேன் என்ற பாணியில் தான் பதில் சொல்லியிருக்க முடியும். அவரால் வேறு எதைத்தான் சொல்லியிருக்க முடியும்.

மஹிந்தவுக்காக அதிஉச்ச விசுவாசத்தை வெளிக்காட்ட முனைந்த திஸ்ஸ அத்தநாயக்க – கட்சி தாவுவதற்காக வாங்கியதற்கும் கொஞ்சம் அதிகமாகவே – அதை வெளிக்காட்டியதால், இன்று இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். திஸ்ஸ போலி ஆவணம் வெளியிட்டு இந்தச் சிக்கலில் மாட்டுவதற்குக் காரணம், மஹிந்ததான் என்பது அடிமட்ட மக்கள் வரைக்கும் தெரிந்த உண்மை. ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில், சிங்கள – பௌத்த வாக்குகளை மாத்திரம் எப்படியாவது தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, எதிரணி தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு – அவர்கள் பாணியில் சொல்வதானால் – தனிநாட்டை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கின்றார்கள் என்பதைக் காட்ட முனைந்தார். அதற்காக பலிக்காடாவாக்கப் பட்டவர்தான் திஸ்ஸ.

மஹிந்த, திஸ்ஸவை தேடிச் சென்று சந்தித்ததன் பின்னணியில் அவரது சுயநலம் இல்லாமல் இல்லை. திஸ்ஸ அத்தநாயக்க, இந்தப் போலி ஒப்பந்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் 5 பேரது பெயரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் தெரிவித்திருக்கின்றார். அதில் ஒரு வேளை மஹிந்தவின் பெயரும் உள்ளடங்கியுள்ளதோ இதுவரை தெரியவில்லை.

இதனால் தான் அவசர அவசரமாக திஸ்ஸவைப் பார்த்து – சந்தித்து, அவரது கோபத்தை தணிக்க மஹிந்த முயன்றாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் இருக்குமோ தெரியவில்லை.

ஆனாலும், திஸ்ஸவைப் பார்த்து மஹிந்த இன்று 'நலந்தானா?' என்று கேட்டதை, நாளை மஹிந்தவைப் பார்த்து யார் கேட்கப் போகின்றார்கள்?

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஜனாதிபதியின் சாணக்கியம் வெளிப்பட வேண்டிய வேளை இது

புதிய அரசின் இடைக்கால வரவு - செலவுத்திட்டம் அமோக பெரும்பான்மையுடன் நிறைவேற ஒத்துழைப்பு வழங்கியிருந்த நாடாளுமன்ற எதிர்க்கட்சியினர், இப்போது பதவியிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய முன்னணியின் அரசை நெருக்கடிக்குள் தள்ளும் வகையிலான வேறொரு தந்திரத்தைக் கையாள முற்படுவதாகத் தெரிகிறது.

பொது ஒழுங்குகள், அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க மீது எதிர்க்கட்சியினர் தாக்கல் செய்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானமே, அத்தகைய ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

வத்தளை பிரதேச சபையின் தவிசாளர் தியாகரத்ன அல்விஸ் மற்றும் சிலர், அமைச்சர் அமரதுங்கவின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே, தவிசாளர் வெளியில் இழுத்துத் தாக்கப்பட்டு வடிகானுக்குள் தள்ளப்பட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தாக்கப்பட்டவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள், தாக்கியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் அதேசமயம், அமைச்சர் அப்பகுதிக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்ததன் பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சர் இந்தக் குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளார்.

தேர்தலுக்குப் பின்னரான இப்போதைய சூழ்நிலையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருப்பதாலும், முன்பு மஹிந்த ராஜபக்ஷவுடன் இருந்து மைத்திரிக்கு எதிராகச் செயற்பட்ட சிறிபால டி சில்வா போன்றவர்கள் இப்போது புதிய ஜனாதிபதியை ஆதரித்து நிற்பதாலும் -

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான தேசிய அரசுக்கு அமரதுங்க மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம், பெரும் சோதனையாக இருக்கப் போகின்றது. சிறிசேன, ரணில் அரசின் 100 நாள்கள் வேலைத்திட்டத்தை ஆதரிக்கத் தயாராய் இருப்பதாகக் கூறியுள்ள எதிர்க்கட்சியிலிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர், அமரதுங்கவின் பிரச்சினையைத் தனிப்பட்ட விடயமாகக் கருத முற்படுகிறார்கள்.

ஆனால் அது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கெதிரான பலப்பரீட்சையாகவே இருக்கும் என்று அவர் கருதுவதாகத் தெரிகின்றது.

ஜோன் அமரதுங்க மீதான குற்றச்சாட்டுக்களை பொலிஸில் முறைப்பாடு செய்து தீர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கும்போது, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமாகக் கொண்டுவர முற்படுவது ஆட்சிக்கு எதிரான செயற்பாடு என்றே ரணில் கருதுகிறார். எனவேதான் ஜோன் அமரதுங்க மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபையில் நிறைவேறும் பட்சத்தில், தாம் நாடாளுமன்றைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலை நடத்த பரிந்துரைக்க நேரும் என்பதாகத் தமது கட்சியினருக்கு அவர் அறிவித்துள்ளார்.

எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் 14 பேர் கையெழுத்திட்டுள்ள பிரேரணை நிறைவேறும் பட்சத்தில், அது நிச்சயம் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானமாகவே அமையும். அதன் காரணமாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி பிரதமர் பரிந்துரைத்தாலும், எதிர்த்தரப்பினர் ஆட்சி அமைக்க முற்படக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தமக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்பதைக் காட்டி தமக்கு ஆட்சி அமைக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்று வாதிடவும் கூடும். அவ்வாறாயின் மைத்திரி - ரணில் 100 நாள்கள் வேலைத்திட்டம் தவிடுபொடியாகிவிடும். ஏற்கனவே தோல்வியில் சோர்ந்து போயுள்ளவர்கள் ஊக்கம் பெற்று விடுவார்கள். பெரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட மைத்திரி - ரணில் - சந்திரிகா உடன்பாடும் பயனற்று போய்விடும்.

மிகச் சிக்கலான இந்த நிலைமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவ்வாறு கையாளப்போகிறார் என்பதிலேயே 100 நாள்கள் வேலைத்திட்டம் முற்றுமுழுதாக நிறைவேறுமா இல்லையா என்பது தெரியவரும். மொத்தத்தில் அவர், கழைக் கூத்தாடியின் நிலையில் இருக்கிறார். கட்சித் தலைவர் என்ற முறையில் கட்சியையும் பகைக்க முடியாது. இணக்கப்பாட்டில் ஆட்சியிலுள்ள அரசையும் கைவிட முடியாது. 100 நாள்கள் வேலைத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி ஒரு சுமுக முடிவை அவர் எடுக்கமுடியும். அதுவே இப்போது ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கான சாத்தியமான வழியாகத் தெரிகின்றது.........

# இலங்கை விடயத்தில் அமெரிக்கா இரட்டை வேடம்

## தொடர்ந்து ஏமாற்றப்படும் ஈழம்வாழ் தமிழ் மக்கள்

சேரலாதன்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஒத்திவைப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க நாட்டின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தம்மைச்சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களிடம் இதனை நாசூக்காகத் தெரிவித்ததாகவும் தெரியவருகின்றது.



இதன்மூலமாக அமெரிக்காவின் இரட்டை வேடம் மீண்டுமொரு தடவை நிரூபிக்கப்பட்டு விட்டது. புதிய இலங்கை அரசுடன் உறவுகளை மேம்படுத்தும் நோக்குடனேயே அமெரிக்கா இவ்வாறு நடந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசுக்குப் பல்வேறு வகையிலும் உதவும் மனப்பான்மை அமெரிக்க அரசிடம் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் முன்னைய அரசினால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணையும் பின்னடைவை எதிர்கொள்ளப்போகின்றது. தேர்தல் காலத்தின்போது மைத்திரிபால சிறிசேன வழங்கிய முக்கிய வாக்குறுதிகளில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் படையினர் மீது சர்வதேச விசாரணை எதுவும் இடம்பெறுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்தமை இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வாக்காளர்களைக் கவரும்பொருட்டு அவர் இதனைக் கூறுவதாக அப்போது கருதப்பட்டது. ஆனால் தற்போதைய களநிலைவரங்களைப் பார்க்கும்போது போர்க்குற்றம் புரிந்த சகலரையும் மைத்திரி அரசு காப்பாற்ற முனைவது தெளிவாகத் தெரிகின்றது. இதனால் மஹிந்தவின் தோல்வி போர்க்குற்றம் புரிந்தவர்களை மகிழ்ச்சியடைச் செய்யுமென்பதில் ஐயமில்லை.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் உலக வரலாற்றிலேயே மோசமானவைகளாக அமைந்துவிட்டன. இதற்கான முழுப் பொறுப்பையும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் மஹிந்தவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ, அப்போதைய இராணுவத் தளபதியான சரத்பொன்சேகா ஆகியோர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இராணுவத்தினர் தமிழ்ப் பெண்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட கொடியதும், அருவருக்கத்தக்கதுமான செயற்பாடுகளையும், தமிழர்களைக் குரூரமான வகையில் சித்திரவதை செய்து கொன்றொழித்ததையும், வெள்ளைக்கொடி ஏந்தியவாறு சென்ற புலிப் பேராளிகளையும், புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களையும் உலக சம்பிரதாயங்களை மீறிக் கொடூரமாகக் கொலை செய்ததையும் இந்த உலகம் பார்த்துக்கொண்டு தான் இருந்துள்ளது. ஐ.நா. கூட இந்த விடயங்களில் பெரும் தவறிழைத்துள்ளதாகக் குற்றச்சாட்டுக்களும் பரவலாக எழுந்துள்ளன. ஆனால் மஹிந்தவும், அவரைச் சேர்ந்தவர்களும் இவற்றையெல்லாம் புறமொதுக்கித்தள்ளிவிட்டனர். மஹிந்த சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படுவது அமெரிக்காவின் கண்களை உறுத்தியதால் அவரைத் தமது வழிக்குக் கொண்டுவரும் பொருட்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேறச் செய்தது. இதனால் தமக்கும் நீதி கிடைக்குமென்ற எதிர்பார்ப்பு இலங்கைத் தமிழர்களிடத்தில் எழுந்தது.

ஆனால் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அமெரிக்கக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. இங்கு ஏதோ பெரிய மாற்றத்தை அமெரிக்கா கண்டு கொண்டதான தோற்றப்பாடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஒரு மாதகாலமாக மைத்திரி தலைமையிலான அரசு என்ன மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தமிழர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களின் பிரச்சினைகள் யாவும் தொடர்ந்தும் கிடப்பில் போடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. ஜனாதிபதி பதவியில் அமர்ந்து கொண்டவரின் பெயர்தான் மாறியதே தவிர, கொள்கைளில் பெரிய மாற்றம் எதனையும் காணமுடியவில்லை. அத்துடன் சர்வதேச போர்க்குற்ற விசாரணை இடம்பெற்று தமக்கு நீதி கிடைக்குமென்ற தமிழர்களின் எதிர்பார்ப்பும் தவிடுபொடியாகி விட்டது.

ஆகவே புலிகளை அழிப்பதற்கு அமெரிக்கா உதவியதும், இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை இடம்பெறுவதற்கு முன் நின்றதும், தற்போது அந்த விசாரணையை நீர்த்துப்போகும் வகையில் செயற்படத் துணிந்ததும் அமெரிக்காவின் இரட்டைவேடத்தை அம்பலப்படுத்தியுள்ளது. அந்த நாடு தனது நலன்களைப் பேணுவதற்காக எதனையும் செய்யத் துணியுமென்ற கூற்றும் இதன்மூலமாக நிரூபணமாகியுள்ளது.





# திடீரென அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அடாவடிச் செயற்பாடுகள்

## இலங்கை மீனவர்களைக் காப்பாற்ற எவருமில்லையா?

ராஜராஜன்

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லை தாண்டி வரும் இந்திய மீனவர்களின் கைது நடவடிக்கைகள் சற்று ஓய்ந்து இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால், இந்திய மீனவர்கள் மகிழ்ச்சியும், ஆறுதலும் அடைந்திருப்பார்களென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றபோது, இந்திய மீனவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைய வேண்டுமென்ற எண்ணக் கருத்தில் இருந்ததை இந்திய ஊடகங்களில் காணமுடிந்தது. பின்னர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும் அவர்கள் தமது மகிழ்ச்சியைவெடிகொளுத்தி வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது பல தசாப்தங்களாவே இடம்பெற்று வருகின்றது. கச்சதீவு– இந்தியாவுக்கு உரியதாக இருந்த வரையில் அவர்கள் ஒருவித உரிமையுடன் இலங்கைக் கடல் எல்லைக்குள் சுதந்திரமாக நடமாடி வந்தனர். கச்சதீவை அண்டிய கடலில் மீன் வளம் அதிகமாக இருந்ததால் அந்தப் பகுதியை அவர்கள் தமது பிரதானமான தொழில் மையமாக மாற்றிக் கொண்டனர். ஆனால் கச்சதீவு– இலங்கையிடம் கைமாறிய நாளிலிருந்து இந்திய மீனவர்கள் தமது நிம்மதியை இழந்து விட்டனர் என்று தான் கூற வேண்டும்.

பொதுவாக இந்திய மீனவர்களென நாம் அழைத்தாலும் தமிழ்நாட்டு மீனவர்களையே அது குறிக்கும். அவர்கள் தமிழ் நாட்டின் பல்வேறு கரையோர மாவட்டங்களிலும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். பல நூற்றுக்கணக்கான படகுகளில் ஆழ் கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தொழில் மட்டுமே அவர்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்குகின்றது.

ஆனால், இலங்கைக் கடற் பரப்பில் அவர்கள் தொழில் செய்வதால் பாதிக்கப்படுபவர்கள் இலங்கைத் இலங்கைத் தமிழ் மீனவர்கள் என்பதுதான் வேதனைதரும் விடயமாக அமைந்துள்ளது. தமிழ் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

வேறு தொழில்கள் இல்லாததால் தமது உயிரைத் துச்சமாக மதித்து அவர்கள் தொழிலை மேற்கொள்ள வேண்டியதொரு கட்டாயத்தில் உள்ளனர். அவர்களில் பலர் தமது உயிர்களைக் கடலில் கரைத்த சம்பவங்கள் ஏராளமாக நிகழ்ந்துள்ளன. ஆனாலும் இன்றுவரை அவர்கள் தமது தொழிலைக் கைவிடாது தொடர்கின்றனர்.

இலங்கைத் தமிழ் மீனவர்களைப் பொறுத்தவரையில், இந்திய மீனவர்களின் செயற்பாடுகள் அவர்களைப் பெரிதும் பாதித்து வருகின்றது. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் நூற்றுக்கணக்கான படகுகளுடன் ஊடுருவுவதும், இலங்கை மீனவர்களால் கடலில் போடப்பட்டுள்ள வலைகளைச் சேதமாக்குவதும் வழமையான நிகழ்வுகளாக இருந்தாலும், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் என்றுமில்லாத அளவு அத்தகைய செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங்கைக் கடற்படையினர் கூட, இந்திய மீனவர்களின் விடயத்தில் காட்டி வந்த கடும்போக்கான செயற்பாடுகளைத் தளர்த்தியுள்ளனர். முன்னரெல்லாம் அவர்களது கண்களுக்குக் கடும் வெறுப்பை ஊட்டிய அதே மீனவர்கள் மைத்திரியின் வருகையின் பின்னர் உவப்பாக மாறியதன் மர்மமும் புரியவில்லை. ஆனால் இந்த மாற்றத்தினால் முழுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் இலங்கைத் தமிழ் மீனவர்களே என்பது இங்கு சுட்டிக்காட்டப்படத்தான் வேண்டும். இந்தியத் தமிழ் மீனவர்களும், இலங்கைத் தமிழ் மீனவர்களும் தொப்புள்கொடி உறவைக் கொண்டவர்கள் என்பது வேறு விடயம். ஆனால்தாயும்பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்பது தான் யதார்த்தம். மஹிந்த காலத்தில் இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது மேற்கொண்ட அட்டூழியங்கள், இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு உதவுவதற்கானவையல்ல என்ற உண்மையை எவரும் புரிந்து கொள்வார்கள். ஏனென்றால் அதே கடற்படையினர் இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கும் பல அட்டூழியங்களை மேற்கொண்டுவந்துள்ளனர். ஆனால் இந்திய மீனவர்களும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இலங்கைக் கடற்பரப்பில் வைத்துதாக்கப்பட்டார்கள், உயிரிழக்கச் செய்யப்பட்டார்கள், கைது செய்யப்பட்டார்கள், ஏராளமான மீன்பிடி வள்ளங்களும் பறிமுதல் செய்யப்பட்டு இன்னமும் நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்திய மீனவர்களின் கட்டுப்பாடற்ற செயல்கள் அதிகரித்துள்ளதால் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர, தமக்கு வேறு வழி தெரியவில்லையென இலங்கைத் தமிழ் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட தொழில்முறைகளைக் கடைப்பிடிப்பதால், இங்குள்ள மீன்வளம் அழிந்து வருவதாகவும் கடலில் காணப்படும் பவளப் பாறைகளை எதிர்காலத்தில் பார்க்கவே முடியாது போகக் கூடுமெனவும் அவர்கள் கூறுகின்றனர்.

ஒருபுறம் இந்திய மீனவர்களும் மறுபுறம் தென்னிலங்கை மீனவர்களுமாகத் தமதுதொழில் நடவடிக்கைகளுக்குக் கேடு விளைவித்து வருவதாகவும் அவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

ஆகவே இந்த விடயத்தில் இலங்கை – இந்தியஅரசுகள் உடனடியாக விரைந்து செயற்பட வேண்டிய தேவை இப்போது அவசியமாக ஆகியுள்ளது. அவ்வாறு செயற்படத் தவறும் பட்சத்தில் இந்திய– இலங்கைத் தமிழ் மீனவர்களது மோதலாகவே அது மாறிவிடும்.



“

இந்தியத் தமிழ் மீனவர்களும் இலங்கைத் தமிழ் மீனவர்களும் தொப்புள்கொடி உறவைக் கொண்டவர்கள் என்பது வேறு விடயம். ஆனால் தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு என்பதுதான் யதார்த்தம்.

மஹிந்த காலத்தில் இலங்கைக் கடற்படையி னர் இந்திய மீனவர்கள் மீது மேற்கொண்ட அட்டூழியங்கள், இலங்கைத் தமிழ் மீனவர்களுக்கு உதவுவதற்கானவையல்ல என்ற உண்மையை எவரும் புரிந்து கொள்வார்கள்.

# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 5 | | | 3 | 9 | 7 |
| | 9 | | 8 | | | 6 | | |
| | 3 | 1 | | | | 5 | | 8 |
| 9 | | | | 8 | | 1 | 7 | |
| | | 3 | 9 | | 2 | 4 | | |
| | 6 | 8 | | 4 | | | | 9 |
| 4 | | 6 | | | | 9 | 2 | |
| | | 9 | | | 6 | | 5 | |
| 3 | 1 | 7 | | | 5 | | | 4 |

# எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 7 | 9 | 8 | 2 | 4 | 3 | 5 |
| 9 | 5 | 8 | 6 | 3 | 4 | 1 | 2 | 7 |
| 3 | 2 | 4 | 1 | 5 | 7 | 9 | 6 | 8 |
| 7 | 9 | 3 | 5 | 4 | 1 | 6 | 8 | 2 |
| 8 | 4 | 5 | 2 | 9 | 6 | 7 | 1 | 3 |
| 2 | 6 | 1 | 3 | 7 | 8 | 5 | 9 | 4 |
| 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 2 | 4 | 9 |
| 4 | 7 | 2 | 8 | 6 | 9 | 3 | 5 | 1 |
| 1 | 3 | 9 | 4 | 2 | 5 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### பூரணத்துவம் எல்லையற்றது

பூரணத்துவம் பெற்ற மனிதன் எல்லையற்ற பேரானந்தத்தில் திளைத்து வாழ்கிறான். பேரின்பம் பெறுவதற்கு எந்தப்பொருளை அடைய வேண்டுமோ அந்த ஆண்டவனை அடைந்து அவன் இறைவனுடன் பேரானந்தத்தில் திளைக்கிறான். பூரணத்துவம் எல்லையற்றது. எப்பொழுது ஓர் ஆன்மா முழுமையையும் எல்லையற்ற நிலையையும் அடைகின்றதோ அப்பொழுதே அது பிரம்மத்துடன் ஒன்றாகிவிடவேண்டும்.

## நாளை

**தை-28**
**புதன்கிழமை**
**11.02.2015**

திதி: ஸப்தமி: பி.ப.04.49 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப.12.29
சுபநேரம்: 05.04-06.34 வரை
இராகுகாலம்:12.34-02.04 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்


| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 60 | 50 | 20 | 40 | 40 | 40 |
| கத்தரி | 60 | 60 | 60 | 40 | 40 | 60 | 30 |
| கரட் | 120 | 160 | 140 | 120 | 160 | 190 | 200 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 80 | 50 | 30 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 140 | 120 | 150 | 100 |
| பாகல் | 100 | 80 | 100 | 100 | 200 | 190 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 60 | 40 | 80 | 100 | 40 |
| பெ.வெங்காயம் | 120 | 70 | 90 | 70 | 90 | 100 | 65 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 100 | 80 | 140 | 110 | 100 |
| பூசணி | 80 | 80 | 90 | 80 | 120 | 110 | 80 |
| தக்காளி | 180 | 180 | 200 | 170 | 200 | 240 | 210 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 | 80 | 120 | 90 | 75 |
| கீரை | 10 | 20 | 20 | 20 | 20 | 40 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 30 | 20 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 180 | 200 | 180 | 160 | 200 | 380 | 160 |
| புடோல் | 70 | 50 | 80 | 80 | 110 | 110 | 85 |
| கோவா | 120 | 80 | 120 | 80 | 160 | 140 | 90 |
| வெண்டி | 120 | 100 | 100 | 80 | 120 | 150 | 100 |
| போஞ்சி | 140 | 130 | 140 | 160 | 180 | 210 | 140 |
| லீக்ஸ் | 160 | 240 | 240 | 220 | 300 | 210 | 200 |
| தேங்காய் | 40 | 60 | 40 | 40 | 50 | 40 | 35 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 80 | 70 | 50 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 40 | 60 | 60 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 30 | 10 | 20 | 20 |
| கறிமிளகாய் | 200 | 130 | 200 | 240 | 200 | 240 | 200 |
| இராசவள்ளி | 100 | 100 | 140 | 80 | 120 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 05. | 04 | 05 | 05 | 03 | 03 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 700 | 300 | 400 |
| நண்டு | 250 | 350 | 300 | 150 | 320 |
| கணவாய் | 450 | 600 | 500 | 300 | – |
| பாரை | 600 | 450 | 450 | 400 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | 500 | – |
| சீலா | 300 | 400 | 350 | 300 | 350 |
| விளை | 600 | 450 | 400 | 300 | 370 |
| முரல் | 250 | 350 | 350 | 300 | – |
| கும்பிளா | 450 | 350 | 500 | 200 | 300 |
| கிழாக்கன் | 300 | 500 | 350 | 400 | – |
| ஒரா | 350 | 350 | 350 | 300 | – |
| திரளி | 150 | 250 | 200 | 100 | – |
| நகரை | 150 | 250 | 250 | 150 | 270 |
| சூடை | 120 | 150 | 80 | 100 | 60 |
| ஒட்டி | 150 | 250 | 200 | 100 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 150 | – |
| பாலை | 500 | 250 | 400 | 200 | – |
| வாழை | 150 | 150 | 300 | 200 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 200 | 200 |

## மாதுளையின் மகத்துவம்

மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய மூன்று இரகங்கள் உள்ளன. இனிப்பு மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் இதயத்துக்கும், மூளைக்கும் மிகுதியான சக்தி கிடைக்கிறது. பித்தத்தைப் போக்குகிறது இருமலை நிறுத்துகிறது. புளிப்பு மாதுளையைப் பயன்படுத்தினால் வயிற்றுக் கடுப்பு நீங்குகிறது. இரத்த பேதிக்குச் சிறந்த மருந்தாகிறது. தடைபட்ட சிறுநீரை வெளியேற்றுகிறது. பித்தநோய்களை நிவர்த்தி செய்கிறது. குடற்புண்களை ஆற்றுகிறது. எந்த வகையான குடல் புண்ணையும் குணமாக்குகிறது. மாதுளம் விதைகளைச் சாப்பிட்டால் இரத்தவிருத்தி ஏற்படும். சீதபேதிக்குச் சிறந்த நிவாரணம் அளிக்கும். தொடர்ந்து நோயின் பாதிப்பால் பலவீனம் அடைந்தவர்கள் மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் உடல் தேறும், உடல் எடை கூடும். தொண்டை, மார்பு, நுரையீரல், குடலுக்கு அதிகமான வலிமையை உண்டாக்குகிறது. ஆண் தன்மையில் பலவீனம் உள்ளவர்கள் மாதுளம்பழம் சாப்பிடுவதால் மிகுந்த சக்தியை அடைய முடிகிறது. மாதுளம்பழத்தைச் சாப்பிட்டால் விக்கல் உடனே நிற்கும், அதிக தாகத்தைப் போக்கும். மாதுளம் பழச்சாற்றில் கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் உடல் சூட்டு நோய்கள் நீங்கும். சரீரம் குளிர்ச்சியடையும். காய்ச்சல் தணியும். மாதுளம் பழச்சாற்றில் தேன் கலந்து காலை ஆகாரத்துக்குப் பின் தினமும் சாப்பிட்டால், ஒரு மாத உபயோகத்தில் உடல் ஆரோக்கியமும் தெம்பும் உண்டாகும்.






## தலைவலியை நிரந்தரமாக போக்க வேண்டுமா?

தலைவலி வந்துவிட்டால் போதும், உடனே மாத்திரை போடும் பழக்கம் பலரிடம் உள்ளது. அதுவும் 'பனடோல்' பலரிடமும் கைவசம் இருக்கும். சில விற்றமின்கள், உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்லாமல், மூளை நரம்புகளை முடுக்கி, முழு அளவில் இயங்கச் செய்கின்றன. அதனால், விற்றமின் சத்துகள் தரும் பச்சைக் காய்கறிகள், பழங்கள் போன்ற உணவு வகைகளை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிலும், பி12 போன்ற விற்றமின்கள் அதிக பயன் தரும். விற்றமின்கள் போல, கனிம சத்துக்கள் மிக முக்கியம். அதுவும், தலைவலி போன்ற வலிகள் வராமல் தடுக்கின்றன. தலைவலிக்கு முக்கிய காரணம், சோர்வு தான். போதுமான தூக்கமின்மையால் சோர்வு ஏற்படுகிறது. குறைந்தபட்சம் ஒருவருக்கு நாள்தோறும் ஏழு மணி நேர தூக்கம் தேவை. அது கிடைத்து விட்டால், தலைவலி வரவே வராது.

# கணவனே கண் கண்ட தெய்வம்



கணவனே கண்கண்ட தெய்வம் என்பதும், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்பதும் பாரம்பரியமாகக் கூறப்படும் முதுமொழிகளாகும். பண்டைத்தமிழர் பண்பாடு, கலாசாரம் ஆகியன காலப்போக்கில் மாற்றமடைந்தும் மருவிச் செல்வதையும் காண்கின்றோம். 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என நன்னூலார் சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

அடுக்களையில் அடுப்பெரித்த பெண்கள் இன்று அலுவலகங்களில் நிர்வாகம் செய்ய, அவர் தம் கணவர் வீட்டு வேலைகளுடன் சமையல் செய்வதையும் காண்கின்றோம்.

எனவே வாய்க்கு ருசியாக கணவர் சமைக்க வேண்டும் என மனைவி எதிர்பார்க்கக் கூடுமல்லவா? பழையன கழிதலையும் புதியன புகுதலையும் புரிந்து கொள்வோம். பண்பாட்டுப் பிறழ்வையும் கலாசார சீரழிவையும் சீர் செய்வோம்.

வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகூறும் திருவள்ளுவர் வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தில் மனைவியின் மாண்பு பற்றிப் பேசுகின்றார்.

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்' என்ற குறளில் மனைவியின் கற்பே எல்லாவற்றையும் விட மேலானது என வலியுறுத்துகின்றார்.

'தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' என் குறளின் மூலம் மனைவிக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்றும் வேண்டிக் கேட்ட போது பெய்யும் பயன் மிக்க மழையை போன்றவளே மனைவி என்றும் போற்றுகின்றார்.

'புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை
இகழ்வார் முன் ஏறு போல் பீடு நடை' என்ற குறள் நல்ல மனைவி வந்து வாய்க்கவில்லையாயின் கணவனுக்கு தலை குனிவும் இகழ்ச்சியும் ஏற்படுவதை விளக்குகின்றது. இவ்வாறே வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தில் வாழ்க்கைத் துணையான மனைவி பற்றிய கணவனின் எதிர்பார்ப்புக்களை வள்ளுவர் பெரிதாக வெளிப்படுத்துகிறார்.

இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் இல்வாழ்வான் ஆகிய குடும்பத்தலைவனாம் கணவனின் சிறப்பியல்புகள் கூறப்படுகின்றன. ஆனால் கணவன் பற்றிய மனைவியின் எதிர்பார்ப்புக்கள் வலியுறுத்தப்படவில்லை. காரணம் கணவன் குடும்பத் தலைவனாகவும் மனைவி வாழ்க்கைத் துணையாகவும் இயல்பாகவே இறைவனால் படைக்கப்பட்டமையாகும். வாழ்க்கைத்துணையாம் மனைவி தனக்கெனக் கணவனிடம் பெரிதாக எதிர்பார்க்காது இன்பத்திலும் – துன்பத்திலும் கணவனுடன் இணைந்து கணவனுக்கு துணை போவதே மனைவிக்கு மேன்மையாகும்.

ஞ.தர்மலிங்கம்
பருத்தித்துறை




முத்துசரவணன்




கைரேகைப் பலன் குறித்து நேற்றைய உதயனில் பிரசுரமாகி இருந்தது. அதில் ஏழு வகைக் கைகளின் அமைப்புக்களில் அடிப்படைக்கை, சதுரக்கை நீள்சதுரக்கை, [illegible]துவக்கை, கூம்பு வடிவக்கை மக்கட்பேறுகை, திருமணரேகை ஆகியவற்றின் அமைப்புகள் அதற்கான விளக்கங்களும் பலன்களும் பிரசுரமாகி இருந்தன. அதன்மிகுதி இன்று பிரசுரமாகின்றது.

**உதாரண விளக்கங்கள் சில**

1.ஒருவருடைய கையில் சூரிய ரேகை கையின் அடிப்பாகத்தில் தோன்றி உள்ளங்கையின் மத்திய பாகத்தைக் கடந்து சனி மேட்டில் முடிவடைகிறது. விதி ரேகை பிளவுபட்டு–வலிமை இழந்து அதன் எல்லைவரை வளர்ந்திருக்கிறது. இதய ரேகை, குரு மேட்டிலிருந்து ஆரம்பித்து சுக்கிர மேட்டை அடைந்து பல பிளவுகளாகப் பிரிகிறது. நான்காவது விரலுக்குக் கீழே திருமண ரேகைகீழ் நோக்கி வளர்ந்திருக்[illegible]. புத்திரேகையின் விசித்திரமான புள்ளிகளும் மத்தியில் ஒரு தீவுக் குறியும் காணப்படுகின்றது. இரண்டாவது செவ்வாய் மேட்டின் முடிவில் ஒரு நட்சத்திரக் குறி இருக்கிறது.

இத்தகைய ரேகைகள் அமைப்புடையவர் மகா புத்திசாலியாக, ஆனால் தவறான போக்குடையவராக இருப்பார். இவருக்குப் பல மொழிகள் தெரிந்திருக்கும். உடலில் காந்த சக்தி இருக்கிறதோ என்ற வகையில் பார்த்தவர்களைக் கவர்ந்து விடுவார். அதேபோல இவருக்கு எதிரிகளும் பலர் தென்படுவார்கள். இது செவ்வாய் மேட்டைப் பார்த்தாலே தெரியவரும்.

இந்தக் கையை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்குப் பெரிய வெற்றி வீரராகத் திகழ்வார் என்று எண்ணத்தோன்றும். ஆனால் உன்னிப்பாகக் கவனிக்கும்போது பல சிறு ரேகைகள் பின்னிக் கிடைப்பதையும் பெரிய ரேகைகள், கெட்ட நிலையிலிருப்பதையும் அறிவார்கள்.

**உதாரணம்:**

இவர் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து ராஜபோகத்துடன் வாழ்ந்தாலும் இவர் செய்யும் தவறுகளால் வீழ்ச்சியடைந்து எதிரிகளின் தொல்லைக்குள்ளாகி வேதனைப்பட்டு சாவை எதிர்நோக்குவார்.

2.இந்தப் பெண்ணுடைய புத்தி ரேகை சந்திர மேட்டைக் கடந்து மணிக்கட்டை அடைகிறது. இரண்டாவது விரலுக்குக் கீழே சனி மேட்டில் ஒரு வட்டக்குறி இருக்கிறது. ஆயுள்ரேகையில் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

புத்தி ரேகை சந்திர மேட்டை நோக்கிச் சென்றதால் தற்கொலை மனப்பான்மை சிறு பராயத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். இதற்கு உதவியாக இவருடைய சூரிய ரேகையின் தொடக்கத்தில் ஒரு தீவுக்குறி தோன்றியிருக்கிறது.

இருபத்தியெட்டாவது வயதில் இவருக்குப் பெரிய ஏமாற்றம் ஏற்பட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் வாய்ப்பு இருக்கிறது.

3.இவருடைய கையில் ஆயுள் ரேகையும் புத்தி ரேகையும் ஒன்றை ஒன்று தொடாமலிருக்கின்றன. புத்தி ரேகை சந்திர மேட்டின் மத்தியில் வளைந்து முடிவடைகிறது; புத்தி ரேகையும் ஆயுள் ரேகையும் தனித்தனியாக நன்றாக அமைந்திருப்பதால் இவர் சிறந்த கவிஞராகவும் நாடகாசிரியராகவும் கற்பனை வளம் மிக்கவராகவும் இருப்பார். விதி ரேகை சுக்கிர மேட்டுக்கு அருகில் வளர்ந்திருக்கிறது. இரண்டாவது விதி ரேகை ஆயுள் ரேகையின் மத்திய பாகத்திலிருந்து தொடங்குகிறது. குருமேட்டைச் சென்றடைகிறது. ஆனால் இவருடைய கையில் சூரிய ரேகை தெளிவாக இல்லை. இவர் சிறு பராயத்தில் மிகவும் கஷ்டப்பட்டு வறுமையில் வாடியவர். வாலிப வயதை அடைந்த போது தான் இவருடைய வாழ்க்கையில் மாற்றம் ஆரம்பமாகின்றது. அன்றிலிருந்து இவர் இயற்கையான சூரியனைப் பார்க்கவே முடியாது.

இவர் புகழ் வாய்ந்த கவிஞனாகவும் நாடகாசிரியராகவும் இருப்பதாலேயே இரவே இவருக்கு பகலாகி விடுகிறது. அதனால் சூரியனைக் காணும் வாய்ப்பே கிடையாது.

4.சிலர் கையில் இரட்டை புத்தி ரேகை காணப்படுகிறது. ஒரு புத்தி ரேகை ஆயுள் ரேகையுடன் இணைகிறது. ஒருபுத்தி ரேகை குரு மேட்டிலிருந்து ஆரம்பமாகி உள்ளங்கையை நோக்கிச் சென்று முடிவடைகிறது. இரண்டு புத்திரேகையில் ஒன்று ஆயுள் ரேகையுடன் இணைவதால் இவர் சிறந்த கலைஞராகவும் பிறர் மனநிலையை அறியும் வல்லுநராகவும் விளங்குவார். இவர் முப்பது வயதுக்கு மேல்தான் புகழ் பெறுவார். பலரால் பாராட்டப்படுவார். இவரே புதுத்துறைகளைக் கண்டுபிடித்து பிரபலமடைவார். ஆனால் அந்த வயதுக்குள் இவர் பலதுறைகளில் பணிபுரிவார். பல இன்னல்களுக்கும் உள்ளாவார்.

5.இவருடைய கை சதுரக்கை, நீண்டவிரல்கள். இவருடையகையில் புத்திரேகையும், ஆயுள் ரேகையும் ஒன்றாக இணைந்து ஆரம்பமாகிறது. ஆயுள் ரேகையும் சூரிய ரேகையும் தெளிவாகக் காணப்படுகின்றன. இந்தக் கையில் ஒரு விசித்திரமான ரேகை விதி ரேகையின் மத்தியிலிருந்து ஆரம்பமாகி குரு மேட்டின் அடிப்பாகத்தை வந்து அடைகிறது. அதே சமயம் இந்த ரேகை சூரிய ரேகை, செவ்வாய் ரேகை இரண்டையும் வெட்டிக் கொண்டு பாய்ந்து செல்கிறது.

இவர் பெரிய தொழிற்சாலை அதிபராகவும் பல பொருள்களை உற்பத்தி செய்பவராகவும் பெரும் பணக்காரராகவும் இருப்பார். தொழிலில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்வார். அதே சமயம் ஏழை எளியவர்களுக்கு உதவ எந்த நேரத்திலும் தயாராக இருப்பார்.

6.நீள் சதுரக்கை கட்டை விரல் நன்றாக அமைந்திருக்கிறது. அது இவருடைய மன வலிமையைப் புலப்படுத்துகிறது.

குரு மேட்டிலிருந்து புத்தி ரேகை ஆரம்பமாகி கீழ்நோக்கிச் செல்கிறது. அதனால் இவரின் கீழ் பலர் பணிபுரிவார்கள். இவருடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள்.

விதிரேகையும் சூரிய ரேகையும் தெளிவாக இருக்கின்றன. ஆனால் சூரியரேகை சனிமேட்டை நோக்கிச் செல்வது அவ் வளவு நல்லதல்ல.

இவருடைய கையில் சுண்டுவிரலானது மிகவும் சிறியதாக உள்ளதால் இவருக்கு கல்வி அறிவு அதிகம் இருக்காது. ஆனால் சூரிய ரேகை ஒளியாகவும் குருமேட்டிலிருந்து புத்திரேகை ஆரம்பமாவதாலும் பெரும் பேச்சாளராக புகழுடன் விளங்குவார். ஆனால் புத்திரேகையும் இதய ரேகையும் சேர்ந்து கையின் மறுபக்கத்தை நோக்கிச் செல்கிறது. இவர் ஒரே வழியில் சென்று வெற்றி வாகை சூடுவார்.

7.இவருடைய கையில் ஆயுள் ரேகையும் புத்தி ரேகையும் குரு மேட்டுக்கு அடிப்பாகத்தில் இணைந்து ஆரம்பமாகின்றன. விதிரேகை மணிக்கட்டிலிருந்து புறப்பட்டு குரு மேட்டுக்கும் சனி மேட்டுக்கும் இடையில் சென்று அடைகிறது. இதய ரேகை குரு மேட்டின் அடிப்பாகத்திலிருந்து புறப்பட்டு கையில் மறு முனைவரை சென்று முடிவடைகிறது.

விதிரேகை பல இடங்களில் வெட்டியும் சிறுசிறு இணைரேகைகள் தோன்றியுமிருப்பதால் இவருக்குச் சிறு வயதிலேயே உயிருக்கு ஆபத்தான சம்பவங்கள் நடைபெறும். நோய், கண்டம் போன்றவை தோன்றினாலும் விதி ரேகை நீண்டு செல்வதால் இவர் உயிருக்கு ஆபத்து ஏற்படாது. விதிரேகை துண்டிக்கப்படுவதால் இவரால் ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்க முடியாது. வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள் சாதாரணமாக நடைபெறும். ஆனால் வாழ்நாள் முழுவதும் யாராவது இவருக்கு உதவி செய்து கொண்டேயிருப்பார்கள்.

8.கூம்புக் கை விரல்கள் விரிந்தும் உள்ளங்கையில் குழி விழுந்தும் இருக்கின்றன. விதிரேகையும், ஆயுள் ரேகையும் தனித்தனியாகவும் இடைவெளி அதிகமாகவும் காணப்படுகின்றன. விதிரேகை குருமேட்டின் அடிப்பாகத்திலிருந்து ஆரம்பமாகிறது. விதிரேகையும் சூரிய ரேகையும் மெல்லியதாகவும், தெளிவாகவும் காணப்படுகின்றன. சூரிய ரேகை சூரியமேட்டிலிருந்து ஆரம்பமாகிறது. இவருடைய சூரிய ரேகை ஒன்றே போதும். இவர் வாழ்க்கையில் பெரிய வழக்கறிஞராக விளங்கி ஏராளமாக பொருள் சேர்ப்பார். இரண்டு ஆயுள் ரேகைகள் தோன்றி ஒரு சந்திரமேடை நோக்கி வந்து முடிவதால் இவர் இரட்டை வாழ்க்கை வாழ்வார்.

9. ஒருவருடைய கையில் குருமேடு நன்கு அமைந்தும் சூரியரேகை, சூரிய மேட்டிலிருந்து தொடங்கி தெளிவாகவும் வெட்டுகள் ஏதுமில்லாமலும் இருந்தாலே போதுமானது. அவர் கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டவராகவும், பலர் போற்றக் கூடியவராகவும் இருப்பார். ஆயுள் ரேகை தீர்க்கமாக அமைந்து விட்டால் நீண்ட ஆயுளுடன் புகழுடன் விளங்குவார்.

10.சூரிய ரேகை சூரிய மேட்டிலிருந்து ஆரம்பமாகி உள்ளங்கையில் முடிவடைந்து, ஆயுள் ரேகையுடன் புத்தி ரேகையும் இணைந்து தொடங்கி ஆரோக்கிய ரேகை வரை நீண்டு சந்திர மேட்டை அடைந்தால் அவர் திட ஆரோக்கியத்துடன் நல்ல அறிவாளியாகவும் நீண்ட ஆயுளுடன் ஒருகுறைவுமின்றி வாழ்வார்.

11.ஆயுள்ரேகை நன்றாக அமைந்து அதில் சதுரக் குறிஇருந்தால் அவரை எந்தச் சக்தியாலும் வெல்ல முடியாது. எத்தகைய விபத்திலும் அவர் உடல் உறுப்புக்கள் எதற்கும் ஒரு தீமையும் ஏற்படாது.

12.சந்திர மேட்டில் புத்தி ரேகை வந்து முடிவடைந்தால் அவர் சொந்த நாட்டை விட்டுப் பிற நாடுகளுக்குச் சென்று தொழில் நடத்துவார். வேற்று மொழி பேசும் அந்த நாட்டில் பெரும் செல்வம் சம்பாதித்து சொந்த நாட்டுக்குத் திரும்புவார். அவரது திருமணம் கூட வெளிநாட்டு மங்கையுடனேயே நடைபெறும்.

13.ஒருவருக்கு புத்தி ரேகை குரு மேட்டுக்கு அடியிலிருந்து புறப்பட்டுக் கையின் மறுமுனைவரை சென்று முடிவடைந்து, சூரிய ரேகை பிரகாசமாகவும் வெட்டுகளோ வேறு இணை ரேகைகளோ இல்லாதிருந்தால் அவர் பெரிய அறிஞராகவும் நகைச்சுவையுடன் பேசக் கூடியவராகவும் இருப்பார்.

14.ஒருவருக்குப் புதன் மேடு நன்றாக அமைந்து புத்தி ரேகை குரு மேட்டின் அடியிலிருந்து ஆரம்பமாகி சந்திர மேடு வரை சென்று அடைந்திருந்தால், அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும். அவர் செய்யும் தொழில் எதுவானாலும் வெற்றி பெறுவார்.

(வளரும்)


# தன்னலமற்ற சேவை

முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினான். இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தான். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச் செய்தான். கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தன. பல நாள்களுக்குப் பின்னர் ஒருவாறு கோயில் கட்டி முடிந்தது. கோயில் பணிகள் பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான். அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்று மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார். மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அந்தக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது. காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான். ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது. 'நான் இந்தப் பக்கம் வந்தது கூட இல்லை... அப்படியிருக்க இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?" என்று வியப்புடன் கேட்டாள் கிழவி. நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, "மன்னா! இந்தக் கோயில் பணிக்காக ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத் தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன்; மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களைக் கொடுத்து, தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது," என்றாள் கிழவி. "தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார். தன்னலமற்ற தங்கள் தொண்டை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும் என்றான்.



## வர்ணம் தீட்டலாம் வாங்க...





## நான்தான் காடு

நான்தானே நான்தானே
காடு என்பது நான்தானே
நான்தானே நான்தானே
காடு என்பது நான்தானே!
நாட்டில் ஓடும் நதிகளைக்
கொடுப்பதும்
நான்தானே நான்தானே
காவியம் சொல்லும் காகிதம்
கொடுப்பதும்
நான்தானே நான்தானே!
மண்ணின் வளத்தை
உயர்த்திக் கொடுப்பதும்
நான்தானே நான்தானே
மழையை மண்ணில்
நிற்கச் செய்வதும்
நான்தானே நான்தானே!
உயிரைக் காக்கும் மூலிகை
கொடுப்பதும்
நான்தானே நான்தானே
உயிர் கோளத்தில் காப்பது
உன்னை
நான்தானே நான்தானே!
நான்தானே நான்தானே
காடு என்பது நான்தானே
நான்தானே நான்தானே
காடு என்பது நான்தானே!





# நட்புக்காக தியாகம் செய்வது தப்பா?

நம்மில் பெரும்பாலானோர் வாழ்க்கையை வாழும் விதம் விசித்திரமானது. பலர் வாழ்க்கையை நேரடியாக, அனுபவ பூர்வமாக வாழ்வதைவிட மனத்தினுள்ளே கற்பனை உலகில் வாழ்கிறார்கள். இதில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. ஒன்று வெறும் பகற்கனவில் வாழ்வது. மனக்கோட்டை கட்டுவது. இன்னொன்று நட்பு, காதல், போன்ற உறவுகள் பற்றி ஏற்கனவே கதைகளிலும், சினிமாவிலும் சித்திரிக்கப்பட்டிருக்கும் பொய்யான கருத்துக்களின்படி வாழ முயல்வது. இவை இரண்டுமே வாழ்க்கையை உண்மையாக அனுபவித்து வாழாமல் கற்பனையில் வாழ்வதுதான். சமூகமும் கலாசாரமும் முன்னிறுத்தும் மாதிரி வாழ்க்கை, உண்மையான வாழ்க்கையை விட முக்கியமானதாக ஆகிவிட்டிருக்கிறது. அந்த மாதிரி வாழ்க்கையின் சட்டகத்தினுள் தன்னைப் பொருத்திக் கொள்ளும் முயற்சியில் தன் தனித்துவத்தின் மதிப்பை அறிந்துகொள்ளும் வாய்ப்பை முற்றிலுமாக இழந்துவிடுகிறோம். வாழ்க்கை அனுபவத்தைத் தன் சுய ஒளியில் காணும் தரிசனத்தை, ஒப்பில்லாத அந்த அனுபவத்தை, நாம் இழந்துகொண்டிருக்கிறோம். இதுபோல் வாழ்வது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதுதான். இதில் நேரடி வாழ்க்கையின் அர்ப்பணிப்புத் தேவையில்லை.

மற்றவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கமும் அவர்களிடமிருந்து நல்ல பெயர் வாங்கும் எதிர்பார்ப்பும் இதன் பின்னணியில் இழைந்திருக்கின்றன. இதில் உண்மையான வாழ்க்கை அனுபவமும் உண்மையான சந்தோஷம், நேரடி வாழ்க்கையின் சவால்களைச் சந்திப்பதில் ஏற்படும் அக வளர்ச்சி, இவையெல்லாம் பலியாகின்றன. இது பற்றிய புரிதல் இல்லாத வரைக்கும் வாழ்க்கையை நாம் வீணாக்கிக்கொண்டுதான் இருக்கிறோம். நல்ல ஒரு நட்பு, சில பொய்யான எதிர்பார்ப்புகளினால் பிரச்சினைக்கு உள்ளாகக் கூடும். உறவுகளிலேயே நட்புதான் கட்டுப்பாடுகள் மிகவும் குறைவாக உள்ள அமைப்பு.

அவரவர் தனித்துவம் குறித்த அங்கீகரிப்பு, தன்னியல்பான சுதந்திரம் அனைத்தும் பொதுவாக நட்பில்தான் அதிகம். இந்தத் தன்மைகள் காதல், மண வாழ்க்கை போன்ற உறவுகளில் பெருமளவுக்கு மறுக்கப்படுகின்றன.



## தெரிந்து கொள்ளுங்கள்

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடிக்கும் முன்னரே, ஹவாஸ் தீவுக்கு மக்கள் சுற்றுலா சென்று வந்துள்ளனர்.
ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு ஒன்றரை அடி நீளத்துக்கு மேல் இருக்கும்.
ஒட்டகத்தின் முதுகுப் பகுதி வளைந்திருந்தாலும், அதன் முதுகெலும்பு வளைவுகளில்லாமல் நேராக இருக்கும்.



# 5 வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## தவறின் தொழிற்சங்கப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 10

வன்னியில் 5 வருடங்கள் பணியாற்றி சேவைக் காலத்தை நிறைவு செய்த யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வன்னி வலயங்களால் விடுவிக்கப்பட்டபோதும் இன்னும் யாழ்.மாவட்டத்துக்கு மீள உள்வாங்கப்படவில்லை.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என்றால் எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் உள்ளிட்ட 8 பேருக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் வழங்கிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

5 வருடங்களுக்கு மேலாக நியமிக்கப்பட்ட கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசங்களில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றியுள்ளோம். 2014 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் கோரப்பட்டு அதற்குத் தகுதி பெற்று வலயங்களால் விடுவிக்கப்பட்ட நிலையில் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி கிடைக்க வேண்டிய இடமாற்றம் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக இடம்பெறவில்லை.

தேர்தல் நிறைவடைந்து ஒரு மாதம் ஆகிவிட்டபோதும் இன்றுவரை இடமாற்றம் வழங்கப்படவில்லை. அதற்கான முன் நடவடிக்கைகள் கூட இன்னும் எடுக்கப்படவில்லை. அதனால் நாமும் எமது குடும்பத்தினரும் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எனவே எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எமக்குச் சாதகமான பதில் வழங்கப்படவேண்டும். நாம் கோரிய வலயத்தில் எமக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்த இடமாற்றம் வழங்கப்படவேண்டும். நாம் கோரிய காலத்தினுள் சாதகமான பதில் கிடைக்கப்பெறாவிட்டால் எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.


பொதுத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ள நிலையில் வடக்கு கல்வி அதிகாரிகள் எமது இடமாற்றத்தை இழுத்தடித்து வருகின்றனர். இதனால் அடுத்த வருடம் வன்னியிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற வேண்டியவர்களும் அடுத்த வருடத்திலிருந்து பாதிக்கப்படவுள் ளனர்.

ப.1 விரிவு

வடக்கு கல்வி அமைச்சர் தலைமையில் இன்று இடம்பெறவுள்ள கூட்டத் திலாவது எமது இடமாற்றம் தொடர்பில் கலந்துரையாடவேண்டும் – என்றுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை வடக்கு கல்வி அமைச்சருக்கு அனுப்பி பிரதிகள் வடக்கு ஆளுநர், வடக்கு முதலமைச்சர், மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர், வடக்கு கல்வி அமைச்சுச் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக் குழு, ஆசிரியர் தொழிற் சங்கங்கள் என்பனவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-4)



முல்லைத்தீவு மாவட்ட செயலகம் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்தொழில் அமைச்சரால் இன்று திறந்து வைக்கப்பட உள்ளது. முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இந்தச் செயலகம் 220 மில்லியன் ரூபா செலவில் 3 மாடியைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

(ற-421)


### தவறிவிட்டது

229, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த கணேசலிங்கம் குகதர்சன் என்பவரது தேசிய அடையாளஅட்டை (871403414V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (04.02.2015) அன்று கல்வியங்காட்டிற்கும் தனங்கிளப்புக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P:- 077 799 0728

### விற்பனைக்கு

தேங்காய் எண்ணெய் ஊற்றும் சிறிய இயந் திரம், சாப்பாட்டு மேசை, விரிவுரை கதிரை கள், அலுமினிய பித்திங், கண்ணாடிக் கதவு கள், T.V வகை, கொம்பியூட்டர், கலர்பிறின் டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு 075 529 5746

### கடை விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியில் இருந்து 50m தூரத்தில் கே.கே.எஸ் பக்கமாக உள்ள கடை ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 748 8999

### பணியாளர் தேவை

நாகம் அரிசி ஆலை, புளியம் பொக்கணைச்சந்தி, கண்டாவளையில் உள்ள எமது அரிசி ஆலை க்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். அனுபவம் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

021 790 4406

### BIOLOGY

புதன்கிழமை தோறும் காலை 6.15- 8.15 வரை

2015 Fresh/Revision மாணவர்கள் வரலாம்.
English / Tamil Medium அச்சடித்த தாள் lk its & Bitz 1972-2014 MCQ Collection
நரேந்திரசிங்கம் மாஸ்டர் 077 773 0840

### CHEMISTRY

புதன்கிழமை தோறும் மாலை 5.00 -7.00 வரை

11/02/2015 ஆரம்பம்
Science Corner, யாழ்ப்பாணம்


# போராட்டத்தைப் பொலிஸார் அடக்க முயன்றதால் குழப்பம்

யாழ்ப்பாணம், பெப். 10

சுழிபுரம் குடாக்கனை பகுதியில் உள்ள தவறணையால் தினமும் பாதிப்பு என்று கூறி அப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து முன்னெடுத்த போராட்டத்தை பொலிஸார் அடக்க முற்பட்டபோது அங்கு பதற்றம் நிலவிச் சிலரைப் பொலிஸார் விசாரணைக்கும் அழைத்திருந்தனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு அறிவித்ததையடுத்து அங்கு சென்ற அவர் முரண்பாட்டைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த தவறணை பல வருடங்களாக அங்கு காணப்படுவதோடு அதனால் தினமும் இடையூறு விளைவிக்கப்படுவதாக அப்பகுதி மக்களால் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதனால் அந்தத் தவறணையை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் குறித்த பிரதேச சபையினருக்கும் மனு வழங்கியிருந்தனர். 15 நாள்களில் தீர்வு தருவதாகப் பிரதேசசபையால் கூறப்பட்டது. ஆனால் சனிக்கிழமை இரவு குறித்த தவறணைக்கு முன்பாகவுள்ள இரண்டு வீடுகளின் வேலிகளுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. அதனால் விரக்தியடைந்த அப்பகுதி மக்கள் குறித்த தவறணையை அடித்து உடைத்துள்ளனர்.

இதனால் பனை, தென்னை அபிவிருத்திச் சங்கத்தினர், தவறணை தாக்கப்பட்டது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். வேலி எரிப்புத் தொடர்பில் பொதுமக்களாலும் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் குறித்த பகுதிக்குச் சென்றிருந்த பொலிஸார் அங்கிருந்தவர்களிடம் முரண்பட்டுச் சிலரைக் கைது செய்ய முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து அங்கு குழப்பம் ஏற்பட்டது. சிலரை பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு வருமாறு பொலிஸாரால் கூறப்பட்டது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அப்பகுதி மக்கள் அறிவித்தனர்.

இதனையடுத்து அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொலிஸாருடனும் மற்றைய தரப்பினருடனும் கலந்துரையாடி நிலைமையைச் சீர்ப்படுத்தினார்.

(த-4)


### கிளிநொச்சி, கரைச்சி, புளியம்பொக்கணை
### நாகதம்பிரான் ஆலய
### பங்குனி உத்தர பொங்கல் விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்
### 12.02.2015 வியாழக்கிழமை பி.ப ஒரு மணி



நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 03.04.2015 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதன் ஒழுங்குகள் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 12.02.2015 வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு ஆலய வளாகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.
இக் கூட்டத்துக்கு ஆலய போசகர்களான மதிப்பிற்குரிய அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் அவர்களும், மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் த. முகுந்தன் அவர்களும், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களும், கிளிநொச்சி மாவட்ட சகல திணைக்கள தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
நாகதம்பிரான் ஆலயம்- புளியம்பொக்கணை

(51353) (10.3)

### பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கான வாழ்வக அனுமதி - 2015

2015ஆம் ஆண்டுக்கான பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய மாணவர்களை வாழ்வகத்தில் இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்குமிடம், உணவு, கல்வி வசதிகள், ஏனைய வசதிகள் யாவும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும். பார்வையற்ற பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளுக்குச் சமமாகக் கல்வியில் முன்னேறக் கூடிய வகையில் உரிய வாய்ப்பு வசதிகள், வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளை பற்றிய விவரங்களுடன் எதிர்வரும் 28.02.2015 இற்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடன் கடிதம் மூலமாகவோ அன்றி நேரிலோ தொடர்புகொள்ளலாம்.

தொலைபேசி: 021 2240 146

தலைவர்,
வாழ்வகம்,
சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம்

### Vacancy Announcement

MAG
saves lives builds futures

**Senior Mechanic**
Vavuniya
[Contract Position]

**MAG** is a not-for-profit organization clearing landmines, unexploded ordnance (UXO) and other remnants of conflict for the benefit of communities worldwide.

MAG is seeking to recruit a suitably qualified individual for the position of **Senior Mechanic** on Contract basis. To be considered for this post, you need to demonstrate competency in the following criteria.

**Requirements:**

- Minimum of 5 years previous experience in the above position.
- Needs to prove all documents where he has followed the course in respective organization/ outside.
- Ability to Provide efficient and responsive mechanical solutions when machines breakdown.
- Ability to ensure that the quality of work undertaken by mechanics is to a high standard, and only use temporary fix solutions as a last resort.
- Monitor and observe the completion of mechanical repairs when external suppliers are conducting work.
- Ability to maintain a manual job card registry of all mechanics.
- Ability to records the daily activity of his/her team and submits a weekly report to his/her Line Manager.
- Has a sound understanding of Financial and Logistical paperwork and procedures.
- Adaptable and flexible approach to work and ability to work well in a team.
- Needs to prove all documents where he has followed the course in respective organisation / outside.

Salary will be based upon the MAG Salary Scale on a fixed term contract basis.
Applications are to be submitted to the MAG office in Vavuniya. 242 Mannar Road, Nellukulam.
Applications should include a cover letter that describes your relevant experience as well as your current curriculum vitae with details of two non-related referees.
A full job description is available upon request.

**Application Deadline: 5:00 pm Monday, 16 February 2015.**

We thank all applicants, but only those short-listed will be contacted. This post is on a fixed term contract basis, with possibility of renewal subject to donor funding. MAG is an equal opportunities employer.

(55204) (4.3.7)

# குழம்பம் விளைவித்தால் தயங்காது அறையுங்கள்

## மக்களுக்கு சந்திரிகா அறிவுரை

கொழும்பு, பெப்.10
சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு மக்கள் பிரதிநிதியாவது குழப்பங்களை விளைவித்தால் அல்லது முரண்பாடுகளைத் தோற்றுவித்தால், பொதுமக்களாகிய நீங்கள் அவர்களுடைய கன்னத்தில் அறையுங்கள் – இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க.

"மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எமது பயணத்தை ஆரம்பிக்கும்போது எம்மோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்திருக்கவில்லை. ஆனால் மக்களாகிய நீங்கள் எமக்கு ஆதரவாக இருந்தீர்கள். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தப் பயணத்தில்பெரும் பங்களிப்பைச் செய்திருந்தது. மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கறைபடியாதவர்களாக இருப்பது மிக அவசியமாகும்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் நிட்டம்புவ பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த புதிய ஆட்சிப் பயணத்தில் இணைந்து கொள்வோமானால் நல்ல முறையில் பண்பானதும் ஒழுக்கமுள்ளதுமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

பண்பான நாட்டை கட்டியெப்பும் பயணத்தில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் குழப்பங்களை விளைவித்தால் அல்லது குழப்பகரமான சூழலை தோற்றுவித்தால் எந்தவிதத்திலும் தயங்காது பொது மக்கள் அவர்களது கன்னத்தில் அறையுங்கள். மோசடிக்காரர்கள், குற்றமிழைத்தவர்கள் எவரும் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட அருகதையற்றவர்கள். இந்த விடயத்தில் நான் உங்களோடு இருப்பேன்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)


### கண்ணீர் அஞ்சலி

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியை திருமதி இரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்புக் கணவர்

**ஆழ்வைனார் பாலசுப்பிரமணியம்**

அவர்கள் 05.02.2015 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.



### கண்ணீர் அஞ்சலி

**சின்னத்துரை விஜயமூர்த்தி (மூர்த்தி)**



(கட்டட ஒப்பந்தக்காரர்-மேசன்)

மண்ணில்: 19.11.1954 | விண்ணில்: 04.02.2015

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், நாவலடி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விஜயமூர்த்தி அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நாவலடி, உடுப்பிட்டி.
T.P.No:- 0779489650

பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 . 05 . 1939



மறைவு 11 . 01 . 2015

**அமரர் திருமதி மகேஸ்வரி நடராசா (சிறிமா)**

அன்பெனும் விழுதினை ஆலமரம் போல் பரப்பி
பண்பெனும் பாடத்தை பகலவன் போல் ஒளி பரப்பி
திக்கிக்கும் இனிய இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்க்கைப் புத்தகத்தின்
இரகசியத்தியாயத்தையும் இன்பமாக கடந்து
உள்ளத்தில் கள்ளமில்லாத உத்தமியாய்
உறவுகளை அரவணைத்து காலத்தை வென்று நின்ற குல விளக்கே அம்மா!
உங்கள் ஆத்மா பாணாவிடை சிவன் பாதார விந்தங்களில்
சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

11.01.2015 இறைபதம் அடைந்த எமது பாசமிகு குடும்பத் தலைவியின் மரணச் சடங்கில் இறுதிவரை கலந்துகொண்டவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் துண்டுப்பிரசுரம் மூலமும், பத்திரிகை மூலமும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இன்றைய வீட்டுக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(56640)(12.7)

33/3, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# காணாமற்போனோரில் பலர் வெளிநாடுகளுக்கு

கிளிநொச்சி, பெப். 10
காணாமற்போனவர்களில் பலர் வெளிநாடுகளுக்கே செல்கிறார்கள் என்றும், அவர்களை யாருமே கடத்தவில்லை எனவும், வெளிநாட்டுக்குச் செல்ல வசதியாக அவர்கள் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களையும் கொண்டே வீட்டை விட்டு வெளியேறுகிறார்கள் எனவும் கிளிநொச்சிப் பொலிஸார் கூறுகின்றனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கிளிநொச்சி விவேகானந்தர் நகரில் காணாமற்போனதாகக் கூறப்பட்ட 16 வயதான ந.கௌசிகன் என்பவர் கடத்தப்படவில்லை எனக் கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயசாந்த டி சில்வா தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் இவ்வாறு காணாமற்போகும் சம்பவங்கள் நடைபெறுவதும், இது குறித்து உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இது குறித்துக் கேட்டபோதே பொறுப்பதிகாரி இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணிக்குப் பின்னர் கௌசிகன் என்ற ஜி.சி.ஈ சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவனைக் காணவில்லை எனவும், யாராவது கடத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்திலும் அவரது பெற்றோர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

ஆனால் இந்த மாணவனை யாரும் கடத்தவிலை. கௌசிகன் வீட்டில் இருந்து வெளியில் வரும்போது அவரது உடைகள், கடவுச்சீட்டு, பணம் போன்றவற்றை எடுத்து கொண்டே போயுள்ளார். இவற்றை வைத்துப் பார்க்கும்போது அவரை யாரும் கடத்தவில்லை. அவர் தனது சொந்த விருப்பத்தின் பேரிலேயே வீட்டை விட்டுச் சென்றுள்ளார். ஆயினும் கௌசிகனைத் தேடுவதற்காக அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்ல கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி கிளிநொச்சி சாந்தபுரத்தில் காணமற்போன மூன்று பிள்ளைகளின் தாயான செ.மங்களேஸ்வரி என்பவரை காணவில்லை என அவரது கணவன் செல்வகுமார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அந்தப் பெண்ணையும் யாரும் கடத்தவில்லை. அவரும் கடவுச்சீட்டை எடுத்துகொண்டு வெளிநாட்டுக்குச் சென்றதாகவே அறியமுடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை பாடசாலை மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சை எழுதிய பின்னர் இவ்வாறான தவறான முடிவுகளை எடுக்கிறார்கள். எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் மீது தீவிர கவனம் செலுத்த வேண்டும்–என்றார். (த–21)

# ஐ.தே.கவுடன் இணைந்தே பொதுத் தேர்தலில் போட்டி

## கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.10
எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே போட்டியிட உள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கண்டி, அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களில் மஹாநாயக்க தேரர்களை கடந்த சனிக்கிழமை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிரிசேனவை ஜனாதிபதியாக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் முயற்சிக்கு, ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தே ஆதரவு வழங்கினோம். எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்தே போட்டியிட உள்ளோம். "– என்று அவர் கூறினார்.

"இன, மத பேதங்களை மறந்து சமூக அடிப்படையில் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இந்த அமைச்சின் செயற்பாடுகள் மூலம் சமூக ரீதியான ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்"– என்றும் அவர் தெரிவித்தார். (ற)


### மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ கந்தையாகுருக்கள் கணபதிப்பிள்ளை குருக்கள்**



சரசாலையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி மற்றும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ கந்தையா குருக்கள் கணபதிப்பிள்ளை குருக்கள் (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை சிவ ஐக்கியமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா குருக்கள்-இராசம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், குகனேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், இரஜனி, இரகுதாஸ், இரஞ்சனி, குகதாஸ், திவாகரதாஸ் ஐயர், மனோகரதாஸ், வைகுந்ததாஸ் ஐயர் ஆகியோரின் தந்தையும், சபாரத்தின ஐயர், சாந்தி, ஸ்ரீதரக்குருக்கள், விமலாதேவி, தனலக்ஷ்மி, ரேவதி, சிந்துஜா ஆகியோரின் மாமனும், சோமசுந்தர ஐயர், இராசநாயக்குருக்கள், லோகநாதன் பரமேஸ்வரி, யோகமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் நாளை (11.02.2015) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இரனைமடு இந்து மயானத்தில் சமாதி வைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வில்சன் றோட்,
4ஆம் கட்டை, கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.


# கட்சி அரசியலை கைவிட்டு நாடு குறித்து சிந்தியுங்கள்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, பெப்.10
கட்சி அரசியலின்றி, நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

கொழும்பு தெமட்டகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு குறப்பிட்டுள்ளார்.

"இந்த கட்சி முறை என்பது இந்த நாட்டிலிருக்கும் பெரும் புற்றுநோயாகும். இந்த கட்சி முறைமையால் நாம் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"சிறிலங்கா சுதந்திர கட்சி, ஐ.தே.க., ஜே.வி.பி எனப் பிரிந்து, பிரிந்து எமக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்த கட்சி முறைமையை ஒரு புறம் வைத்து விட்டு, நாட்டின் எதிர்காலத்திற்காக செயற்பட வேண்டிய இயலுமை எமக்கு ஏற்பட வேண்டும். ஊழல், மோசடி, பலாத்காரம் இல்லாத நாடொன்றை கட்டியெழுப்பவே எதிர்பார்க்கின்றோம்"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மல்வத்த, அஸ்கிரிய தேரர்களை சந்தித்தார் ஹக்கீம்

கொழும்பு, பெப்.10
நேற்று கண்டிக்குச் சென்ற நகர்ப்புற அபிவிருத்தி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் மல்வத்த மஹா நாயக்க தேரரான, திப்பெட்டுவாவை சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய மஹா மஹாநாயக்க உடுகம புத்தரஹித்த தேரர் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் கெட்டம்பேயிலுள்ள நீர் வடிகால் அமைப்பு சபைக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டார். அமைச்சருடன் நீர்வடிகால் அமைப்பு சபையின் தலைவர் சிரேஷ்ட பொறியியலாளர் கே.எம்.அன்சார் அலாவுதீனும் கலந்து கொண்டார். (ற)

# மு.கா. காட்டிய அவசரம் புரியாத புதிராகவுள்ளது

## இவ்வாறு கூறுகின்றார் ரிசாத் பதியுதீன்

"கிழக்கின் முதலமைச்சராக முஸ்லிம் ஒருவரே வரவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதையும் நாங்கள் பரிசீலிக்கத் தயா ராக இருக்கின்றோம் என இரு. தினங்களுக்கு முன் நான் சந்தித்தபோது இரா. சம்பந்தன் என்னிடம் தெரிவித்தார். இவ்வாறு நல்லசமிக்ஞையை கூட்டமைப்பு காட்டும்போது முஸ்லிம் காங்கிரஸ் அவசரம் காட்டியிருக்க வேண்டிய தேவையில்லை"– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

"இவ்வாறு இருக்கும் போது அவசரம் அவசரமாக முஸ்லிம் காங்கிரஸ் திடீரென ஒரு முடிவு எடுத்து அவசரம் அவசரமாக பதவிப்பிரமாணம் ஏன் மேற்கொண்டார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு முதலமைச்சர் விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் தேசிய கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது சம்பந்தமாகவும் தம்மிடம் 11 உறுப்பினர்கள் உள்ளனர். முதலமைச்சர் பதவியை தமக்கு விட்டுத்தரும்படியும் கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பேசியதாக பத்திரிகைகளில் நான் படித்தேன். அதே போல் என்னையும் சந்தித்து கட்சி சார்பாக பேச இருப்பதாக கூறினார்கள். இந்த விடயத்தில் சகோதரர் ரவூப் ஹக்கீம் அவர்கள் தமது கட்சிக்கு முதலமைச்சர் பதவியைத் தரும்படி கேட்டிருக்கின்றார். அவருடைய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும் ஏலவே உடன்பாடு இருக்கின்றது. அதாவது கிழக்கு மாகாண ஆட்சி யில் முதல் இரண்டரை வருடங்களை ஐ.ம.சு. கூட்டமைப்பு முதல் அமைச்சராக பதவி யாற்றுவது. இறுதி இரண்டரை வருடங்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு கொடுப்பதாகவும் இவ்வாறு இருக்கின்ற போது இவ்விரு கட்சிகளும் சிநேக பூர்வமாக கதைத்து ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்க முடியும்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசிய கட்சியும் ஏனைய கட்சி களும் இணைந்து ஒரு தேசிய அரசை அமைக்க முடியுமாக இருந் தால் மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெற வைப்பதற்கு த.தே. கூட்டமைப்பும் நாங்களும் இதுபோல முஸ்லிம் காங்கிரஸ் ஒன்று இணைந்து செயற்பட்டது போல் ஏன் எங்களுக்குள் ஒரு இணக்க பூர்வமான முடிவை எடுக்க முடியாது?."– என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ற)


## மெய்வன்மைப் போட்டி

யாழ். இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகவலிகாமவலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினராகவலிகாமவலய ஆசிரிய ஆலோசகர் (கணிதம்) ஜி.சிறிகணேசனும் கலந்து கொள்வர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரவேலு கண்மணியம்மா
### (பொலிஸ் அம்மா)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், சுதந்திரபுரம் கொலனியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கண்மணியம்மா (08.02.2015) அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் (பொலிசர்) மனைவியும், பரமேஸ்வரி, பூபதிராசா, தவராசா, ராணி, வனிதா, பாமா, காலஞ்சென்றவர்களான சந்திரா, சித்திரா, திருக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும், கந்தையா ரதிதேவி, கணபதிப்பிள்ளை, விமலராணி, குமாரசுவாமி, சிறிதரன், வேலாயுதபிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும், பாஸ்கரன் (ஆசிரியர்-கிளிநொச்சி), லதா (லண்டன்), சுதா (லண்டன்), நித்தியகலா (ஆசிரியர்-கிளிநொச்சி), சிவா (சுவிஸ்), நேசன் (லண்டன்), வாணி (கனடா), வதனி (இந்தியா), ஜெகன் (அமெரிக்கா), பிரியா, ஜீனோ, சுரேஸ் (லண்டன்), கவிதா (ஜேர்மனி), நித்தியா (லண்டன்), றமேஸ் (பிரான்ஸ்), நந்தினி (அமெரிக்கா), அனுசா (சுவிஸ்), சோபா (லண்டன்), சோபி, யசோ (மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக் கழகம்), கஜன் (லண்டன்), பாபு (இந்தியா), தீபா,தீபன், அனோஜ், சுயன் மற்றும் காலஞ்சென்றவர்களான ஜீவா, கஸ்தூரி, கேசவன், சுதன் ஆகியோரின் அம்மம்மாவும், தாரந்தன், ஜுது, தாருசன், சென்சியா, செனிசியா, குமரன் (லண்டன்), நிதர்சன் (லண்டன்), பிரவண்யா, ஆதி, கனி, சீமான், தனா, பாரதி, வாரணன், சுபோ, பவஜி (கனடா), கௌதம், பவித்திரன், அட்சயா (சுவிஸ்), நிவேதா, கதிரசன், கஜீவன், கவி, கலை (அமெரிக்கா), அருண்ஜா, குமரன், அருண், சுஜன், சுஜீபன், துவாரகன் (லண்டன்), ஜுதி, மகிசா, சுவே (இந்தியா), பிரணவன், அகல்யன், தியா (ஜேர்மனி), தியானி, திவானி, ஆரணி (லண்டன்), டிலானி, டானிஜா (லண்டன்), யட்சனா (பிரான்ஸ்), ஆரபி (அமெரிக்கா) தியா, தணிகா (சுவிஸ்), அஞ்சனா, அஸ்விந் (லண்டன்), கவி, தர்ணிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சுதந்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(51355) (30)

தகவல்:
மகன்-பூபதிராசா



### திருமதி தங்கரத்தினம் கந்தையா

சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கரம்பைக் குறிச்சி வரணியை வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் கந்தையா நேற்று (09.02.2015) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னக்குட்டி கந்தையாவின் அன்பு மனைவியும், சிவபாதம் (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் ஆசிரியர் கலாசாலை-பலாலி-UK), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகத்தர்-கனடா), காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் இரஞ்சினிதேவி (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்-கனடா), கலாநிதி (கனடா), பரமேஸ்வரி (ஆசிரியர்-கனடா), பரமேஸ்வரன் (கனடா), தயாபரன் (கனடா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சர்வேஸ்வரி, இராமநாதன், ஜெயலட்சுமி, மனோகரன், சோதிலிங்கம், முத்துக்குமாரசாமி, கௌரி, சுமதி, தர்மினி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான யோகரத்தினம், இராசரத்தினம் மற்றும் தவமணி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவபாக்கியம், செல்வரத்தினம் மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:0014167921789
+16479293568

தகவல்: Dr.M. ஷாமினி (பேர்த்தி)
(0778581486)

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

மு. செங்கையாழியன்(பேரமகன்)
(0777110169)

(51676) (10)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்

பிறப்பு: 23.10.1928 இறப்பு: 08.02.2015



இலகடி, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் 08.02.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-தங்கம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இளைப்பாறிய முதலியார் சுப்பிரமணியத்தின் (J.P) அன்பு மனைவியும், அருளானந்தம் (இந்தியா), சோதிமலர் (இலங்கை), ஜீவமலர் (கனடா), இறஞ்சிதமலர் (கனடா), மணிவண்ணன் (சுவிஸ்), கணேசன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற பூபதி, குமாரசாமி, தவரட்ணம் (கனடா), கலைமன்னன் (கனடா), தயாநிதி (இலங்கை), ஜெகபவானி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், மீரா, நஞ்சினி (கனடா), அனிதா (கனடா), அகிலன் (கனடா), வனிதா (லண்டன்), மதனிகா (கனடா), சிவகாண்டீபன் (கனடா), சத்தியேந்திரா (கனடா), கிருஷ்ணமேனன் (கனடா), நிரோஜன் (கனடா), ஜனகன் (கனடா), நீலன் (கனடா), கோகுலன் (டுபாய்), கார்த்திகா (இந்தியா), கௌதமன் (டுபாய்), துவாரகா (சுவிஸ்), நிஷாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், ராகவி (இலங்கை) சபிர்த்தன் (கனடா), சானிகா (கனடா), அம்சினேஷ் (கனடா), ரவின் (லண்டன்), தன்சிகா (லண்டன்), சியானா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக தெருமூடி மடத்துக்கு அருகில் உள்ள கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்:- சுப்பிரமணியம்
குடும்பத்தினர்.
0212261211

இலகடி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

### திருமதி யே.பக்கோவா (கிளி)



யாழ். இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பக்கோவா யேக்கப் 06.02.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி-சுவக்கீனம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுவாமி-மார்கிரேட் தம்பதியரின் அன்பு மருமகளும், யேக்கப்பின் (சிங் கன்) பாசமிகு மனைவியும், யான்சனின் (பிரான்ஸ்) பாசமிகு தாயும், மரியம்மா (கனடா), இராஜேந்திரம் (பிரான்ஸ்), ஆபிரகாம் (கனடா), கீதபொன்கலன் (பிரான்ஸ்), எலிசபெத், மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யாழினியின் (பிரான்ஸ்) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா, சலமோன் மற்றும் புலோமினா, றீறா, மாசில்லா, எலிசபெத் (பிரான்ஸ்), யோசேப் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெறினா (பிரான்ஸ்), யதுஷா (பிரான்ஸ்), ஜிம்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.02.2015) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இளவாலை புனித யூதாததேயு ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை புனித யூதாததேயு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இளவாலை மேற்கு, இளவாலை. தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி மகேந்திரன்



பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி மகேந்திரன் நேற்று (09.02.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மகேந்திரனின் அன்பு மனைவியும் ராதா (மாருதி மில் உரிமையாளர்),உதி (கட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ராணி காலஞ்சென்ற பாபு ஆகியோரின் சிறிய தாயும், சாந்தி, தர்மினி ஆகியோரின் மாமியும், சகிஸ்னா, சுபஸ்திகா, யஸ்மின், தீபிகன் ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2015) செவ்வாய்க் கிழமை பி.ப ஒரு மணியளவில் விளையாட்டரங்க வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### இலட்சுமிப்பிள்ளை வேலாயுதம்



சேகரம் வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப் பிடமாகவும் கொண்ட இலட்சுமிப்பிள்ளை வேலாயுதம் நேற்று (09.02.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராசா மற்றும் பரமேஸ்வரி, இளையராஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி, கொக்குவில். (51623) (10) தகவல்: மகன்

# மஹிந்த சிந்தனை வெற்றிக்கு தொடர்ந்து பணியாற்றுவோம்

## முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறுகின்றார்

கொழும்பு, பெப்.10

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல நாடாளுமன்றத்தில் மாத்திரமல்லாது மக்களோடு மக்களாக இணைந்து ஜனநாயக முறையில் செயலாற்றுவோம் என்று முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐ.ம.சு.கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்கள், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பணியாற்றும் நோக்கில் வாக்களிக்கவில்லை."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முன்னாள் ஜனாதிபதியால் அறிமுகப்படுத்தப்பட்ட மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் நோக்கிலேயே வாக்களித்தனர். ஐ.ம.சு.கூ ஆதரவாளர்களை மீண்டும் பலப்படுத்தி அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க நாம் தொடர்ந்தும் பணியாற்றுவோம்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# கிழக்கு மாகாண சபையில் சமத்துவம் பேண வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சந்திரகாந்தன் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபையை யார் ஆட்சி செய்தாலும் அங்கு சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன். நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினர் அதிகம் வாழும் மாகாணமாகும். அதில் தமிழ் முதலமைச்சராக நான் முன்னர் பதவி வகித்திருந்தேன். அந்த அனுபவத்தின்படி கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிகள் ஆட்சி செய்வதற்குரிய மாகாணம் ஒன்றே"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழரோ அல்லது முஸ்லிமோ ஆட்சி செய்ய முடியும். ஆனால் சமத்துவம் பேணப்படும். முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் ஆட்சிக் காலத்தில் சமத்துவம் பேணப்படவில்லை. அபிவிருத்தி, வேலை வாய்ப்பு என்பவற்றில் பிரச்சினைகள் ஏற்பட்டன."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் மத்திய அரசில் வந்த கூட்டைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்க முடியும். ஆயினும் அது தோல்வியடைந்துள்ளது."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முஸ்லிம்காங்கிரஸ்கிழக்குமாகாண சபை ஆட்சிக்கு இன்று வந்துள்ள முறை சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதும் ஜனநாயக ரீதியானதும்ஆகும். கிழக்குமாகாணசபையை சட்டரீதியான, வலுவான சபையாக மாற்றுவதற்கு எம்மாலான ஒத்துழைப்புகளை வழங்குவோம்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

### கிழக்குக்கு

இந்தியப் பிரதமர் ஒருவர், இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு வருவது இதுவே முதற்தடவையாகும். யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ள நரேந்திர மோடி, வடக்கு மாகாண சபை முதலமைச்சரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். பின்னர் திருகோணமலை மாவட்டத்துக்கும் செல்லவுள்ளார். இதன் போது அங்கும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### ஆயிரம்

வலி.வடக்கில் கழிவு ஒயிலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்காக, வலி.வடக்குப் பிரதேச சபையால், சபை நிதியிலிருந்து நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் குடிதண்ணீர் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதுவரை காலமும் வலி.வடக்குப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நன்னீர் கிணறுகளிலிருந்தே குடிதண்ணீர் பெறப்பட்டது. அதனையே பொதுமக்கள் விநியோகத்துக்கு வலி.வடக்குப் பிரதேச சபை பயன்படுத்தி வந்தது. இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற வடக்கு சுகாதார அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்தில், வலி. வடக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளது என்றும் அதனால் அங்கிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்படியானால், குடிதண்ணீரை எங்கு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் பிரதேச சபையினர் கேள்வி எழுப்பிய போது, நிலாவரையில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர், நிலாவரையிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து தொண்டமனாறு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் ஊடாக குடிதண்ணீர் வழங்க முடியும் என்றும், அதற்கு ஆயிரம் லீற்றருக்கு 72 ரூபா செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, பிரதேச சபை நிதியிலிருந்து அதனைச் செலுத்தி, மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள பிரதேச சபை முடிவெடுத்துள்ளது. (ற–5)

### அரசியல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, க.சுரேஷ்பிரேமச்சந்திரன், ஏ.சுமந்திரன், பொன்.செல்வராஜா ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் அலரிமாளிகைக்குச் சென்று கலந்துரையாடினர். அதன்போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், "மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் முதலில் ஆராயப்பட்டது. குறிப்பாக வலி. வடக்கு மற்றும் சம்பூர் தொடர்பில் பேசப்பட்டது. இந்தப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய சில இடங்களிலும் மீள்குடியமர்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

சம்பூரில் முதலீட்டுச் சபையால் சுவீகரிக்கப்பட்ட காணி தொடர்பில் பேசப்பட்டது. அதற்குப் பிரதமர், முதலீட்டுச் சபையால் அந்தப் பகுதி மக்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்று. நாம், அந்தக் காணியை முதலீட்டுச் சபையிடமிருந்து மீளப் பெற்று பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம். இதே போன்று வலி.வடக்கிலும் நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்."– என்று கூறினார்.

"இந்த விடயங்கள் குறித்து இராணுவத்தினரிடம் அறிக்கை கோரப்பட்டிருப்பதாகவும், அதனைப் பெற்று விரைவில் மீள்குடியமர்வு தொடர்பிலான தீர்வு காணப்படும் என்று பிரதமர் பதிலளித்தார்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேசப்பட்டது. இதன் போது, இதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். நீதியமைச்சால், தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்"– என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ற–5)

### பிரிவினைவாதம்

பாதுகாப்பு அமைச்சின் செயலர் பஸ்நாயக்கா, கண்டி தலதா மாளிகையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வழிபாடுகள் மேற்கொண்டார். இதன் பின்னர் அஸ்கிரிய – மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க தேரர்களையும், ராமங்ன்ன நிக்காயவின் பீடாதிபதியையும் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். அதன்போதே அவரிடம் பீடாதிபதிகள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர், "போர் நடந்த வடக்கு – கிழக்குப் பகுதி மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்." என்று கேட்டுக் கொண்டார்.

"வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பிரிவினைச் செயற்பாடுகள் நாட்டின் அமைதிக்கு ஆபத்தாக உள்ளது" என்று, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வண. உடுகம சிறி புத்தரகித்த தேரர், தெரிவித்துள்ளார்.

"எந்தவொரு கட்டத்திலும், வடக்கு – கிழக்கின் பாதுகாப்பு தொடர்பாக சமரசத்துக்கு இடமளிக்கப்படக் கூடாது" என்றும் அஸ்கிரிய பீடாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அதற்குப் பாதுகாப்புச் செயலர், வடக்கு – கிழக்கில் பாதுகாப்பைக் குறைக்கும் எந்த திட்டமும் இல்லை என்று அஸ்கிரிய பீடாதிபதியிடம், உறுதியளித்துள்ளார். (ற–5)

### சிறை

அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுடன் சில நிமிடங்கள் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று, பொது எதிரணியிலிருந்து, அப்போதைய ஜனாதிபதி மஹிந்தவின் கட்சிக்கு தாவியிருந்தார். பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய இருவருக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது என்று கூறிய திஸ்ஸ, ஆவணம் ஒன்றையும் பகிரங்கப்படுத்தினார்.

அதிலுள்ள கையொப்பங்கள் போலியானவை என்று இனங்காணப்பட்டதை அடுத்து குற்றப்புலனாய்வு பிரிவினர், திஸ்ஸ அத்தநாயக்கவை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அதனையடுத்தே அவரை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (ற–5)

### வீடுகளற்ற

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் பிரதேச செயலக கட்டித்திறப்பு விழாவின் பின்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவர் சங்கப்பிரதிநிதிகளை சந்தித்தார்.

இதன் போது குருநகர் பகுதி மீனவர்கள், மீனவக் குடும்பங்கள் வீட்டுத் திட்டங்களில் உள் வாங்கப்படாமல் வாடகை வீடுகளில் தங்கி இருப்பதால் தமக்கும் அமைச்சால் வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரினர். அதற்கு பதிலளித்த அமைச்சர், "அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் 50 ஆயிரம் வீட்டுத்திட்டங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்குவதைப் போன்று மீனவர்களுக்கும் வழங்க முடியும். எனவே இந்த வீட்டுத்திட்டங்களைப் பெறக்கூடிய பயனாளிகள் காணிகள் வைத்திருப்பதுடன், வீடுகளற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். இது தொடர்பான விவரங்களை அமைச்சிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் வீட்டுத் திட்டத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்"– என்று தெரிவித்தார்.

அத்துடன், குருநகர் பகுதி மீனவர்கள் இழுவைப் படகுப் பாவனையை நிறுத்தி வலிச்சல் வலை மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு உடன்பாடு தெரிவித்துள்ள நிலையில் அதற்கான வலைகள், உபகரணங்களை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் வலி வடக்கில் கீரிமலை தொடக்கம் வளலாய் வரை கரையோரக் கிராமங்கள் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படவில்லை. மக்களின் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்து கொண்டுள்ளது. எனவே இதனை அகற்றி மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாதகல் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியின் இந்தியப்பயணத்தின் போது பேசித் தீர்வு காணப்படும். அதன் பின்னர் அமைச்சு சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்களுக்கு பதிலளித்தார். (ற–14)

### இனப்படுகொலை

வடக்கு மாகாணசபையின் 22 ஆவது அமர்வு இன்று இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் எடுத்துக் கொள்ளப்படுவதற்காக ஏற்கனவே 15 பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளன. நேற்று மாலை நடந்த, வடக்கு மாகாணசபையின் ஆளுங்கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட விசேட தீர்மானத்துக்கு அமைய ஏனைய பிரேரணைகள் யாவும் அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் கடந்த வருடம் சபைக்கு சமர்பிக்கப்பட்ட, தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறிமுறையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள் என்ற மிக முக்கிய பிரேரணை உள்ளிட்ட 3 பிரேரணைகள் பல அமர்வுகளில் எடுக்கப்படாது ஒத்தி வைக்கப்பட்டு வந்தது. கூட்டமைப்பின் தலைமையின் சம்மதத்தின் பேரில் அவை ஒத்திவைக்கப்பட்டிருந்தன. கடந்த ஜனவரி மாத அமர்வில் குறித்த பிரேரணை எடுத்துக் கொள்ளப்படும், அதனை திருத்தங்களுடன் முதலமைச்சரே முன்மொழிவார் என்றும் கடந்த டிசெம்பர் மாத அமர்வில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது. கடந்த ஜனவரி மாத அமர்வில், முதலமைச்சர் அதனை விரைவில் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த பிரேரணை இன்று சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. பிரேரணையை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்மொழியவுள்ளார். இது தொடர்பில் அதற்கு ஆதாரமான நீண்ட உரையை ஆங்கிலத்தில் வழங்கவுள்ளார். இதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 30 பேரும் எழுந்து அ[illegible]தப் பிரேரணையை வழிமொழிவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபை அமர்வில், இலங்கை தொடர்பிலான போர்க் குற்ற விசாரணை அறிக்கை சமர்பிக்கப்படாமல் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், வடக்கு மாகாண சபையில் மிகமுக்கியத்துவம்வாய்ந்த பிரேரணை இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ற–5)

### சுன்னாகம்

வடக்கு மாகாணசபையின் 22 ஆவது அமர்வு இன்று இடம்பெறவுள்ளது. அதையொட்டி மாகா[illegible] சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பு முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும், சுன்னாகம் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளனர். இதையடுத்து, வடக்கு மாகாணசபையின் இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவிருந்த பிரேரணைகளை எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள அமர்வுக்கு ஒத்திவைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. தனித்து இனப்படுகொலை தொடர்பிலான முதலமைச்சரின் அறிக்கையும், வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் அறிக்கையையும் மாத்திரமே எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, வடக்கு மாகாண விவசாய, சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுன்னாகம் பிரதேச கழிவு ஒயில் பிரச்சினையால் இதுவரை ஏற்பட்ட உண்மையான பாதிப்புக்கள், பாதிப்புக்களை இனங்காண மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியுள்ள – வழங்கப்படவுள்ள உதவிகள், மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முழுமையான – விலாவாரியான அறிக்கையை வடக்கு மாகாண சபைக்கு சமர்பிக்கவுள்ளார்.

இதன் பின்னர், இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய 5 மாகாண சபை உறுப்பினர்கள் வரையில் உரையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற–5)

# ஒய்வூதியருக்கு உரிய நிவாரணம் கிடைக்குமா?

## முல்லை மாவட்ட அரச ஓய்வூதிய நலன்புரி சங்கத்தினர் ஜனாதிபதிக்கு மனு

வவுனியா, பெப்.10

ஓய்வூதியர்களுக்கு 100 நாள் வேலைத்திட்டத்தில் உரிய நிவாரணம் கிடைக்கப் பெறாமை குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச ஓய்வூதிய நலன்புரி சங்கத்தினர் ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

100 நாள் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலைகளைக் குறைத்து, அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கி நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வரவு – செலவுத் திட்டம் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்படும் என்றும் இடைக்கால வரவு– செலவுத்திட்டத்தினூடாக அரச ஊழியர்களுக்கு வழங்குவதாகக் கூறிய 10 ஆயிரம் ரூபாவில் முதலில் 5 ஆயிரம் ரூபா பெப்ரவரி மாதத்தில் வழங்கப்படும் என்றும் ஓய்வூதியர்களுக்கு 3500 ரூபா வழங்கப்படும் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந் தன.

வயது மூப்பால் நோய் வாய்ப்பட்டு மருத்துவச் செலவுகளையும், விலைவாசிகளையும் சமாளிக்க முடியாமல் இருந்த நாம் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தோம்.

ஆனால் வெளியாகிய வரவு செலவுத்திட்டத்தில் ஆயிரம் ரூபா மட்டுமே அதுவும் ஏப்ரல் மாதம் முதல் தான் வழங்கப்படும் என்ற செய்தி ஓய்ந்த உள்ளங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்கியது. சேவைக்காலத்தில் ஓயாது உழைத்து கனினிகள் மற்றும் வசதிகள் இல்லாத நிலையில் அரச பணிகளைத் திறம்படச் செய்து முடித்தவர்கள் நாங்கள். பெற்றவர்களையும் சிரேஷ்ட பிரஜைகளையும் மகிழ்ச்சியாக வைத்திருப்போம் என்று கூறிய தாங்கள் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கிய நிலையில் உழைத்து ஓய்ந்த ஓய்வூதியர்களுக்கு ரூபா ஆயிரம் மட்டும் வழங்குவது தங்களுக்குரிய எண்ணத்துக்கும் நல்லாட்சிக்கான உதயத்துக்கும் ஏற்புடையதாக இல்லை.

இது தொடர்பாக எமது செயற்குழுக் கூட்டத்துக்கு அமைவாக இந்த மனுவைத் தங்கள் கவனத்துக்கு அனுப்பியுள்ளோம். தயவு செய்து ஓய்வூதியர்களின் உணர்வுகளை மதித்து 100 நாள் வேலைத் திட்டத்தில் ஓய்வூதியர்களையும் உள்ளடக்கி ஆயிரம் ரூபாவை 3500 ரூபாவாக உயர்த்தி 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ–402)

## வடகடல் நிறுவன தலைவராக பரமேஸ்வரன்



காரைநகர், பெப்.10

வடகடல் நிறுவனத் தலைவராக தியாகராசா பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள வடகடல் நிறுவனத்தின் தலைவராகக் கடந்த வியாழக்கிழமை அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்னிலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட தியாகராசா பரமேஸ்வரன் முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ–250)



யாழ். குடாநாட்டில் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் உண்மை விதை வெங்காய உற்பத்தியைப் பரீட்சார்த்தமாக மேற்கொண்டமை பெரும் வெற்றியளித்துள்ளது. திருநெல்வேலியில் உள்ள சங்கத்தின் உற்பத்தி வளாகத்தில் இந்த உண்மை விதை வெங்காயப் பயிர்களை விதை உற்பத்திப் பண்ணை முகாமையாளர் எஸ்.ரஜீவன் பார்வையிடுகிறார். (வ–17)

# கமக்காரர் ஓய்வூதியம் குறித்த அறிவுறுத்தல்

வவுனியா, பெப்.10

கமத்தொழில் மற்றும் கம நலக் காப்புறுதிச் சபையால் நடைமுறைப்படுத்தும் கமக்காரர் ஓய்வுதியத்திட்டம் தொடர்பாக வவுனியாவில் உள்ள கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் பு.பூரணசந்திரன் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அரச அறிவித்தல் மூலம் நடைமுறைக்கு வர இருக்கும் கமக்காரர் ஓய்வூதிய சமூக நலன்புரித் திட்டத்தில் கமக்காரர்களை இணைத்துக்கொள்ளும் வேலைத் திட்டத்தில் ஏற்கனவே கடந்த காலங்களில் இந்தத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்ற கமக்காரர்களை உள்வாங்கும் நடவடிக்கைக்காக தற்போது ஓய்வூதி யம் பெறுவோர் தவிர 59 வயதுக்குக் குறைந்த அங்கத்தவர்கள் தாம் முழுமையான கழிவுத்திட்டத்தில் இணைந்திருந்தால்– அதற்குரிய பற்றுச் சீட்டு, கழிவுச்சான்றிதழின் போட்டோ பிரதியும் அல்லது தவணைப் பணம் செலுத்தும் முறையில் இணைத்திருந்தால் தவணைப்பண புத்தகப் போட்டோபிரதி, அடையாள அட்டை போட்டோ பிரதியுடன் தமது தொலைபேசி இலக்கங்களை வழங்கி, தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தில் அதற்குரிய படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை ஒப்படைக்க வேண்டும். அத்துடன் உரமானிய காப்புறுதித் திட்டத்தில் அங்கத்துவம் பெற்று பெருமழை காரணமாக அழிவுகளை எதிர்கொண்ட கமக்காரர்கள் தமது விவரங்களுடன் நட்டஈட்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தமது பகுதி கமநல சேவை நிலையத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ–402)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினரும் வடமாகாண சபையின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரும் இளைஞர் விவகாரப் பொறுப்பாளருமாகிய ஆனேல்ட் கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஒன்றிய காரியாலயத்தில் ஒன்றிய நிர்வாக சபை கூட்டத்துக்கு வருகை தந்து வழங்கினர். (வ)

# தாக்குதல்களில் காயமடைந்த இரு பெண்கள்

தென்மராட்சி, பெப்.10

தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த 2 பெண்களும் ஒரு சிறுவனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

அயலவர்களால் தாக்கப்பட்ட கொடிகாமம் மடத்தடி வீதியைச் சேர்ந்த புலேந்திரன் சசிகலா (வயது – 37) வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த மயூரன் மிதுஷன் (வயது – 13) கணவனால் தாக்கப்பட்ட உசன் மிருசுவிலைச் சேர்ந்த மனோராஜா பத்மராணி (வயது – 54) ஆகியோரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ–9)

# மாணிக்க கல் அகழ்ந்த 24 பேர் கைது

கொழும்பு, பெப்.10

யால தேசிய வனப்பகுதியில் 4 ஆவது வலயத்தில் அனுமதி யின்றி மாணிக்க கல் அகழ்ந்த 24 பேரை வனவிலங்கு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

அவர்கள் வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், தலா 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பதுளை, மாலிகாவில மற்றும் எஹெலிய கொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

புத்தல – வல்லிஅம்மார மற்றும் கதிர்காமம் வனவள பாதுகாப்பு காரியாலய அதிகாரிகளால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. (வ)





# சீர்செய்யப்படாத நிலையில் எச்சரிக்கை பலகைக் கம்பம்

கொடிகாமம், பெப்.9

விபத்து இடம்பெற்று இரண்டு மாத காலமாகியும் சங்கத்தானை ரயில் கடவை எச்சரிக்கைப் பலகைக் கம்பம் சீர் செய்யப்படவில்லை.

குறித்த ரயில் நிலையத்துக்கு மிக அண்மையில் உள்ள ரயில் கடவையிலேயே இரு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் இந்தக் கம்பம் [illegible] வீழ்த்தப்பட்டது. எச்சரிக்கை வழங்கும் [illegible] ரயில்வே திணைக்களம் கவனத்தில் கொள்ளா[illegible] மக்கள் விசனமடைகின்றனர். கடந்த சில [illegible] அந்தப் பகுதிகளிலுள்ள ரயில் கடவைகளில் [illegible] இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ([illegible])





# ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 38ஆவது நினைவு தினம்

## நேற்று குருநகரில் அனுஷ்டிப்பு.

யாழ்ப்பாணம், பெப். 10
சட்டமாமேதையும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 38ஆவது நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் இணைந்து, யாழ். குருநகர் பகுதியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த அஞ்சலி நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், இ.ஆர்னோல்ட் மற்றும் பரம்சோதி உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (த-106)

# தேர்தலில் போட்டியிட போவதில்லை

## அன்ரனி ஜெகநாதன், கனகசுந்தரசுவாமி தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 10
கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் அன்ரனி ஜெகநா தன், வீ.கனகசுந்தரசுவாமி ஆகியோர் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இரண்டு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு கடந்த 2011 ஆம் ஆண்டு கோரப்பட்டது. அப்போது கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அன்ரனி ஜெகநாதன் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தார். இதே போன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு கூட்டமைப்பின் சார்பில் வீ.கனகசுந்தரசுவாமி வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றது. இதன்போது அன்ரனி ஜெகநாதன் மற்றும் வீ.கனகசுந்தசுவாமி ஆகியோர் போட்டியிட்டிருந்தனர். தேர்தலில் வெற்றி பெற்று தற்போது மாகாணசபை உறுப்பினர்களாகவுள்ளனர்.

இந்த நிலையில், ஒத்திவைக்கப்பட்ட பிரதேச சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தேர்தல்கள் ஆணையாளர்,மேற்படிஇருமாகாண சபை உறுப்பினர்களிடமும், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று தெரிவித்திருந்தார். இதற்கு குறித்த இரு உறுப்பினர்களும், தாங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தேர்தல்கள் திணைக்களத்துக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். (த-5)

# கிளிநொச்சி மாணவி மட்டக்களப்பில் சாவு

மட்டக்களப்பு, பெப். 10
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் மூன்றாம் வருட மாணவி ஒருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவர் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி கே.பிரேம்குமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மல்லாவி யோகபுரத்தைச் சேர்ந்த சி.வாமிலா (வயது 24) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரிக்குப் பின்புறமாகவுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்வி பயின்று வந்த இந்த மாணவி இரு தினங்களுக்கு முன்னர் வயிற்றுவலி மற்றும் க[illegible]ச்சல் காரணமாக மட்டக்ளப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

# வடக்குப் பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழி உரிமை மீறல் அதிகம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.பெப்.10
வடக்கு மாகாணத்தில் பிரதான பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறையினால் தமிழ் மொழி உரிமை மீறல்கள் அதிகளவில் இடம்பெறுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் பிரதான பொலிஸ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட மொழி உரிமை மீறல் தொடர்பான ஆய்வின்போது அதிகளவான பொலிஸ் நிலையங்களில் ஆளணிப் பற்றாக்குறை உள்ளது.

அத்துடன் தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஆளணி வெற்றிடம் அதிகளவில் காணப்படுகின்றது என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேலும் கூறியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம், பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் தாம் மேலதிகாரிகளுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் பிரதானமாகத் தமிழ் மொழி தெரிந்தவர்களே அதிகளவில் உள்ளனர். தாம் பேசும் மொழியில் முறைப்பாடுகளை வழங்குவதற்கு உரிமை உள்ள நிலையில் முறைப்பாடுகளைப் பதிவு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் சிங்கள மொழியில் சரளமாகவும், தமிழ் மொழியில் அரைகுறையில் பேசக் கூடியவர்களாகவும் இருப்பதால் முறைப்பாடு செய்பவர் தமிழ் மொழியில் ஒன்றைச் சொல்ல பொலிஸார் அதை வேறு கருத்துப்படப் பதிவு செய்கின்றனர்.

இது தொடர்பில் ஏற்கனவே அரச மொழிகள் ஆணைக்குழுவினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தபோது, தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

எனினும் அவர்களும் வீதிப்போக்குவரத்து மற்றும் வெளிக் களப் பணிகளுக்காகக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனால் ஒவ்வொரு [illegible]லிஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் கடமையில் இல்லாத பட்சத்தில் பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்யப் பொலிஸ் நிலையங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்படாவிட்டால் அது தொடர்பிலான முறைப்பாடுகளை மொழிகள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் முறையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-14)

# இரும்பினால் பெண்ணை தாக்கியவர் கைதானார்

தென்மராட்சி, பெப். 10
கொடிகாமம் மடத்தடி வீதியைச் சேர்ந்த பெண்ணொருவரை இரும்புக் கம்பியால் அடித்துக் காயப்படுத்திய மீசாலை வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

தாக்குதலுக்கு இலக்கான இந்தப் பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கடந்த சனிக்கிழமை சம்பவம் குறித்து முறைப்பாடு செய்திருந்தார். பின்னர் அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதலுக்கு இலக்கான பெண் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து கொடிகாமம் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கைது செய்தனர். அவரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)

# மன்னாரில் பெரும் காடுகள் வெட்டி அழிப்பு

## உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பரப்புக்கடந்தான் மக்கள் கோரிக்கை

மன்னார், பெப். 10
மன்னார் மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்தை அண்டிய எம்/36 கிராம சேவையாளர் பிரிவில் அண்மைக் காலமாகப் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.



இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1987ஆம் ஆண்டுகளில் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் அந்தக் காடு உள்ள பகுதியில் மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன.

பின்னர் இடப்பெயர்வுகள், போர் ஆகியவை காரணமாக மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். எனவே அது தற்போது காடாக மாறியுள்ளது. ஆனால் அங்கு மக்களுக்கான குடியேற்றங்கள் உண்டு என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன.

1987, 1988 களில் மன்னார் மாவட்டக் காணிப் பதிவாளராக இருந்த அதிகாரி ஒருவர் அப்பகுதியில் மக்கள் குடி மனைகள் இருந்தன என்பதற்குச் சான்றாக கையெழுத்திட்ட வீட்டுத் திட்டப் படிவம் மக்களிடம் உள்ளதாகவும், அதை வைத்துக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும் பரப்புக்கடந்தான் கிராம மக்கள் கூறினர்.

அத்தோடு பெரிய பண்ணை ஒன்றை உருவாக்குவதற்காகவே இந்தக் காடு அழிக்கப்படுவதாகவும், அதிகாரிகளை இதனை உடன் கவனத்தில் எடுக்குமாறும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் நேரடியாக குறித்த பகுதிக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (த-21)

## பொருள்கள் விலை குறைப்பு

வரணி, பெப். 10
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பாவனையாளர் களின் நலன் கருதி நுகர்ச்சிப் பொருள்கள் சிலவற்றின் விலை கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து குறைக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மல்லி 1கிலோ ரூபா 310, ரின்மீன் வகைகள் ரூபா 260, 190, பயறு 1கிலோ ரூபா 280, றவ்வை 1கிலோ ரூபா 110, நெஸ்பிறே ரூபா 325, தீட்டல்அரிசிரூபா65, நாட்டரிசி வகைகள் 1கிலோ ரூபா 75 என வும் குறைக்கப்பட்டுள்ளது. (த–122)



## 25 ஆண்டுகளின் பின்னரும் மாறாத முகவரி

வரணி, பெப். 10
வரணிப் பிரதேசத்தில் வரணி வடக்கு கிராம சேவையாளர் பிரிவு பிரிக்கப்பட்டு அதன் ஒரு பிரிவு மாசேரி எனப் பெயரிட்டு அதற்கு ஜே/ 340 என வழங்கப்பட்டு 25 வருடங்களுக்கு மேல் ஆகியும் சில நிர்வாக அமைப்புக்கள் இன்று வரை மாசேரி கிராமத்தில் வதியும் மக்க ளின் பெயருக்கு வரணி வடக்கு என்றே விலாசமிட்டு கடிதங்கள் அனுப்புவதாகக் கூறப்படுகின்றது.
அண்மையில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தனது வருடாந்தப் பொதுக் கூட்டம் தொடர்பில் அங்கத்தவர் களுக்கு அனுப்பிய கடிதங்கள் மாசேரி என குறிப்பிடப்படாமல் வரணி வடக்கு என்றே அனுப்பப்பட் டிருந்தன.
கடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக் காளர் அட்டைகள் கூட குறித்த பிர தேச மக்களுக்கு வரணி வடக்கு என்றே யாழ். தேர்தல் திணைக்களத் தினால் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (த–122)

# “பிள்ளையை பார்க்க விடு”

### காணாமற்போனோரின் உறவுகள் யாழில் நேற்றுக் கண்ணீர்க் கதறல்



யாழ்ப்பாணம், பெப் 10
காணாமற்போன தமது உறவுகளை உடன் கண்டுபிடிக்குமாறு கோரி யும், சிறைகளில் வாடும் உறவுகளை உடன்விடுவிக்குமாறு கேட்டும் நேற்று யாழ்.நகரில் நடந்த போராட்டத்தில் ஓலமிட்டுக் கதறினர் உறவினர்கள். இந்தக் கண்ணீர் கதறலால் நேற்றுப் பெரும் சோகமயமானது யாழ்.நக ரப் பகுதி.
யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன் பாக முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்த இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற் றனர். அரசே காணாமல்போனோரை கண்டுபிடித்துத் தா, அரசியல் கைதி களை விடுதலைசெய், இராணு வமே வெளியேறு, உள்நாட்டு விசாரணை எங்களுக்கு வேண் டாம்! சர்வதேச விசாரணை தேவை எனக் கோஷங்களை எழுப்பிய வாறும், பதாகைகளைத் தாங்கிய வாறும் யாழ். மாவட்ட செயலகம் வரை இவர்கள் பேரணியாகச் சென்ற னர். மாவட்ட செயலகத்தின் முன் னால் நின்று புதிய அரசே எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தா, எங் கள் பிள்ளைகள் தங்கள் தந்தையின் முகத்தைப் பார்க்க விடு எனக் கண் ணீர் விட்டுக் கதறி அழுதனர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் தங்களின் பிள்ளைகளைத் தேடி தள்ளாடும் வயதான தாய்மாரும், தந்தையைத் தேடிச்சிறு குழந்தைகளும் வெயிலை யும் பொருட்படுத்தாமல் நீண்ட தூரம் பேரணியாகச் சென்று பங்கேற் றனர். பின்னர் ஆர்ப்பாட்டக்காரர் கள் மாவட்ட செயலகக் கணக்காளரி டம் தங்கள் மனுவைக் கையளித்த னர். மனுவைப்பெற்றுக்கொண்ட அவர் அரச அதிபர் ஊடாக ஜனாதி பதிக்கு அனுப்பி வைப்பதாகத் தெரி வித்தார்.
இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயக மூர்த்தி, வடக்கு மாகாண சபை உறுப் பினர்களான சிவாஜி லிங்கம், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் ஆகி யோ ரும் பங்கேற்றிருந்தனர். (த–7–106)









## போதிய ஆளணி வளங்கள் இருந்தால் வெளிநோயாளர் பிரிவு நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், பெப் 10
தேவையானளவு ஆளணி, சுற்ற றிக்கை வந்தால் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்களில் வைத் தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு இயங்குவதை 2 மணித்தி யாலங்களிலிருந்து மேலும் அதி கரிக்க முடியும் என்று பணிப் பாளர்கள் தெரிவித்துள்ளனர்.
குறித்த நாள்களில் வெளிநோயா ளர் பிரிவில் கடமையாற்ற மருத் துவர்கள் தயாராக உள்ளபோதிலும் மருந்துக் கலவையாளர்கள், சிற் றூழியர்கள் ஆளணி பற்றாக்குறை இருப்பதால் இந்த நாள்களில் 2 மணித்தியாலங்கள் மட்டும் வெளி நோயாளர் பிரிவு இயங்குகிறது. போதிய மருந்துக் கலவையாளர் கள் நியமிக்கப்பட்டால் அல்லது ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் கடமையாற்றுவதற்கு அந்த உத்தியோகத்தர்கள், ஊழியர் களுக்கு விடுமுறை வேதனம் வழங் கச் சுகாதார அமைச்சு முன்வந்தால் வெளிநோயாளர் பிரிவை தினமும் 12 மணிநேரம் இயங்க வைக்கமுடி யும்.
அண்மையில் நிதியமைச்சரினால் வெளியிடப்பட்ட இடைக்கால வரவு –செலவுத் திட்ட உரையில் 24 மணிநேரமும் மருத்துவமனை யின் வெளிநோயாளர் பிரிவுகள் திறந்திருக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுமென அறிவித்திருந் தார்.
அதன் பின்னர் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் முற் பகல் 10 மணியுடன் மருத்துவ மனைகளின் வெளிநோயாளர் பிரிவு கள் மூடப்படுவது குறித்து நோயா ளர்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பாக மருத்துவ மனை களின் நிர்வாகங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்சொல் லப்பட்ட தகவல்களைத் தெரிவித் தனர்.
ஞாயிறு மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் கடமைக்கு வரும் மருத்துவர்கள் தமது கடமை நேர மான ஆறு மணித்தியாலங்கள் வரை கடமையாற்றத் தயாராக இருக்கின்றபோதிலும் மருந்துக் கலவையாளர்கள், சிற்றூழியர்களுக்கு வாராந்த விடுமுறை வழங்குவதால் 10 மணியுடன் மருந்தகங்கள் மூடப் படுவதாகவும் தெரிவித்தனர்.
இது குறித்து யாழ்.பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத் துவர் ஆ.கேதீஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,
ஆதார, பிரதேச வைத்தியசாலை களில் குறித்த நாள்களில் 2 மணித் தியாலங்கள் வெளிநோயாளர் பிரிவு இயங்குகிறது. சுகாதார அமைச்சு சுற்றறிக்கையின் படி நாடளாவிய ரீதியில் உள்ள வைத்திய சாலைகள் அனைத்திலும் இந்த முறைப்படியே இயங்குகிறது–என் றார்.

> 2 மணித் தியாலங் களை நீடிப்பதா யின் அது தொடர் பான சுற்றறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சர் விடுக்க வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜாவிடம் கேட்ட போது,
24 மணிநேரமும் வெளிநோயா ளர் பிரிவை இயங்க வைப்பதாயின் அதற்கான மருத்துவர்கள், தாதியர் கள், மருந்தாளர்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். போக்குவ ரத்து, தங்குமிடம் உள்ளிட்ட வசதிக ளும் செய்யப்பட வேண்டும். 2 மணித் தியாலங்களை நீடிப்பதாயின் அது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சர் விடுக்க வேண் டும் என்று தெரிவித்தார். (த–4–9)

# கிண்ணம் வென்றது கரவட்டி ஞானம்ஸ்



கரணவாய், பெப். 10

ஜெனி ஓட்டங்களால் வாண வேடிக்கைகாட்ட நெல்லை பிளாஸா விளையாட்டுக் கழகத்தை 29 ஓட்டங்களால் வீழ்த்தி கழுகுகளின் இவ் வருடத்துக்கான வெற்றிக் கிண்ணத்தைச்சுவீகரித்தது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம். நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

அணிக்கு 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இவ் இறுதி ஆட்டத்தில் நெல்லியடி நெல்லை பிளாஸா விளையாட்டுக் கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் ஜெனியின் தொடர்ச்சியான 6 பந்துகள் எல்லைக் கோடுகளை தாண்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணியின் அதிரடி ஆட்டக் காரர் ஜெனி 6 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 47 ஓட்டங்களையும் துவி 18 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் அருண், ரவிகரண் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் அங்கதன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் 94 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய நெல்லை பிளாஸா விளையாட்டுக் கழகம் ஞானம்ஸ் வீரர்களின் துல்லியமான பந்து வீச்சுகளில் ஓட்டங்களைப் பெற முடியாது திண்டாட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களை மட்டும் பெற்று 29 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அவ் அணி சார்பாக ரஜீவன் 24 ஓட்டங்களையும் அருண் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அனுசாயந்தன், குணதீபன், ஜெனி தலா 2 இலக்குகளையும் துசி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் விளையாட்டு கழக வீரர் ஜெனியும் தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியின் வீரரான உமைசுதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கிக் கௌரவித்தார். (த–108)

## கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், பெப். 10

கரைச்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பெண்களுக்கான உதைபந்தாட்டம், எல்லே, கபடி போன்ற தொடர்களின் இறுதியாட்டங்கள் கடந்த சனிக்கிழமை உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்தி நகர் மகாதேவா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணியின் வீராங்கனை சுஜா அதிரடியாக ஆடி அடுத்தடுத்து ஹற்றிக் கோல் மழை பொழிந்தார். விதுனா தன் பங்குக்கு ஒரு கோலை அடிக்க உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணி ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

எல்லே தொடரின் இறுதியாட்டத்தில் ஜெயந்தி நகர் மகாதேவா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோணாவில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஜெயந்திநகர் மகாதேவா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கபடித் தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோணாவில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணி 55:13 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

(த–23–ரி)



தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு பெண்களுக்கான மரதன் ஓட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தை எஸ். சானந்தியா, இரண்டாம் இடத்தை ம.டிலக்சியா, மூன்றாம் இடத்தை வா.கஜானா ஆகியோர் தமதாக்கினர்.

(த–108–ரி)

# கிண்ணங்களை சுவீகரித்தன இமையாணன், டைமன்ஸ்





யாழ்ப்பாணம், பெப். 10

கரவெட்டி பிரதேச இளைஞர் கழங்களுக்கு இடையே நடைபெற்ற எல்லே ஆட்டத்தில் ஆண்கள் பிரிவில் இமையாணன் இளைஞர் கழக அணியும், பெண்கள்பிரிவில் டைமன்ஸ் இளைஞர்கழக அணியியும் வெற்றி பெற்று கிண்ணங்களைத்தமதாக்கின.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் கழக அணியை எதிர்த்து மனோகரா இளைஞர் கழக அணி மோதியது. அதில் இமையாணன் இளைஞர் கழக அணி 11:9 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் டைமன்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து மனோகரா இளைஞர் கழக அணிமோதியது. அதில் இரண்டு அணியினரும் தலா 1 புள்ளியை பெற்றனர். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இறுதியில் வெற்றி தோல்வி காண்பதற்காக மேலதிகமாக 10 பந்துகள் வழங்கப்பட்டன. அதிலும் இரண்டு அணியினரும் எதுவித புள்ளி களையும் பெறவில்லை. இதனால் இறுதியாக நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றி.தோல்வி வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டு டைமன்ஸ் இளைஞர் கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ற–23–ரி)

**SLAS (Lim) விசேட கருத்தரங்கு**

★ வியாழன் (12/2), வெள்ளி (13/2) காலை 9.30 - 3.30 வரை

★ யாழ். கொழும்பு முன்னணி விரிவுரையாளர்களினால் 4 வினாத்தாள்களுக்கும் பரீட்சையை மைய மாகக்கொண்ட எதிர்பார்க்கை வினாக்களும் விளக்க மும் வழங்கப்படும்.

T.P: 0766883394,0113150268

கட்டணம் இரு நாள்களுக்கும் 1500/=

தமிழ் சங்க வளாக மண்டபம்

(வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில்)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months

(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 11-02-2015
Batch 2 : 12-02-2015
Batch 3 : 14-02-2015
Batch 4 : 15-02-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
0777585913, 0777222422, 071429935

அலுவலகர்களுக்கு/உத்தியோகத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 12/02/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.